'யாஅம் இரப்பவை'



பேராசிரியர்

கா. பொ. இரத்தினம்

மா. முத்து

"யாஅம் இரப்பவை"

"THIS BOOK IS PUBLISHED
WITH THE FINANCIAL
ASSISTANCE OF
TIRUMALA TIRUPATI
DEVASTHANAMS
UNDER THEIR SCHEME
AID TO PUBLISH RELIGIOUS
BOOKS".

பேராசிரியர் கர. பொ. இரத்தினம்

திருவேங்கடமாலை*

''திருவுறை மார்பா! அன்பர் திருவுற அருளும் சீரும்
மருளினைப் போக்கும் மாண்பும் மலரடிச் சிறப்பும் ஓர்ந்து
வருத்திடும் வினைகள் நீங்கும் வழியினை அறிந்து போற்றித்
திருவுறு வேங்க டத்தைத் தேடிவந் தடைந்தேன் காப்பாய்!''

திருவேற்காட்டுத் தெய்வம்*

''தெய்வங்கள் பலவெனினும் தெய்வமெலாம்
ஒன்றாகித் திகழும் தெய்வம்
மெய்யுணர்ந்தோர்க் கனைத்திலுமே
மேவிநிற்கும் ஆற்றலாகி மிளிருந் தெய்வம்
எய்துகின்ற விஞ்ஞான ஏற்றமுறு
முடிபுகளுக்கு எட்டாத் தெய்வம்
உய்யவெண்ணி வந்தணைவோர்
ஓங்குவிக்கும் கருமாரி ஒப்பில் தெய்வம்.''

முருகா! முதல்வா!*

''அனைத்தும் ஓயா தியக்குகின்ற
அளவில் ஆற்றல் ஒன்றுளது
நினைத்துப் பார்ப்போர் அவ்வாற்றல்
நீயே எனநன் குணர்ந்திடலாம்
முனைப்பு நீங்கி நுண்ணுர்வால்
முருகா என்போர் அறிவார்கள்.
வினைகள் தமக்கே உணவாகி
வெறிகொள் வோர்கள் அறிவாரோ?''

---

* நூலாசிரியர் இயற்றிய நூல்கள்.

"யாஅம் இரப்பவை"

''திருக்குறள் செல்வர்'', ''தமிழ்ச் சான்றோர்''
பேராசிரியர் கா. பொ. இரத்தினம்
பி.ஏ. (ஆனர்சு) இலண்டன்
எம்.ஏ., பி.ஓ.எல்., (சென்னை)
(பாராளுமன்ற மு.நா. உறுப்பினர், இலங்கை)

விற்பனை உரிமை
காந்தளகம்,
சென்னை—யாழ்ப்பாணம்.

முதற்பதிப்பு : சித்திரை, 1987

பேராசிரியர் **கா. பொ. இரத்தினம்**

யாஅம் இரப்பவை

சைவ சமயக் கட்டுரைகள்

உரிமை ஆசிரியருக்கு

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின்
81ஆம் ஆண்டு நிறைவு விழாவில் 16-5-87இல்
வெளியிடப்பட்டது.

விலை உருபா 13-50

தி. ஆ. 2018

விற்பனை உரிமை :
காந்தளகம்
4 முதல் மாடி, ரகிசாகட்டடம்,
834 அண்ணாசாலை, சென்னை-2.
தொலைபேசி 567005
213, காங்கேயன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22156

அச்சகம் : **பாவாணர் அச்சகம், சென்னை-2.**

உள்ளுறை

		பக்கம்
1.	என்னுரை	vi
2.	சிறப்புரை	xi
3.	அணிந்துரை	xiv
4.	யாஅம் இரப்பவை	1
5.	நல்லவண்ணம் வாழலாம்	7
6.	இன்ப அன்பு நெறி	19
7.	முதுமுதல்வன்	30
8.	தம்பிரான் தோழர்	36
9.	திருமுருகாற்றுப்படை	47
10.	தித்திக்கும் திருமுறைகள்	72
11.	அமுதடி அடைந்தவர்	85
12.	பரிபாடலும் கீதையும்	99
13	பாடல் நெறி	104
14.	சந்தேகம் வேண்டாம்	111
15	புலால் மறுத்தல்	116
16.	செந்தமிழுஞ் சிவபெருமானும்	133
17.	நாவலரும் நாமும்	147
18.	அரைக்கண்ணன்	155

என்னுரை

மனிதனுடைய வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும் அடிப்படையான ஒழுக்கநெறிகள் இன்றியமையாதன. இந்நெறிகளைத் தழுவி வாழாத மக்கள் மாக்களாகவே மாறிவிடுவார்கள். இந்த ஒழுக்கநெறிகளை அறநெறிகள் எனலாம். இவையே சமயநெறிகளாகவும் ஆகியுள்ளன. இந்நெறிகளை மூன்று ''அ'' னாக்களுள் அடக்கி விடலாம்.

இந்த மூன்று ''அ''னாக்கள் அன்பு அருள் அறம் என்பனவாகும். உலகத்துள்ள எல்லாப் பெருஞ்சமயங் களும் இவற்றையே தழுவியுள்ளன. எனினும், இவற்றைப் பெருக்கும் வழிவகைகள் சமயந்தோறும் வேறுபடு கின்றன. இதனால், சமயங்களின் கொள்கைகளும் வழிபாட்டுமுறைகளும், அவற்றைக் கைக்கொள்ளுதலும் மாறுபடுகின்றன. உண்மையை எளிதில் உணரும்ஆற்றல் கைவரப்பெற்றவர்கள் இந்த வேற்றுமைகளிடையே ஒற்றுமையை நன்கு காணலாம்.

சமய விழாக்களும் வழிபாட்டுமுறைகளும் மூன்று ''அ''னாக்களுக்கும், பகுத்தறிவுக்கும் இசைந்தனவாக அமையாவிடின் அவற்றால் எவ்வித பயனையும் பெறல் முடியாது. சமுதாய நன்மைக்கு மாறாகத் தீமையையும் அவை பெருக்கும்.

''யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.''

இத்திருமந்திரம் இந்த மூன்று ''அ''னாக்களையும் அடக்கி மிளிர்கின்றது; ஆண்டியும்—அரசனும், ஏழைகளும்—செல்வர்களும். எந்நிலையில் வாழ்பவர்களும் மனம், வாக்கு, காயங்களால் இலகுவிலே செய்யத்தக்கனவற்றை மிகச் சிறப்பாக உரைக்கின்றது. இவற்றைச் செய்யும் கடப்பாடும். கோட்பாடும், நிலைப்பாடும், திறப்பாடும் இல்லாதவர்கள் மனிதப்பிறப்பினராகார்.

சைவசமயம் பழம் பெருஞ் சமயம்; தமிழ் மொழியுடன் இணைந்து பிணைந்து ஓங்கிய சமயம். பண்பாட்டுக்கும் பகுத்தறிவுக்கும் மாறான செயல்களும், கண்மூடிப் பழக்க வழக்கங்களும் அதனை மாசுபடுத்தத் தொடங்கிவிட்டன. உயிர்ப்பலியிடல், தீண்டாமை போற்றுதல், சாதி வேற்றுமை பாராட்டல் முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றை நீக்கிச் சைவசமயத்தைச் சீர்மைப்படுத்தல் இன்றியமையாதது. ஆலயங்களை முறையாக நடத்துதல், அவற்றின் சொத்தைப் பாதுகாத்தல், தமிழில் வழிபாடு செய்தல், தீண்டாமை பாராட்டுதலை ஒழித்தல், சாதிவேற்றுமையை நீக்கல், திருமுறைகளைப் போற்றுதல் முதலிய துறைகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கன. எனினும் போதியன அல்ல.

தேவார திருவாசகங்கள் ஊனையும் உயிரையும் உருக்கும் அருட்பாடல்களாகும். அவை தமிழுக்கும் சைவத்துக்கும் உயர்வழிப்பன; தமிழர்க்கும் சைவர்க்கும் உய்வழிப்பன. இத்தகைய அருட்பாடல்கள் வேறெம் மொழியிலும் வேறெச்சமயத்திலும் இல்லை.

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'' என்று உறுதியளிக்கும் சைவத்தின் மாண்பு ஒப்புயர்வற்றது சோம்பித் திரியாதீர்கள், முயற்சி செய்யுங்கள், எம்பிரான் திருவடியைப் போற்றுங்கள். நீங்கள் செய்த தீவினைகள்

உங்களைத் தீண்டப்பெறா என்று ஊக்கும் சைவத்தின் பெருமையை—வாழ்க்கையோடிசைந்துள்ள முறைமையை நாம் இன்னும் நன்கு உணரவில்லை.

''அவ்வினைக்கு இவ்வினையா மென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது உத்தமக் கூன மன்றோ
கைவினை செய்துஎம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீல கண்டம்.'

இந்தத் தேவாரம் வழிபாட்டினால்—உழைப்பினால்' கர்மத்தை—தீவினைப்பயனை அடையாமல் வாழலாம் என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கின்றது; வழிபாட்டினால்—உழைப்பினால் உயர்வு பெறலாம், உய்தி அடையலாம் என்பதை நிலைநாட்டுகின்றது.

விஞ்ஞானம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தாலும், பகுத்தறிவை முழுஅளவுக்குப் பயன்படுத்தினாலும் உள்ளத்தில் கவலையின்றி என்றும் இன்பமே துன்பம் இல்லை என்று மக்கள் வாழ்தற்கு வழிபாடு இன்றியமை யாதது. இதனை,

''தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்ற லரிது''. என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

''தனக்குவமையில்லானை ஏற்காத கொள்கையுடையோம்'' என்போரும் நிறங்கள், கொடிகள், குறிகள் அடையாளங்கள், படங்கள் முதலியவற்றை அணிதலையும் போற்றுதலையும் யாவரும் அறிவர். இவர்கள் கொள்கைகளை மட்டுமன்றிக் குறிகளையும் ஏற்றுக்

கொண்டனர்; அருவத்தை மட்டுமன்றி உருவத்தையும் ஏற்றுகொண்டனர். எனவே ஞானநிலையை அடையாத மனித உள்ளத்துக்குப் பற்றுதற்கும் போற்றுதற்கும் அருவம் மட்டுமன்றி உருவமும் வேண்டும் என்க,

தமிழர் நாகரிகச் சீர்மையும், தமிழர் பண்பாட்டுச் செம்மையும் திருக்கோயில்களுடன்—தெய்வ வழிபாட்டுடன் இணைந்தே ஓங்கி வந்துள்ளன. தொல்காப்பியர் காலத்தின்முன் தொடங்கி, நாயன்மார் காலத்தைக் கடந்து, இன்றுவரை தனக்குவமையிலான் தாளை அடைதற்குத் தமிழர்கள்—சைவர்கள் முயன்று வருகின்றனர். காலப் போக்குக்கும், மக்களின் சிந்தனைத் தெளிவுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்பப் பல தெய்வ வணக்கம் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய் மறைந்துவிடும். சடங்குகளும் சம்பிரதாயங்களும் குறைந்து மறைந்து திருக்கோயில்களிலே பாடல் நெறியே தலையிடமும் தனியிடமும் பெறும் காலம் விரைவில் வந்துவிடும், இந்நிலைமை வந்துவிட்டால், சைவநெறி எத்தகைய மாசுமறுவும் இன்றி, யாவருடைய போற்றுதலுக்குமுரியதாக, மனக் கவலையை மாற்றி மாசில்லா இன்பத்தை நல்கும் பெரு நெறியாக ஒளிரும். ஒன்றே குலமும் ஒருவனே கடவுளும் எனும் கொள்கை நிலைத்துப் பரந்து மிளிரும்.

மக்கள் யாவர்க்கும் பொருத்தமான, பொதுவான இப்பாடல்நெறி திருஞானசம்பந்தர் கண்டு காட்டிச் சென்ற நெறிதான் என்பதை, நம்பி ஆண்டார் நம்பி ''ஆறதேறுஞ் சடையான் அருண்மேவ அவனியர்க்கு விறதேறுந் தமிழால் வழிகண்டவன்'' எனக்கூறியுளர்.

சமயத்தின் பெயரால் நிலைத்துள்ள கொடுமைகளையும், கண்மூடிப் பழக்கவழக்கங்களையும், பிறழ்வுகளையும், அறியாமையின் விளைவுகளையும், அடக்கி ஒடுக்கி ஆளும்

சூழ்ச்சிகளையும் தகர்ந்தெறிந்து சைவத்தைச் சீர்திருத்தும் முயற்சிகள் நடைபெற்று வந்த பொழுது யானும் எவ்வித எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல் எனது பங் களிப்பைச் செய்தேன். தாவாரம் இல்லை எனும் நூலை ஆயிரத்துத் தொளாயிரத்தைம்பத்தைந்தில் வெளியிட் டேன். இந்நூல் போலிச்சைவர்களுக்கும், வைதிகப்பித்தர் களுக்கும், பகுத்தறிவையிழந்த பாவிகளுக்கும் தலையடி கொடுத்தது, பின்னர் நான் எழுதிய கட்டுரைகளையும் நிகழ்த்திய உரைகளையும் தொகுத்து இப்பொழுது ''யாஅம் இரப்பவை'' எனும் இந்நூலை உருவாக்கி யுள்ளேன்.

இந்நூலுக்குச் சிறப்புரை நல்கிய தமிழ்வளர்ச்சி உயர்நிலைக்குழுவின் தலைவர் மாண்புமிகு டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கும், அணிந்துரை நல்கிய சென்னைப் பல்கலைக்கழக இலக்கியத் துறைப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கும், நூலை அச்சிட்டு உதவிய பாவாணர் அச்சகத்தாருக்கும், விற்பனை உரிமையாளரான காந்தளகத்தாருக்கும், வெயிளிடநிதி உதவிய திருமலை—திருப்பதி தேவத் தானத்தாருக்கும், இந்நிதி உதவியினைப் பெறுதற்கு என்னை ஊக்கி வழிப்படுத்திய பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுக்கும் இந்நூலை 81ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வெளியிட்டு உதவிய சைவ சித்தாந்தப் பெருமன்றத்துக்கும் என் நன்றி உரியது.

சென்னை,
1.5.87

கா. பொ. இரத்தினம்

சிறப்புரை

சிலம்புச் செல்வர் மாண்புமிகு

டாக்டர். ம. பொ. சிவஞானம் அவர்கள்

தலைவர், தமிழ்வளர்ச்சி உயர் மட்டக்குழு.

[தமிழக அரசு]

பேராசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்களை நாற்பதாண்டுக் காலமாக நன்கறிவேன். இலங்கையில் முதன்முதலில் எனக்கு நன்கு அறிமுகமான நண்பர் இவரே.

இப்பெரும் புலவர் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளை இலங்கை நாட்டில் கொண்டாடியதோடு இந்தியத் தமிழ் நாட்டிலும் கொண்டாட முயற்சி எடுத்தார். இவரால் தூண்டப்பட்டு தமிழகத்திலே தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடச் செய்தேன்.

இலங்கையில் இவர் நடத்திய இலக்கிய விழாக்களில் எல்லாம் என்னையும் அழைத்துப் பேசச் செய்து, பெருமைப்படுத்தினார்.

சிலப்பதிகார மாநாடு ஒன்றையும் இலங்கையிலுள்ள புங்குடு தீவில் சிறப்பாகக் கொண்டாடினார்.

இந்தியத் தமிழகத்திலுள்ள புலவர் பெருமக்களையெல்லாம் அடிக்கடி இலங்கைக்கு அழைத்து, இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வந்த

பெருமை இவருக்கு உண்டு. முயன்று கல்வி பயின்று, பி. ஏ. (இலண்டன்) எம். ஏ., பி. ஓ. எல்., (சென்னை) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். ''தமிழ்ச் சான்றோர்'' - என்ற சிறப்புப் பட்டமும் இவருக்கு உண்டு.

இலங்கை நாடாளுமன்றத்திலே தொடர்ந்து பல ஆண்டுக் காலம் அங்கம் பெற்றிருந்தார்.

இப்பெரியவர் ''யாஅம் இரப்பவை'' என்ற தலைப்பில் இந்நூலை இந்தியத் தமிழகத்திலிருந்து வெளியிட்டுள்ளார். அடைக்கலம் புகுந்த இடத்திலும் இவர் தமிழ்த் தொண்டை மறக்கவில்லை.

பல்வேறு காலங்களில் தாம் நிகழ்த்திய உரைகளை யும், ஏடுகளுக்கு எழுதி வழங்கிய கட்டுரைகளையும் தொகுத்து, இந்நூல் வடிவில் வழங்கியுள்ளார். பதினைந்து தலைப்புகளில், தமிழ்மொழி பற்றியும், சைவநெறி பற்றியும் சமுதாய வாழ்வு பற்றியும் பேராசிரியர் இரத்தினம் விளக்கம் தருகிறார்.

ஏற்றத் தாழ்வோடு கூடிய சாதிவேறுபாடுகளை வெறுக்கத் தூண்டுகிறார்; திருக்கோயில்களில் நிகழும் இறைவழிபாட்டிலே தமிழுக்கு முதலிடம் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்; தீண்டாமை ஒழிப்பை உறுதியாக வலியுறுத்துகிறார்; சைவ சமயம் வலிவு பெறவும், வாழ்வு பெறவும் அஃது ஒன்றே வழி என்றும் கூறுகிறார்.

சமுதாய சீர்த்திருத்தத்தில் இவருககுள்ள ஆர்வம் நூலிலுள்ள கட்டுரைதோறும் வெளிப்டுடுகிறது.

சங்க காலந்தொட்டு, பாரதியார் காலம் வரை தோன்றி வந்துள்ள புலவர் பெருமக்களால் படைக்கப்பட்டுள்ள இலக்கியங்களிலிருந்தெல்லாம் சான்றுகளை எடுத்துக்காட்டி, தம் கருத்துக்களுக்கு வலிமை தேடுகிறார்.

இடைக்காலப் புலவர்கள் நிந்தாஸ்துதியாகப் பாடி வைத்துப் போயுள்ள செய்யுள்களையும் இவர் விட்டு வைக்கவில்லை. அவற்றையும் எடுத்துக்காட்டிச் சுவை படப் பொருள் கூறுகிறார். ''அரைக்கண்ணன்'' என்னும் தலைப்பிலுள்ள கட்டுரை அந்தவகைப் பட்டதாகும்.

''நாவலரும் நாமும்'' என்ற தலைப்பில் இலங்கை வானொலியில் இவர் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவு, தமிழின் முழுவடிவமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரிடம் இவருக்குள்ள பெரும்பற்றுக்குச் சான்றாகும்-

பேராசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்கள், இலங்கையில் சிங்களர் ஆதிக்கத்திலுள்ள அரசு, அங்கு ஈழப் பகுதியில் வாழும் தமிழர்களுக்கு இழைத்துவரும் இன்னல்களால் நம் தமிழகத்திடம் அடைக்கலம் புகுந்துள்ளார். இறைவன் இவரது எதிர்காலத்தை ஒளியுடையதாக்குவான் என்று நம்புகிறேன். இவருக்கு மட்டுமன்றி, ஈழத் தமிழர் அனைவருக்கும் நல்ல எதிர் காலம் உண்டு என்று நம்புகிறேன்.

போராசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்களுக்கு எனது பாராட்டு. தமிழின மக்கள் இந்நூலை வாங்கி, ஆசிரியரை மகிழ்விப்பார்களாக!

ம. பொ, சிவஞானம்

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்
தலைவர், தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

சங்கத் தொகை நூல்களின் காலந்தொட்டு ஈழத் தமிழகம் இன்பத் தமிழுக்கு ஆற்றிவரும் தொண்டுகள் ஈர நெஞ்சினராலும்— வீரநெஞ்சினராலும் எளிதில் மறத்தல் இயலாது. ஏன்? எந்நிலையிலும் மறத்தல் இயலாது. வழிவழி ஈழத்தமிழகம் ஈன்றெடுத்து வரும் தமிழ் அறிஞர்களுள் பேராசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்கள் சிறப்பிடம் பெறுகிறார்கள். தலையாய காரணம் அவர்கள் சிறந்த தமிழறிஞராக மட்டுமன்றித் தரம் நிறைந்த அரசியல் அறிஞராகவும் இலங்குவதே யாகும். இலங்கை நாடாளு மன்றத்தில் உறுப்பினராய் விளங்கிய பேராசிரியர் கா. பொ. இரத்தினம் தமிழாளும் மன்றங்கள் எல்லாம் போற்றிப் பாராட்டும் தகுதி யுடையவராயிருத்தல் பெருமகிழ்வுக்கு உரியது.

''யாஅம் இரப்பவை'' என்ற இக்கட்டுரைத் தொகுப்பு பேராசிரியர் கா. பொ. இரத்தினம் தமிழர்க்கு வழங்கும் புதுமலர். இம்மலரில் 'யாஅம் இரப்பவை', 'நல்ல வண்ணம் வாழலாம்', 'இன்ப அன்புநெறி', 'முது முதல்வன்'... முதலிய பதினைந்து இதழ்கள்-சைவமுந் தமிழும் கமழும் இதழ்கள் உள்ளன. ஒன்றோடொன்று வடிவத்தாலும், வண்ணத்தாலும் தொடர்புடையன எனினும், ஒவ்வொன்றின் தனித்தன்மையும், நடைச்சிறப்பும், பொருள் நயமும், புதுமைப் போக்கும் உணர்ந்து உவக்கத் தக்கன.

பொருளையும் பொன்னையும் போகத்தையும் மட்டுமே பெறமுனைந்தால் போட்டியும் பொறாமையும் பூசலுமே தலைதூக்கும். அருளையும் அன்பையும் அறத்தையும் பெறமுயன்றால்-இரந்தால் இவை பொருளையும் பொன்னையும் போகத்தையும் நீதி வழுவா நெறிமுறையில் யாவரும் பெற்று இன்பவாழ்வை-நல்வாழ்வை வாழுதற்கு வழிப்படுத்தும் எனும் பேருண்மையை "யாஅம் இரப்பவை" எனும் பரிபாடற் சொற்றொடரைத் தலைப்பாகக் கொண்டு பேராசிரியர் எடுத்து விளக்கியுளர். இச் சொற்றொடரைக் கொண்ட அடிகள் கூறும் கருத்து அவருடைய உள்ளத்தை ஆட்கொண்டுள்ளது என்பதை இந்நூலுக்கு அவர் "யாஅம் இரப்பவை" எனப் பெயரிட்டிருப்பது நன்கு காட்டுகிறது.

தமிழுக்கும் சைவத்துக்குமுள்ள பிணைப்பையும் இணைப்பையும் பேராசிரியர் எடுத்து விளக்கும் பாங்கு பாராட்டுக்குரியது. "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" எனும் மாணிக்க வாசகர் தம் கூற்றினை நிலைநாட்டுந்திறன் வியப்பினைத் தருகிறது.

பரிபாடற் கருத்துக்களைப் பகவத் கீதையின் கருத்துக்களுடன் ஒப்பிட்டுக் காட்டி இக்கருத்துக்கள் முதலிடைச் சங்கங்களில் தோன்றிய பரிபாடல்களின் கருத்துக்களைத் தழுவியனவாயிருப்பின் இவை கீதைக்கு முன்னையன எனத் தொட்டுக் காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கது.

அழுக்கு மனம் உடையவர்களுடைய ஐயத்தை நீக்குவதற்கும் மறுபிறப்பு, நல்வினை தீவினைப் பயன்கள் முதலியன இல்லை என்று வாதிடுவோருக்கும் கோப்பெருஞ்சோழன் கூறிய அறிவுரையினைப் பேராசிரியர் எடுத்து விளக்குந்திறன் ஈடிணையற்றது. ஒருவருடைய

உடம்பிலிருந்து உயிர்பிரியும் பொழுது அவருடைய உடம்பு தீமை எதுவுங் செய்யாத யாக்கையாகவும், உயிர் பெரும்புகழ் கொண்ட உயிராகவும் போற்றப்படத் தக்கனவாயிருத்தல் வேண்டும் என்பது நம் முன்னோர்தம் குறிக்கோளாகும்.

'வாய்வேதாந்தம்' போல், 'வாயில் கடவுளும் கையில் கத்தியும் போல்', போலி ஆத்மீகத்தை உள்ளத்துள் வைத்துப் பிரசார நாத்திகம் பேசுவது போல் (இப்போது அதுவும் நடுங்கி, அடங்கி, ஒடுங்கி விட்டது) இப்போது புத்தகப் பொதுவுடைமை பேசுவது ''கோலம்'' ஆகி வருகிறது.

இத்தகைய சூழ்நிலை தமிழகத்தில் சூழும் போது பேராசிரியர் கா. பொ. இரத்தினம் போன்றார் தமிழ் இலக்கியச் சுவையையும் சைவத்தின் சிறப்பியல்பையும் பயனுறு வகையில் பரப்பும் பணியைத் தொடர்வது போற்றுதற்குரியது. தமிழாசிரியர்கள்-தமிழ் மாணவர் கள்-தமிழறிஞர்கள் அனைவரும் இப்பாதையைப் பின் பற்றுவதே தமிழுக்குப் பாதுகாப்பு.

பேராசிரியர் அவர்களின் பணியும் புகழும் நாளும் சிறப்பதாக!

ந.சஞ்சீவி.

1

யாஅும் இரப்பவை

''அப்பனே! முருகா! சண்முகா! என் மகன் இந்த முறை பரீட்சையிற் சித்தியடைய அருள் புரிவாய். உனக்கு மாவிளக்கு எரிப்பேன்'' என்று ஒரு தாய் முருகனை வேண்டுகிறாள்.

''தாயே, ஈசுவரி என் மகளுக்கு ஒரு நல்ல நாயகன் கிடைக்க அருள் செய்வாய். அவளுடைய திருமணம் நிறை வேறுயவுடன் நான் உனக்குப் பெரியதொரு அபிசேகம் செய்விப்பேன்......'' இது வயது வந்த மகளை வைத்து ஏங்கிக்கொண்டிருக்கும் வேறொரு தாயின் வேண்டுகோள்.

''என் வயிரவக் கடவுளே; பெருமானே! இன்று களவெடுக்கும் பொழுது நான் பிடிபடாமல் தப்பவேண்டும். எனக்கு நல்லபொருள் கிடைக்க வேண்டும். உனக்கு ஒரு மடை போடுவேன்.'' இஃது ஒரு கள்வனின் விண்ணப்பம்.

''அப்பனே! சிவா! சூதாட்டத்திலே இன்று நான் வெல்லவேண்டும். உன்னை நம்பியே இன்று போகிறேன். இன்றைக்கு நான் வென்றால் வெற்றிப் பணத்தில் அரை வாசிக்கு உனக்குப் பூசை செய்வேன்'' என்று சூதாடச் செல்வோன் இரக்கிறான்.

---

* இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வெளியீடான இந்து தர்மம் 1959-1960 இதழில் வெளியிடப் பட்டது.

ஓம் விநாயகா! விக்கினேசுவரா! எங்கள் குல தெய்வமே! இந்தமுறை நான் தேர்தலிலே வெற்றி பெறுதற்கு உதவிபுரிவாய். உனக்கு ஓர் அலங்காரத் திரு விழாச் செய்வேன். அப்பனே! உன்னையே நம்பினேன், கைவிட்டு விடாதே'' இஃது ஒரு தேர்தலிலே கண்ணை மூடிக்கொண்டு குதித்த சுயேச்சையாளர் ஒருவரின் பிரார்த்தனை.

''என் கடவுளே! ஐந்து கரத்தானே! ஆனைமுகத் தானே! உன்னருளினாலேதான் நான் இந்தத் தேர்தலிலே இறங்கியிருக்கிறேன். என்னை வெல்லச்செய்வாய்; உனக்குச் சங்காபிசேகஞ் செய்வேன்'' என்று தேர்தலிலே முன்னர்க் குறிப்பிட்டவருடன் போட்டியிடும் ஒருவர் பிள்ளையாரை வேண்டுகிறார்.

பிள்ளையாருக்கு ஒரு பெரிய இக்கட்டான நிலை உண்டாகிவிட்டது. தேர்தலிலே போட்டியிடும் இந்த இரு வரும் ஒரு வட்டாரத்திலே ஒருவரோடொருவர் போட்டி யிடுகின்றனர். வேறுஞ் சிலரும் இவர்களோடு போட்டியிடு கின்றனர். பிள்ளையாருக்கு இரண்டுபேர் நேர்த்திக்கடன் செய்ய முன்வந்திருக்கின்றனர்; இல்லை 'சந்தேசம்' கொடுக்க விரும்புகின்றனர். உண்மையான நிலைமை யின்படி இந்த இருவரும் வெல்ல முடியாது. ஒருவருக்குப் பிள்ளையார் உதவி செய்தால் மற்றையவர் தோற்று விடுவார். இருவரும் பத்தர்கள்; பிள்ளையாரை இரந்து இரந்து வேண்டுகிறார்கள். பிள்ளையார் என்ன செய்ய லாம்? இது கடவுளாலும் தீர்க்க முடியாத பிரச்சனை யாகின்றது.

சூதாடுகிறவரும், களவெடுப்பவருங் கூடக் கடவுளுக் குப் பங்குகொடுத்து வெற்றி அடைய எண்ணுகிறார்கள்.

சைவசமய ஒழுக்கம் — கடவுள் வழிபாடு இந்த நிலையை இப்பொழுது அடைந்துவிட்டது. இதை அபிமானத்தால் மறைப்பதோ மறுப்பதோ அறிவுடைமை யாகாது. இந்தப் பிறழ்ச்சிக்குக் காரணத்தை அறிந்து அதை நீக்குதல் வேண்டும். தகுதியானவர்களே நீக்குதற் குரிய செயல்களில் ஈடுபடல் வேண்டும்.

பொதுமக்களுக்கு நன்கு புரியாத சித்தாந்தக் கருத்துக் களையும் வடமொழிச் சுலோகங்களையும் 'விளாசுவதால்' மட்டும் சைவத்தை வளர்க்க முடியாது. 'இச்செயல் சைவத்தின் அடித்தளத்தையே அசைத்துவிட்டது. சைவத் தின் பெயரால் சமுதாயத்திலே பல கொடுமைகளும் அநீதிகளும் நடைபெறுகின்றன. இவற்றை நீக்குதற்கும் உலகெங்கும் சைவம் விளங்கச் செய்தற்கும் இப்பொழுதே துணிந்து செயலாற்றல் வேண்டும்.

சைவம் சிவசம்பந்தமானது. சிவமும் அன்பும் ஒன்று. எனவே சைவநெறி அன்பு நெறி. உலகத்திலுள்ள பெரியோர்களும், சமய நெறியாளர்களும் அன்பை விதந்து போற்றியுளரெனினும், சைவநெறிபோல அன் புடன் இரண்டறக் கலந்ததொரு சமயநெறி வேறில்லை எனலாம்.

> "அன்பேயென் அன்பே யென்று அன்பால் அழுதிட்டு
> அன்பேஅன் பாக அறிவழியும் அன்பன்றித்
> தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமது
> சாற்றும் பழமன்றே தான்" —திருக்களிற்றுப் படியார்

இத்தகைய அன்புக்கு மாறான செயல்களை எல்லாம் சைவர்கள் ஒழித்து விடல்வேண்டும். சைவர்களுடைய எண்ணம், சொல், செயல் யாவும் அன்புநெறியின் பாத்

படல் வேண்டும். சைவக்கிரியைகள் அன்புநெறியோடி சைதல் வேண்டும்.

இன்று இந்த அன்புநெறிக்கு மாறான பல செயல்கள் சைவத்துக்கு மாசு விளைக்கின்றன. சைவத்தின் பெயரால் தன்னலவாதிகள் பிறரைச் சுரண்டிப் பிழைக்கவும், சிலரைத் தாழ்த்தி வைக்கவும் முயல்கின்றனர். உண்மையாகச் சைவம் வாழ வேண்டுமெனில், சைவத்தின் பெயரால் சாதி வேற்றுமை பாராட்டுவதும் தீண்டாமை போற்றுவதும் உடனே ஒழிக்கப்படல் வேண்டும். ''தாழ்த்தப்பட்டோர்'' என நாம் அறியாமையால் பிரித்து வைத்த மக்களை எவ்வித வேறுபாடுமின்றி நமக்குச் சமமானவர்களாக நாம் கொள்ளுதல் வேண்டும். இன்னும் அவர்களுக்குத் திறந்து விடாத கோயில்களை எல்லாம் அவர்களுக்குத் திறந்துவிடல் வேண்டும். நம் உள்ளத்திலேயுள்ள ஆணவத்தை அகற்றி அன்பை நிறைத்து, அனைத்துயிரையும் நம்மைப்போல் மதித்து நடக்கும் அருளினை நல்குமாறு கடவுளை இரத்தல் வேண்டும்.

அன்பும் அருளும் பொலியவேண்டிய திருக்கோயில்களிலே ஆட்டையும் கோழியையும் வெட்டும் அசுரத் தன்மையை ஒழிக்க வேண்டும். குருட்டு நம்பிக்கையை நீக்கி, மக்கள் உண்மை அறிவுபெறவழி வகுக்க வேண்டும்.

கையிலுள்ள பணத்துக்குத் தக்க துண்டு வாங்கி அருச்சனை செய்விக்கும் முறையை உடனே அகற்றல் வேண்டும். இந்த வியாபார முறை, 'கடவுளுக்குக் கைக்கூலி கொடுக்கிறார்கள்' என்று பழிப்புரை பரப்புதற்கு வழிவகுக்கிறது. கடவுளின் அருளைப் பெறுதற்கு ஒருவருடைய பணநிலை காரணமாயிருத்தல் கூடாது.

செல்வர்கள் கூடிய பெறுமதியுள்ள அருச்சனைத் துண்டையும், வறியவர்கள் குறைந்த பெறுமதியுள்ள அருச்சனைத் துண்டையும் வாங்கும் பொழுது உயர்வு தாழ்வு இடம் பெறுகிறது. கடவுளருளுக்குக் கூடப் பணம் காரணமாகிப் பணமே கடவுளிலும் பெரிதாகி விடுகிறது.

கையில் ஒரு செம்புக் காசுதானும் இல்லாதவரும் கோயிலிலே சென்று எவ்வித வேறுபாடுமின்றிச் சமமாக வணங்கத்தக்க சூழ்நிலையை நாம் திருக்கோவில்களிலே உண்டாக்குதல் வேண்டும். ''யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை'' என்று திருமூலர் காட்டிய நல்வழியை இனியாகுதல் நாம் கடைப்பிடித்தல் வேண்டும்.

மக்களுக்கு விளங்காத வடமொழிச் சுலோகங்களை விட்டுவிட்டுத் தேவார திருவாசகங்களை—திருமுறைகளை ஓதி அருச்சனை செய்தால் அன்பும் அருளும் அறமும் சிறக்க வழி உண்டாகும். ''தமிழோடிசை பாடல் மறந் தறியேன்'' என்னும் நாவுக்கரசர் திருவாக்கை மறந்து விட்டோம். நாயன்மார்கள் சைவத்தைத் தமிழோடு பிணைத்தே வளர்த்தார்கள். இதனாலே மக்கள் உள்ளத்தை அவர்கள் ஈர்த்தார்கள். அவர்கள் காட்டிய இவ்வழியைத்தான் நாம் இனிக் கடைப்பிடித்தல் வேண்டும். இனித் தயங்காது கோயில்களிலே தமிழோ டிசை பாடல் வேண்டும். கூட்டு வழிபாடும் நாயன்மார்கள் காலத்திலிருந்தது போல் இப்பொழுது நடைபெறல் வேண்டும். இவ்வழிபாட்டின்போது அருட்பாடல் களையே, சிறப்பாகத் திருமுறைப் பாடல்களையே பாடுதல் வேண்டும். கண்டகண்ட பாடல்களைக் கண் மூடிக் கொண்டு கூட்டு வழிபாட்டின் போது பாடும்

வழக்கம் இப்பொழுது தோன்றியுளது. இதனை நீக்குதல் வேண்டும்.

தம் வாழ்வின் துறையனைத்திலும் தமிழர் தமிழுக்கு முதன்மை கொடுத்தற்கு முயலுதல் வேண்டும். அன்பு வாழ்வுக்கும், அருள் வழிக்கும், அறநெறிக்கும் மாறான யாவற்றையும் சைவத்தோடு சேர்க்காமல் விடுதல் வேண்டும்.

இங்கு எடுத்துக் காட்டிய குறைகளை நீக்கிச் சீர்திருத்தங்களைச் செய்தற்கு முன்வருமாறு அன்புள்ளம் படைத்த சைவர்களை இரக்கின்றோம். இத்துறையில் பல்கலைக் கழக மாணவர்களும்,—பேராசிரியர்களும், மாணவர்களும் — ஆசிரியர்களும் செய்யத்தக்க தொண்டுகள் பலவுள இவற்றையெல்லாம் உடனே செய்தால்,

''யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே'' *

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழன் இரந்தது போல் நாம் எல்லோரும் இரக்கும் பெருநிலை விரைவில் உண்டாகும்.

---

* *பரிபாடல் 8*

2

நல்ல வண்ணம் வாழலாம்

அன்பர்களே!

சிவநெறிச் செல்வர்களாகிய உங்கள் யாவரையும் இன்று இங்கே ஒன்றாகக் கண்டு களிக்கும் வாய்ப்புக் கிடைத்ததற்கு யான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவினை இங்கே நடைபெறச் செய்து எங்கள் யாவரையும் இதிற் பங்கு பெறவுஞ் செய்த திருவருட்டிறனை வியக்கின்றேன். சைவ இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு என்னைப் பணித்த அறிஞர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

இங்கு கூடியிருக்கும் மாநாடு சைவ இளைஞர் மாநாடாகும். இளைஞர்கள் உலக வாழ்வில் புகுகின்றவர்கள்; சிறப்பாக வாழவேண்டுமென்று விரும்புகிறவர்கள்; துன்பத்தை வெறுத்து இன்பத்தை நாடும் இயல்புடையவர்கள்; இத்தகையோர்க்கு முதலில் எதனை எடுத்துரைக்கலாமென்று எண்ணினேன். ஓர் இளைஞரின் கூற்றே உள்ளத்திற் தோன்றிற்று.

> "மண்ணில்நல் வண்ணம் வாழலாம் வைகலும்
> எண்ணில்நல் லகதிக் கியாதுமோர் குறைவிலை;
> கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
> பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே,"

---

* யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில் சைவ இளைஞர் மாநாட்டில் 28—12—1948 இல் நிகழ்த்திய தலைமை உரை.

ஆளுடைய பிள்ளையாருடைய இக்கூற்று யாவரும் எக்காலத்தும் தம் உள்ளத்திற் பதித்துக்கொள்ள வேண்டியதொரு பேருண்மையாகும். சிவமெனுஞ் செம் பொருளைக் கண்டு மெய்யுணர்வெய்திய அவருடைய உள்ளத்தினின்றும் பிறந்த இந்த உண்மையினையே கடவுளின் திருவருளைப்பெற்றுய்ந்த பெரியோரெல்லாம் பற்பல வழிகளினாலே புலப்படுத்தியுள்ளர்.

மக்களிடத்துத் தெய்வம் என்பதோர் சித்தம் உண் டாகிக் கடவுட்பற்று உண்டாக வேண்டும். கடவுட்பற்று இன்றேல் இன்ப வாழ்க்கையை மக்கள் வாழ முடியாது. '**தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது**' என்பது பொய்யில் புலவன் பொருளுரை. இந்த உலகத்திலே பல நிலையிற் பலவகையான வாழ்வினை மக்கள் வாழ்கின்ற னர். இவர்கள் யாவரும் அற வாழ்வை - அன்பு வாழ்வை - பூரண வாழ்வை வாழ்கின்றார்களென்று கூற முடியுமா? உண்டு உடுத்து இருகால் மாடாக வாழ் பவர்கள் பலரன்றோ!

'விலங்குகளுக்கும் மனிதருக்கும் வேறுபாடில்லையா? அறிவினால் விலங்குகளிலும் பார்க்க மனிதர் உயர்ந்தவர் களாக விளங்க வில்லையா?' என்று பலர் வினவலாம். இந்த அறிவின் பயன்தான் யாது? அணுக்குண்டை உண் டாக்கி உலகத்தைக் கலக்குவதா? தமது ஆற்றலாற் பிற நாடுகளை அடக்கி ஆளுவதா? பிறருடைய பொருளைச் சூறையாடி அவர் வறுமையிலுழலத் தாம்உண்டு களித்துக் கூத்தாடுவதா? 'அறிவுடையோம், ஆற்றலுடையோம், பொருளுடையோம்' என்று இறுமாப்பு அடையும் மக்கள் இப்பொழுது எந்நெறியிற் செல்கிறார்கள் என்பதைச்

சிறிது உணர்ந்து பாருங்கள். உலகமெங்கும் பற்பல கிளர்ச்சிகளும் பூசல்களும் கொடுமைகளும் நிகழ்கின்றன. மூன்றாவது உலகப் பெரும்போர் தொடங்கவிடுமோ வென்று பலர் சந்தேகப்படுகின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம் யாது? மக்களிற் பலர் மெய்யறிவைப் பெற்றுக் கொள்ளாது அறிவுடையோம் என்று தருக்கிப்பொருளல்ல வற்றைப் பொருளென்று கருதி மயங்குவதே.

மக்கள் மெய்யறிவைப் பெறாவிடில் - தக்க இன்ன தகாத இன்ன என்று உணராவிடில் - விலங்குகளினும் கீழானவர்களாகி விடுகிறார்கள். தமது அறிவினால் ஆக்கத்தைத் தேடாது அழிவைத் தேடுகிறார்கள்; அறத்தைச் செய்யாது மறத்தைச் செய்கிறார்கள்; அன்பைப் பெருக்காது பகைமையைப் பெருக்குகிறார்கள்; பிறர் நலத்தை மறந்து தம் நலத்திற்கே உழைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மெய்யறிவைப் பெற்று நல்ல வண்ணம் வாழவேண்டுமானால் சம்பந்தர் கூறியபடி கடவுட்பற்றுடையவர்களாக வாழவேண்டும்.

''என்னதான் கற்றாலென் எப்பொருளும் பெற்றாலென்
உன்னை அறியாதார் உய்வரோ பூரணமே''

என்று பட்டினத்தடிகள் கூறியிருப்பதை உணரவேண்டும்.

''உண்மையை நம்பாதவர்கள் இருக்கும்வரையும் உண்மையைத் திரும்பச் சொல்லவேண்டும்'' என மாக்குமுல்லர் என்னும் மேனாட்டறிஞர் உரைத்துளர். இக்கூற்றினைத் தாமும் ஏற்றுக் கொண்ட தாகக் காந்தியடிகளாரும் கூறியிருக்கிறார். இன்பமாய் வாழுதற்குக் கடவுட் பற்று வேண்டுமெனும் உண்மையை உணர்ந் தொழுகாதவர்கள் முதற்காலத்திலும் இருந்தனர்.

இதனாலேயே பேரறிஞர்கள் யாவரும் இந்த உண்மையைத் திரும்பத் திரும்ப எடுத்துரைத்து வலியுறுத்தியுளர். இவ்வுண்மையை உளங்கொளாதவர் இக்காலத்திற் பெருகிவருவதால் இக்காலத்திலும் இதனைப் பன்முறை எடுத்துக்கூறி வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

நம் கல்லூரிகளிற் கல்வி கற்கும் இளைஞர்கள் இந்த உண்மையினைத் தம் மனத்திலே நன்றாகப் பதித்தொழுக வேண்டும். ஏனெனிற் பல கல்லூரிகளிலே கற்பிக்கப்படும் கல்வி சமயத்தோடு தொடர்பற்றதாக விருக்கிறது. கல்லூரிகளிலே சமயங் கற்பிக்கவேண்டுமா? என்று நம் நாட்டவர்கள் கேட்கிறார்கள்.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் ரெனின்''

என்று வள்ளுவர் ஈராயிரம் வருடங்களுக்குமுன் கூறியதை இவர்கள் இப்பொழுது தானும் அறிய முடியா திருக்கின்றனர். கல்வியைச் சமயத்தினின்று பிரிப்பதால் பற்பல தீமைகளுக்கு வித்திடுகிறோம் என்பதை இவர்கள் உணர்வதில்லை. இதனால் நம் கல்லூரிகளிலே கற்கும் மாணவர்களுக்குத் தெய்வ சிந்தனை என்ப தின்னதென்றே தெரியாமற் போய்விடுகிறது. இது மாத்திரமா! நாகரிகம் என்றால் பழையனவற்றை எல்லாம் ஒழித்துப் புதிய வழிகளில் நடத்தல் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். சமயத்திலும் நாகரிகத்தைப் புகுத்துகிறார்கள்; ''**கடவுள் இல்லை; நன்மை தீமை இல்லை; கண்டதே காட்சி கொண்டதே கோலம்**'' என்று கூறித் தாம் ஒரு புதுச் சமயத்தை வகுப்பதாகப் பெருமைப்படுகிறார்கள். தாம் வகுக்குஞ் சமயம் புதியதன்று; உலோகாயதம் எனும் பெயருடன் முன்னரும் உளதென்பதை இவர்களிற் பலர்

அறிவதில்லை. உலோகாயதமனைக்கொடிய நச்சுப்பாம்பு என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். இந்தப் பாம்பு தீண்டாமல் இளைஞர்களைக் காப்பாற்றத் தக்கது கடவுட்பற்றாகும்.

கடவுள் ஒருவர் இருக்கிறரா என்று ஆராய்ச்சி இளைஞர் உள்ளத்தில் எழுதல் இயல்பே. இருக்கிறார் என்பதை நம் அறிவுகொண்டறிதல் முடியாது. கற்கண்டின் இனிமையை நாம் கற்கண்டை உண்பதாலன்றி அதனைப்பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்வதால் சுவைக்க முடியாது. அதனை உண்டு சுவைத்தவர்கள் இனிக்கிறது என்று சொல்லுகிறார்கள். அவர்களது கூற்றின் உண்மையை அறிவதற்கு அதனை நாமும் உண்ண வேண்டும். இதனைப்போலவே கடவுளினுண்மையையும் நாம் ஆராய்ச்சியால் கண்டுகொள்ள முடியாது. உணர்வினாலேயே கடவுளைக் காணலாம். "உரையுணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே" கடவுள் என்கிறார் மணிவாசகர். "அவனருளே கண்ணாகக் காணின் அல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்று அப்பர் தமது அனுபவத்தை உரைக்கிறார். ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத இறைவன் பத்திவலையிற் படுகின்றான். "பத்தர்தம் பத்திவலையிற் படினல்லால் முத்தினை யார் சொல்ல முந்துகிறாரே" என்று கூறுகிறது திருமந்திரம். பத்திவலையிலே இறைவனைப் பிடித்த அன்பர்கள் அவனியல்புகளையும் அவனது பேரருட்டிறனையும் பற்பலவிதமாக எடுத்துரைத்துளர். இவர்களுடைய கூற்றுகளையெல்லாம் ஆராய்ந்து அறிய முடியாது. இதனாலேயே தவமுதல்வர் சம்பந்தரும்.

"ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்!"

என்று பணித்தார்.

ஆகவே கடவுளைக் காண விரும்புகிறவர்கள் முதலிற் கடவுள் இருக்கிறார் என்பதை நம்பவேண்டும். நம்பிக்கையும் பற்றும் உண்டாகினால் கடவுளை எங்குங் காணலாம்; இலகுவாகவும் காணலாம். "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி," என்பதையும் நோக்குக. பாசியினாலே மூடப்பட்ட நீரிலே சந்திர சூரியர்களுடைய விம்பத்தைக் காணமுடியாது. இது போலவே மாசு படிந்த உள்ளத்திலே கடவுளைக் காண முடியாது: உள்ளத்திலே மாசு நீங்கி ஒளிபெருக்கினால் ஒவ்வொருவரும் தத்தம் உள்ளத்திலேயே கடவுளைக் காணலாம். "உண்ணாடி உளனே ஒளிபெற நோக்கிற் கண்ணாடி போலே கலந்திருந்தானே" என்றருளிச் செய்தார் திருமூலர்.

இளைஞர்களுடைய மனம் மிகு எழுச்சியுடையது; கற்பனை நிறைந்தது; கண்டவிடமெல்லாந் தாவிச் செல்லும் இயல்புடையது; ஆகவே இளைஞர்கள் தம் மனத்தை நன்கு அடக்கி ஆளப்பயிலவேண்டும். 'காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன்பிறகே ஓடுந்தொழிலாற் பயனில்லை' என்பதை அவர்கள் உணரவேண்டும். தீய வழிகளைவிட்டு நல்ல வழிகளை நாட அதனைப் பயிற்றவேண்டும்.

மிதிலையிலுள்ள கன்னிமாடத்தில் சீதாபிராட்டியாரை இராமர் கண்டார்; காதல் கொண்டார். சிறிது நேரத்தின்பின் தமது மனம் நாடிய பெண் கன்னியாயிருக்காவிடிற் பெரும் பழிக்கு ஆளாகவேண்டுமேயென்று அவர் எண்ணினார். 'என்னுடைய மனம் நல்ல வழியிலன்றிக் கெட்ட வழியிற் செல்லாது. ஆகையால் அப் பெண் ஒரு கன்னிதான்' என்று முடிவுசெய்தார். இதனால் இராமர் தமது மனத்தை எவ்வாறு பயிற்றி வைத்திருந்தார் என்பதை நாம் அறிகிறோம்.

சுந்தரர் திருவொற்றியூரிலுள்ள ஆலயத்தில் சங்கிலியாரைக் கண்டார்; மனத்தைப் பறிகொடுத்தார். 'எண்ணமெலாம் உமக்கடிமை யாமாறெண்ணும் என் நெஞ்சில் திண்ணமெலாம் உடைவித்தாள் செய்வதொன்றறியேன்' என்று கடவுளுக்கு முறையிட்டார். இச்செய்தி கடவுளைப் பற்றிய எண்ணங்களே சுந்தரருடைய மனத்தில் எழுந்தன என்பதை நமக்குக் காட்டுகிறது.

மனம் எப்பொழுதும் ஒன்றைப் பற்றிக்கொண்டு இருக்குமேயன்றிச் சும்மா இருக்காது. "சிந்தையையடக்கிச் சும்மாவிருக்கும் திறனரிது" என்றார் தாயுமானப் பெருந்தகையார். மனம் நல்லதைப் பற்றினால் நல்ல வழியிலும் தீயதைப்பற்றினால் தீயவழியிலும் செல்லும். ஆகையனால் அதனை நல்வழியிலும் பழக்குவதற்கு அதை இறைவனிடத்திலே செலுத்தவேண்டும். இறைவனின் திருவருட்கடலிற் றிளைத்த பெரியாரெல்லாம் தம் மனத்தை இறைவனிடமே பதித்தார்கள். நாவுக்கரசர் "நன்னெஞ்சே! உனையிரந்தேன் நம் பெருமான் திருவடியே உன்னஞ்செய்திரு கண்டாய் உய்வதனை வேண்டுதியேல்" என்று தமது நெஞ்சை இரக்கிறார்.

மனத்தை இறைவனிடஞ் செலுத்துதற்குப் பலவழிகள் உள. எம்முறையிலேனும் அவரை நினைந்து அன்பு செய்தலே இன்றியமையாது. திருமூலர் ''எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்துமின்'' என்று கூறுகிறார். அருவம், உருவம், அருவுருவம் எனும் வடிவங்களில் ஒன்றில் கடவுளை வழிபடலாம்; கடவுளினருட்டிறனை யுணர்ந்துருகிய பெரியார்களுடைய அருட்பாக்களை ஓதலாம். நமது சைவ சமயத்திலேயுள்ள தேவார திருவாசகங்களைப் போன்ற திருப்பாட்டுக்களை வேறெச்சமயத்திலுங் காணமுடியாது. படிப்போர் கேட்போருடைய உள்ளத்தை உருக்கி இறை யுணர்ச்சியை யூட்டி, இன்பத்தைப் பெருக்கும் தன்மையில் இவற்றுக்கு இவையே நிகராகும் என்று கூறுவது உயர்வு நவிற்சியாகாது. இவற்றின் இத்தன்மைகளை யாவரும் அனுபவத்திலே அறியலாம்.

சிறிது மன அடக்கத்துடனிருந்து தேவார திருவாச கங்களைப் பொருளுணர்ச்சியுடன் படியுங்கள்; உங்கள் உள்ளத்தில் சாந்தமும் ஒளியும் இன்பமும் உண்டாவதை அறிவீர்கள். திருவாசகத்தைப் படிக்கும் பிற சமயத்தவர்களுங்கூட உருகிவிடுகிறார்கள். 'வரு மொழிசெய் மாணிக்கவாசக நின் வாசகத்திலொரு மொழியே, யென்னையுமென்னுடையனையு மொன்று வித்துத்தருமொழியாம்' என்று இராமலிங்க சுவாமிகள் தாம்கண்ட உண்மையை வெளிப்படுத்தியுளர். மொழிக்கு மொழி தித்திக்கும் தேவார திருவாசகங்களை முறைப்படி ஓதி இந்த உண்மையைக் காணமுடியாதவர்கள் சைவ சமயத்தவர்கள் என்று தம்மைக்கூறச் சிறிதேனும் தகுதி யுடையவராகார்.

இக்காலத்திலே சபைகளிலும் விழாக்களிலும் தேவார திருவாசகங்களைப் பாடுகிறவர்கள் பலர் பிழைகளுடன்

பாடுகிறார்கள். இவர்கள் விடும் பிழைகளை நோக்கும் போது இவர்களிற் பலர் பொருள் விளங்காது பாடு கிறார்கள் என்றே கூறவேண்டி இருக்கிறது. அச்சிடப் பட்டு வெளிவந்துள்ள தேவார திருவாசப் பிரதிகளிலும், சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் முதலிய நிலையங்கள் வெளியிட்ட பிரதிகளைத் தவிர்ந்த ஏனைய பிரதிகளிற் பல பிழைகள் காணப்படுகின்றன. இக்குறைகளை நீக்கு தற்கு ஆகவேண்டியதைச் செய்தல் சைவப் பெருமக்கள் கடனாகும்.

தோத்திரப் பாடல்களைப் பாடுவதும், கோவிலுக்குப் போவதும், வேடங்களைப் பூண்பதும் மாத்திரம் சமய வாழ்வு என்று நம்மிற் பலர் எண்ணுகிறார்கள். சமயம் வேறு, வாழ்வுவேறு என்னுங் கருத்துப் பலரிடத்துக் காணப்படுகிறது. வாழ்வைத் திருத்திப் பூரணப்படுத்து வதே சமயத்தின் நோக்க மென்பதைப் பொதுவாக எல்லாச் சமயத்தவர்களும் மறந்து ஒழுகுகிறார்க ளெனினும் விசேடமாக நமது சமயத்தவர்களை நாம் குறை கூற வேண்டியிருக்கிறது. ஏனெனில், தமது சமயத் தைப் போல வாழ்வோடு தொடர்புபட்டிசைந்த சமயம் வேறொன்றை நாம் காணவுங் கருதவும் முடியாதாகை யால் என்க. நமது சமயம் மற்றைய சமயங்கள் யாவற்றி லும் பார்க்க விரிவானது; அடிப்படையான உண்மைகளை ஆதாரமாகக் கொண்டது. எத்தகையோரும் எந்நிலையில் நின்றும் தழுவிநடக்கத்தக்கது.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"

என்னுந் திருமந்திரம் எவ்வளவு இலகுவாகச் சமய வாழ்வினை வாழலாமென்பதைப் புலப்படுத்துகிறது. நமது சமயத்தின் இத்தகைய இயல்புகளை நம்மிற்பலர் அறிவதில்லை. இதற்குக் காரணம் சமயத்தையும் வாழ்வையும் பிரித்துக் காட்டிச் சமயவாழ்வு என்றால் பற்பல நிபந்தனைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சிலர் வலியுறுத்தி வருவதேயாகும். இதனால் பல தீமைகள் தோன்றியுள்ளன. ''ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டு போகும் இந்தச்சமய அனுட்டானங்களை எல்லாம் நாம் மேற்கொள்ள நேரம் எங்கேயுள்ளது? இந்த இருபதாம் நூற்றாண்டிலே இப்படியும் வாழ முடியுமா'' என்று பலர் எண்ணுகின்றனர். ''உண்ண உடுக்கப் பொருளின்றி அலையும் நமக்குச் சமயமெதற்கு? சமயத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தால் வாழ்க்கை நடக்குமா'' என்று சிலர் கருதுகின்றனர்.

சமய அனுட்டானங்கள் வேண்டாமென்று நான் கூறுகிறேன் என்று அன்பர்கள் கருத வேண்டாம். அனுட்டானங்களையே முடிந்த முடிபெனக்கருதி அவற்றாலெய்த வேண்டிய பயனைக் கருதாதும், அதனைப் பெற முயலாதும் அமைந்துவிடுதல் எங்கள் சமயத்துக்கும் எங்கள் இனத்துக்கும் பேரிழுக்காகும். கோவிலில் மாத்திரந்தான் சமயம் இருக்கிறது. தேவாரங்களைக் கிளிப் பிள்ளைகளைப் போலப் படித்தால் மாத்திரமே சமய வாழ்வினை வாழ்கிறோம் என்று நாம் எண்ணக் கூடாது.

> ''தாவாரம் இல்லைத் தனக்கொரு வீடில்லைத்
> தேவாரம் ஏதுக்கடி—குதம்பாய்
> தேவாரம் ஏதுக்கடி''

எனும் குதம்பைச் சித்தர் பாடலை ஊன்றி உணர்ந்து பாருங்கள். ''தா'' என்றால் துன்பம், ''வாரம்' என்றாற்

புங்கு; 'தாவாரமில்லை' எனில் பிறருடைய துன்பத்திற் பங்கில்லை என்பது பொருள். 'தனக்கொரு வீடில்லை' என்பது நான், எனது எனும் அகப்பற்றுப் புறப்பற்றுக்கள் விடுபடவில்லை என்பதைக் குறிக்கின்றது. தம்முயிரைப் போலப் பிறவுயிரை மதிக்காதவர்களுக்கும், அகங்காரத்தை விடாது "நான் நான் எனக் குளறியே ஒன்றை ஒன்று பற்றிப் பாசக கடற்குள்" விழுபவர்களுக்கும் தேவாரம் ஏன் என்று கேட்கிறார் குதம்பைச் சித்தர். கோவிலும் ஏன் என்று நாம் கேட்கலாமன்றோ! "படிப்பது சிவபுராணம் இடிப்பது சிவன் கோவில்" என்ற முறையில் வாழும் மக்களையே சித்தர் பழிக்கிறார்.

சைவம் என்பதன் பொருள் யாது? சிவசம்பந்த முடைய தென்பர். சிவம் என்றால் அன்பு.

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே."

என்றார் திருமூலர். ஆகவே சைவசமயம் என்றால் சிவசமயம்- அன்புச்சமயம்- என்பது கருத்து, உலகத்தி லுள்ள பல சமயங்களும் மனித வாழ்வுக்கு அன்புதான் அடிப்படையானது என்று கூறினாலும் நமது சைவ சமயத்தைப் போல 'அன்பே கடவுள்' 'கடவுளே அன்பு' என்று அவை வலியுறுத்தவில்லை. நமது சமயத்தினை நாம் அன்பு நெறியென்றே கூறுகிறோம். அன்பு வாழ்வு தான் நமது சமய வாழ்வு. ஆகவே உள்ளத்திலே அன்

யைப் பெருக்குவதற்கே நாம் முயலவேண்டும். இதற்கே சமய அனுட்டானங்கள் பயன்பட வேண்டும்.

அன்பு பெருகப் பெருகத் தீய எண்ணங்களும் தன்னலமும் உள்ளத்திலே இடம் பெற மாட்டா; மனமொழி மெய்கள் தூய்மை அடையும். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும், இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில்" என்னும் உண்மையை நன்கு உணரலாம். இந்த உண்மையைக் கண்டு விட்டால்,

> "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
> தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே."

என்று தாயுமானவருடன் சேர்ந்து நாமும் கடவுளை வேண்டுவோமன்றோ !

ஆதலின், இளைஞர்களே நாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் சித்தத்தைச் சிவன்பால் வைத்து அன்பர் பணி செய்தலே இன்ப நிலையை அடையும் வழி என்று ணர்ந்து வாழுதல் வேண்டும். இதுதான் சைவ வாழ்வு—சிவநெறி—சன் மார்க்கம்—அன்புவழி என்று பலவாறு போற்றப் படுவது. இதனை, "சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிதுவென்ற" திருவள்ளுவ நாயனாரும் "வையத்தில் வாழ்வாங்கு வாழும் முறை" என்று கூறியுள்ளார். இக்காலத்திலே அமரகவியென்று போற்றப்படும் பாரதியாரும் இதனையே குழந்தைகளுக்கு விளக்குகிறார்.

> "உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
> உண்மையென்று தானறிதல் வேணும்
> வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
> வாழும் முறைமையடி பாப்பா."

3

இன்ப அன்பு நெறி

மெய்யன்பர்களே!

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் அறுபத்தாறாவது ஆண்டு நிறைவு விழாவுக்கு அடியேனைத் தலைமை தாங்குமாறு பணித்தமைக்கு நன்றி. யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டில் நடைபெற்ற சமாசத்தின் நாற்பத்து மூன்றாவது நிறைவு விழாவின்போது சைவ இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினேன். இருபத்திரண்டு ஆண்டுகளின் பின் சைவர் மாநாட்டுக்குத் தலைமை தாங்குகின்றேன்.

நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினன்; அரசியலில் ஈடுபட்டவன். ஈழத் தமிழரின் விடுதலைக்காகப் போராடுபவன், உயிரின் விடுதலைக்கு வழி காட்டும் சைவ நெறி மாநாட்டில் இன்று பங்கு கொள்கிறேன். பாராளுமன்ற உறுப்பினன் என்ற முறையில் எல்லாரும் இன்புற்றிருக்கப் பாடுபடுபவன். எல்லாரும் இன்புற்றிருக்க அரசியலால் மட்டும் வழி வகுக்க முடியாது. சமய நெறியும் இன்றியமையாதது. சமுதாய நீதி நிலை கொண்டாலன்றி அரசியலாலும் சமயவியலாலும் மக்கள் நிலைத்த பயனடையார். "இன்பமே என்றும் துன்ப

---

* சேலத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாசத்தின் அறுபத்தாறாம் ஆண்டு நிறைவு விழாவில் சைவர் மாநாட்டில் *25—12—1971 இல் நிகழ்த்திய உரை.*

மில்லை'' என்று மக்கள் வாழும் நிலைமை உருவாகாது. அரசியல் வேறு, சமயம் வேறு, சமுதாயம் வேறு என்று கொள்வதனாலேயே உலகம் முழுவதும் பூசலகள் தோன்றிப் போட்டி - பொறாமைகள் வளர்கின்றன. அரசியலும் சமுதாயத்துக்கு நல்வாழ்வு அளிக்கவே முயல்கின்றது; சமயமும் சமுதாயத்தை நன்னெறிப் படுத்தவே முயல்கின்றது. எனினும் சமுதாய வாழ்வு நிறைவடையவில்லை சமுதாய நீதிக்காகப் போராடும் மக்களின் போராட்டமும் முழு வெற்றியடையவில்லை.

சமுதாய வாழ்வை நோக்குவோருக்குச் சமுதாய நீதியை ஓம்பவேண்டிய அரசியலும் சமயமும் அதனைச் சிதைப்பது நன்கு புலனாகும். இதனால் மக்கள் பலர் அரசியல் முறைகளை மாற்றியமைக்கவும் சமய நெறிகளை வெறுக்கவும் முயல்கின்றனர்

அரசியல் முறைகள் மாற்றத்துக்கு உட்பட்டனவாக இருத்தலின் மக்கள் அவற்றை மாற்ற முயல்கின்றனர். சமயநெறிகள் பழமையிற் காலகொண்டு மரபினிற் கையூன்றி இடைச் செருகல்களிற் சிக்கி, மெய்யியலை ஒதுக்கி, ஒழுகலாற்றினில் வழுக்கிப் பெரிதும் நீதிக்கும் நேர்மைக்கும் பகுத்தறிவுக்கும பண்பாட்டுக்கும் முரண் பட்டுக் காட்சி அளிக்கின்றன. இதனால் மக்கள் பலர் —சிறப்பாக இளைஞர்கள் - அவற்றை ஒதுக்குகின்றனர்; வெறுக்கின்றனர். சில மக்கள் அவற்றைப் போதைப் பொருள்கள் என்றும் கூறுகின்றனர்.

இந்த நிலைமை உலகத்திலுள்ள சமயங்கள் யாவற் றுக்கும் உண்டாகியுள்ளது. சமயநெறிகள் மக்கள் மனதைக் கவர்ந்து நம்பிக்கையை ஊட்டி அவர்களை நல் வாழ்வுக்கு-இன்ப வாழ்வுக்கு வழிப்படுத்தத் தக்கன

வாய் இயங்க முடியாதா? இத்தக் கேள்விக்கு இன்று விடை கொடுக்கவேண்டும்.

சமயங்களின் பெயரால் மக்களை மருட்டியும்-மயக்கியும், தெருட்டியும் - வெருட்டியும் பேராட்சி செய்து வந்தவர்கள் இனி அவ்வாறு செய்ய முடியாது. இந்த உலக வாழ்வை விட்டுவிட்டு மறு உலக வாழ்வைப் பேசுவதாலோ, முற்பிறப்பு பிற்பிறப்புக்களைத் துணைக் கிழுத்து "எல்லாம் விதி" என்று மயக்கி ஏமாற்றுவதாலோ இக்கால மக்களின் ஆராய்ச்சி உணர்வையும் அறிவுத்திறனையும் அடக்க முடியாது.

"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருபபார்
பித்த மனிதரவர் சொலும் சாத்திரம்
பேயுரையா மென்று இங்கு ஊதெடா சங்கம்"

என்று இப்பொழுதுள்ள குழப்ப நிலையையும், மக்களின் எண்ணப் போக்கையும், இனித் தேவையான சமயப் போக்கையும் பாரதியார் தொட்டும் சுட்டியும் காட்டியுளர்.

"ஆயிரந தெய்வங்களுண்டெனறு தேடி
அலையு மறிவிலிகாள்—பல்
லாயிரம் வேத மறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?"

"மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்துப்—பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ?"

"மந்திரத்தை முணு முணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் மிவள் பூசனை யன்றாம்"

"மநதிரத்தாலே எங்குங் கிளியே,
மாங்கனி வி ழ்வதுண்டோ"

என்பன போன்ற பாரதியார் கூற்றுக்கள் மக்கள் உள்ளத்தில் தோன்றியுள்ள புதிய திருப்பங்களை நன்கு புலப்படுத்துகின்றன.

உலகத்திலுள்ள பெரும் சமய நெறிகள் யாவும் மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தவே தோன்றியன. இவை வேறுபட்ட பல சூழ்நிலைகளில் தோன்றிப் பற்பல நிகழ்ச்சிகளால் தாக்கமும் மாற்றமும் அடைந்து உருவாகி யுள்ளன. எனினும், வளர்ச்சி முறையிலும், அமைப்பு முறையிலும், செயல்முறையிலும் பொது இயல்புகளையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு சமயத்துக்கும மெய்யியலும் ஒழுகலாறுகளும் உள. ஒழுகலாறுகள் மக்கள் தனித்தும் சேர்ந்தும் கைக்கொள்ளும் முறையில் அமைந் துள்ளன. ஒவ்வொரு சமயத்துக்கும சமய நிலையங்களும் சிறப்பாகப் பொது வழிபாட்டுக்குரிய இடங்களும் சமயத் தலைவர்களும், சமயச் சின்னங்களும் உள. சமயக் கதைகளுக்கும் குறைவில்லை.

விஞ்ஞான ஆராய்ச்சி சிறந்துயர்ந்து விளங்கும் இக் காலத்தில் - மக்களின் பகுத்தறிவு முற்ற முழுதாகத் தொழிற்படும் இக்காலத்தில் - பழைய சமய ஒழுகலாறு களும் வரலாறுகளும் நிலைத்து நிற்றல் முடியாது. சமய ஒழுகலாறுகள் மக்களுடைய தனிவாழ்வையும் சமுதாய வாழ்வையும் சீர்ப்படுத்தத் தக்கனவாக அமைதல் இன்றி

யமையாதது. சமய வாழ்வு பகுத்தறிவுக்கும் பண்பாட்டுக்கும் சமுதாய நீதிக்கும் இசையச் சமூக வாழ்வுடனும் தனிவாழ்வுடனும் இணைந்து விளங்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் மனநிறைவையும், சமுதாய இசைவையும் உண்டாக்குதற்குச் சமய வாழ்வு எப்பொழுதும் இன்றியமையாதது.

கவலை துறந்து இங்கு வாழ்வது விடென்று
காட்டு மறைகளெல்லாம்—நீவிர்
அவலை நினைந்து உமிமெல்லுதல் போல் இங்கு
அவங்கள் புரிவீரோ?

என்று வினாவுகிறார் பாரதியார்.

கவலை துறந்து வாழ்வதற்கு - இன்பமாக வாழ்வதற்கு - வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்குச் சமய நெறிகள் தயக்கமும் தடையுமின்றி வழிப்படுத்தல் வேண்டும்.

இத்தகைய வாழ்வை நல்குதற்குத் தமிழர் கண்ட சைவநெறி பல்லாற்றானும் ஏற்றம் மிக்கது. தமிழர் எல்லாம் கடந்து நின்ற ஒன்றினையே கடவுள் என்றார்கள். கடவுள் எனும் இச்சொல்லே தமிழர்களின் கற்பனைத் திறனையும், கருத்துத் திறனையும் விளக்கத் தக்கது. கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற வினாக்களுக்கே இடமின்றி, மக்கள் தத்தம் ஆற்றலுக்கும் அறிவுக்கும் ஏற்கக் கருதத்தக்க முறையில் கடவுளைத் தமிழர் காட்டியுளர்.

"ஒரு நாமம் ஓர் உருவம், ஒன்றுமில் லாற்கு
ஆயிரந் திருநாமம் பாடி,"

''ஈறில்லாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே.''

''அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ ஆதலின்
உறையும் உறைவதும் இலையே,''

''தனக்குவமை இல்லாதான்,''

''உரைஉணர்வு இறந்துநின்று உணர்வதோர் உணர்வே,''

''மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னாதிரையான் என்றென் றயருமால்
ஊர்திரை நீர் வேலி யுலகு.''

''உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் —
நிலவுசீர் அமலனாகி நின்றனன்.''

''எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்.''

''அறிவானுந்தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப் பொருளுந்தானே...,''

அடியார்களின் இக்கூற்றுக்கள் புலப்படுத்தும் இப் பேருண்மையினை நோக்குக.

சைவ சமயக் கோயில்கள் சமூக வழிபாட்டுக்கு மட்டுமன்றிச் சமுதாய வாழ்வுக்கு உதவுதற்கும், கல்வியையும் கலைகளையும் வளர்ப்பதற்கும் தொண்டாற்றின. இக்கோயில்கள் பன்னூறு ஆண்டுகளாகச் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றின; சமுதாயத்தைச் சமதர்மத்துக்கு வழிப்படுத்தின; சமய வாழ்வைச் சமுதாய வாழ்வோடு இணைத்தன. தமிழ் நாட்டுக் கோயில்கள் ஊர்ப் பொது நிலையங்களாக விளங்கிச் செய்த சமூகப்

பணிகள் பாராட்டுக்குரியன. கோயில்களை மையமாகக் கொண்டு பல குடியிருப்புக்களும் நகரங்களும் வளர்ச்சி யடைந்தன. இன்று கோயில்கள் குடிசைகளைக் கவனிக்க வில்லை. அர்த்தமற்ற ஆடம்பரங்களுக்கும், அந்நிய மொழிகளுக்கும், குறுக்கு வழிகளில் பணம் படைத்தவர் களுக்கும் புகலிடமாகிவிட்டன. இந்த நிலைமை மாற்ற மடைய வேண்டும். கோயில்களின் வருவாய் ஏழைகளின் வாழ்வை வளம்படுத்தப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

எளிமைக்கும், தூய்மைக்கும், அமைதிக்கும், அன்புக் கும், அறத்துக்கும் நிலைக்களமாகக் கோயில்களின் நடை முறை மாற்றி அமைக்கப்படல் வேண்டும். பணம் கொடுத்துக் கடவுள் அருளை வாங்கும் நிலைமை அறவே ஒழிக்கப்படல் வேண்டும். கோயிலைப் பேணுதற்கும் அங்கு பணியாற்றுவோருக்கும் பணம் வேண்டும்தான். ஆனால் அப்பணத்தை வழிபாட்டுக்குச் சீட்டுக் கொடுத் துப் பெறுதல் முறையாகாது வழிபாட்டு மொழி தமிழ் மொழியே ஆகவேண்டும். தமிழில் அர்ச்சனை செயதற்கு எதிர்ப்பு இப்பொழுதும் இருக்கின்றதென்றால், அதுவும் தமிழரென்று தங்களைக் கூறிக் கொள்வோர் சிலர் எதிர்க் கிறார்களென்றால் சமுதாயத்தில் அறியாமையும் ஆணவ மும் நீங்கவில்லை என்பதையும், ஏமாற்று வித்தையும் வாழ்வில் புகுந்துள்ள சுரண்டல் தந்திரமும் கைவிடப் படவில்லை என்பதையுமே இந்த எதிர்ப்பு நிலைநாட்டு கின்றது. கடவுள் வழிபாடு மட்டுமன்றிச் சைவ சமயச் சடங்குகள் யாவும் தமிழிலே தான் செய்யப்படல் வேண்டும். இதுதான் அறிவு வழி. இயற்கை நெறி.

சைவ சமய ஒழுகலாறுகளிற் புகுத்துள்ள கண் மூடிப் பழக்க வழக்கங்களைத் துணிந்து நீக்கிடல்

வேண்டும். ''விதி விதி'' என்று மக்களிடையே தாழ்வு மனப்பான்மையையும், சோம்பலையும், அறியாமையை யும் வளர்க்கக் கூடாது.

> ''காலத்தின் விதிமதியைக் கடந்திடுமோ என்றேன்
> காலமே மதியினுக்கோர் கருவியா மென்றாள்''

என்று பாரதியார் விதியை மதிக்கு அடிமையாக்கிக் காட்டினார்.

நமது சமுதாய வாழ்வைப் பாழாக்கி வந்தது இந்த விதிதான். மக்களிடையே பிறப்பினாலும், கல்விப் பொருள் செல்வப் பொருள்களாலும உயர்வு தாழ்வைக் கற்பித்து நிலைக்கச் செய்தற்குச் சமயத்தின் போர்வை யில் இந்த விதியைச் சமூக விரோதிகளும் தன்னலக் காரரும் நன்கு பயன் படுத்தியுளர்.

> ''ஊழையும் உப்பககம் காண்பர் உலைவு இன்றித்
> தாழாது உஞற்று பவர்''

என்றும்.

> ''தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்''

என்றும் திருவள்ளுவர் கூறியதையும் பொருட்படுத்தாமல் இந்த விதியை வைத்துக்கொண்டு சமூகப் புல்லுருவிகள் மக்களின் மதியைக் கெடுத்து வந்துள்ளனர்.

> ''அவ்வினைக்கு இவ் வினையா மென்று சொல்லும் அஃதறிவீர்
> உய்வினை நடாதிருப்பது உந்தமக் கூனமன்றோ
> கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
> செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீல கண்டம்''

என்று சம்பந்தர் முயற்சியினால் மனிதன் நல்ல வாழ்வு வாழலாம்—முன்செய் வினைகள் தீண்டாமல் வாழலாம்—என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார்.

"மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக் கியாதுமோர் குறையிலை
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்பதும் சம்பந்தர் அறிவுரை.

இந்த உலகத்திலே ஒவ்வொருவரும் உழைப்பினாலே தாம் எண்ணியபடி நலவாழ்வு வாழலாம் என்று ஊக்குவது சைவசமயம். இச்சமய நெறியின் உரிமையாளர் பலர் இன்று சமயத்தின் பெயரால் நெறியல்லா நெறிகளிற் சென்று வறுமையிலும் அறியாமையிலும் உழல்கின்றனர். இந்நிலைமையை மாற்றுதற்குச் சைவப்பெருமக்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

தான் வாழாமல்—பிறர் வாழச்—சமுதாயம் வாழ—இறைவனிடம இரந்தவர்கள் தமிழர்கள்.

"யாஅம் இரபபவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல,
நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே"

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் இறைவனிடம் வேண்டினர்.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன் றறியேன் பராபரமே"

என்றார் தாயுமானவர்.

> "எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவனென்று
> எவ்வுயிர்க்கும் அன்பா யிரு"

எனச் சைவ சமய நெறி பணிக்கின்றது.

அன்பு அருள் அறம் எனும் மூன்றின் அடிப்படையிலே தான் சைவம் மலர்ந்தது. அருளும் அறமும் அன்பில் அடங்கும். அன்பும் சிவமும் ஒன்று. சைவநெறி— சிவநெறி— அன்புநெறி — தமிழ்நெறி — தமிழ்மறைநெறி என்பன ஒரு நெறியையே— இறவாத இன்ப அன்புநெறியையே — குறிக்கின்றன.

> "அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
> அன்பே சிவமாவது ஆரும் மறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே"

என்பது திருமூலர் வாக்கு.

> "அன்புற் றமர்ந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
> என்போ டியைந்த தொடர்பு"

என்றார் திருவள்ளுவர். வாழ்வின் உயிர் நிலை அன்பு. சைவத்தின் உயிர் நிலையும் அன்பே. "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்றார் வள்ளுவர். அன்புடையார் பிறருடன் இனியன பேசி அவர்களுடன் இசைந்து வாழ்வர்; தம் பொருளைப் பிறர்க்கும் பயன் படுத்தி இன்புறுவர்; விலங்குகளிடத்தும் அன்பு கொள்வர். இத்தகைய இன்ப அன்புநெறியில் வாழ்தல் எல்லாருக்கும் இயைந்ததே. எவரும் இவ்வாறு அன்பு வாழ்வை - சைவ

வாழ்வை - வாழலாம் என்று திருமூலர் திறம்படச் செப்புகின்றார்.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"

இந்தத் திருமந்திரம் சைவப் பெருநெறியைத் தனி மனிதருடைய எளிய தூய அன்பு வாழ்வுடனும், சமுதாய வாழ்வுடனும் இணைக்கும் திறமைப்பாடு எண்ணி எண்ணி வியக்கத்தக்கது. இந்த ஒரு மந்திரமே சைவ வாழ்வுக்கு வழிகாட்டத் தக்கது; சமதர்மத்துக்கு வழிப் படுத்தத் தக்கது; சமூக நீதியை நிலைநாட்டத்தக்கது.

4

முதுமுதல்வன்

சைவநெறியாஞ் சிவநெறி தொல்குடித்தமிழ் மக்களிடை அளவிட்டு உரைக்க முடியாத காலத்தின் முன்னர்த் தோன்றியது. இந்த உண்மையை இப்பொழுது எவரும் மறுக்க முடியாது. சிவ வணக்கமும் இலிங்க வணக்கமும் உலகத்தின் பல பகுதிகளிலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பரவியிருந்தன என்பதை ஆராய்ச்சியாளர் நன்கு விளக்கியுளர். இந்துப்பள்ளத்தாக்கின் நாகரிக காலத்தில் சிவவழிபாடு நன்கு சிறந்து ஓங்கி மிளிர்ந்தது. இதனை மொகஞ்சதாரோ, ஆரப்பா முதலிய இடங்களிற் கிடைத்த புதைபொருள்களும் கல்வெட்டுக்களும் நிறுவியுள. இந்துப்பளளத்தாக்குநாகரிகம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாகும். இன்று உலகில் வாழும் சமயங்களில் மிகுந்த பழைமை உடையது சைவசமயமே. இதனைச சேர் யோன் மாசல் எனும் பேரறிஞரும் எடுத்துக்காட்டியுளர்.

சிவநெறியின் இத்தகைய பழைமையினையும் உலகமெங்கும் பரந்திருந்த பாங்கினையும், இந்நெறி தமிழ் நாட்டிலே தோன்றிய உண்மையையும் மாணிக்கவாசகர் இரத்தினச் சுருக்கமாகப் பின்வரும் ஈரடிகளிற் பொதிந்து விளக்கிய அருமைப்பாடு வியக்கத்தக்கது.

> "தென்னாடுடைய சிவனே போற்றி
> எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்பது அவருடைய அருள் வாக்கு. வேதங்களிலும் உபநிடதங்களிலும் சிவனுடைய முதன்மையும் பழைமையும் போற்றப்படுகின்றன.

ஏனைய நாடுகளில் ஏனையமொழிகள் வாயிலாக அறியப்படும் இந்த உண்மைகளை நம்முன்னோர் வகுத்த சைவநெறியினைப்பற்றிப் பண்டைத்தமிழர்கள் கொண்டிருந்த கருத்துக்களும் வலியிறுத்துகின்றன.

இப்பொழுது எமக்குக் கிடைக்கும் தமிழ் இலக்கியச் செல்வங்களுள்ளே மிகுந்த பழைமையுடையன சங்க நூல்களேயாகும். இவற்றிலே சிவபெருமானைப்பற்றிக் கூறப்படும் செய்திகள் பலவுள. இச்செய்திகளில், அக்காலத் தமிழ் மக்களுக்கு-இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்களுக்கு — அவர்களுடைய முன்னோரிடமிருந்து கிடைத்த பழஞ் செய்திகளுமுண்டு. எனவே, சங்ககாலத்துக்கும் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ் மக்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் இன்று எங்களுக்குச் சங்க நூல்கள புலப்படுத்துகின்றன எனலாம்.

சிவபெருமானுடைய திருவிளையாடல்கள், அவருடைய சடையிலுள்ள கங்கை, பாகத்திலுள்ள மங்கை, மூக்கண், பிறையணி, கொன்றைமாலை படை, கொடி, ஊர்தி முதலியன பற்றிய பல செய்திகளை இந் நூல்கள் எடுத்துரைக்கின்றன. இவற்றிலும் ஆராய்ச்சியாளருடைய உள்ளத்தைக் கவரத்தக்க புதுமையுடையவை சிவபெருமானுடைய பழமையையும் முதன்மையையும் தெளிவாகச் செப்புஞ் செய்திகளேயாகும்.

சங்ககாலத்திலே தமிழ் நாட்டிற் பல தெய்வ வணக்கம் நிலைத்திருந்தது. சிவனுடன் முருகன் திருமால், பலதேவன், இந்திரன், துர்க்கை, வருணன் முதலிய கடவுளர் பலரை மக்கள் வணங்கினர். சிறுதேவதைகளுக்குப்பலியிட்டு வணங்கும் வழக்கமும் காணப்பட்டது. எனினும் பொதுவாக அறிவுடைய

மக்களின் கருத்திலும், சிறப்பாகப் புலவர்களின் உள்ளத்திலும் சிவபெருமானே தமிழரின் "முதுகடவுள" என்பதும் "முதற்கடவுள" என்பதும நன்குபடிந்திருந்தன. சிவனை மட்டுமே அவர்கள் "முது முதல்வன்" எனப்போற்றினர்.

புறநானூற்றிலுள்ள ஒருபாடல் 'நன்றாய்ந்த நிமிர் சடை முதுமுதல்வன்" என்று சிவபெருமானுடைய பழைமையையும் முதன்மையையும் இணைத்து இயம்புகிறது. "பழையதிற் பழையோன் காண்க" எனும் திருவாசகத்துக்கு முன்னோடியாக இது விளங்குகிறது.

சிவபெருமான் கதையளவிலும் பிறப்பு இறப்பு இல்லாத முதுமுதல்வன் - முழுமுதல்வன், இதனை

> "கோணேசர் இல்லிற் பிறந்த கதையும் கேளேம்
> பேருலகில் வாழ்ந்துண்டு இறந்த கதையும் கேட்டிலோம்"

என அருணகிரி அந்தாதி குறிப்பிடுகின்றது. திருநாவுக்கரசர் "மூவாய் பிறவாய் இறவாய் போற்றி" என்கிறார்.

இந்தக் கொள்கையையும் "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரந்திருநாமம் பாடி" என மணிவாசகரும். "ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஓர் உவமனில்லி" எனத் திருநாவுக்கரசரும் திருவாய் மலர்ந்தருளிய உண்மைகளையும் விளக்கி, எல்லாவற்றையும் படைத்த முதுமுதல்வனுக்கு ஊர் பேர் நட்சத்திரம் உருவம் முதலியன யாவும் பின்னர் படைத்துக் கூறப்பட்டன என்பதைத் திட்ப நுட்பமாக விளக்குகின்றது பின்வரும் முத்தொள்ளாயிரத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்.

"மன்னிய நாண்மீன் மதிகனலி என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றென் றயருமால்
ஊர்திரை நீர்வேலி உலகு."

சிவபெருமானுக்குப் பிறப்பில்லை எனும் பேருண்மையைக் காளமேகப்புலவர் நகைச்சுவை ததும்பப் பாடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கண்ணபுரத்துத் திருமாலைப் பழித்துரைக்க எண்ணிய புலவர் "மாலே நீ கடவுளிலும் பெரியவன்; நான் உன்னிலும் பெரியவன்" என்றுரைத்துப் பிறப்புத் தொகையை வைத்துக் கணித்துச் சிவபெருமானுக்குப் பிறப்பில்லை என்பதை நிலைநாட்டுகின்றார்.

'கண்ணபுர மாலே கடவுளிலு நீயதிகம்
உன்னிலுமே யானதிக மொன்றுகேள்—முன்னமே
உன்பிறப்போ பத்தா முயர்சிவனுக் கொன்றுமில்லை
என்பிறப்பெண் ணத்தொலை யா."

அதிகமான் எனும் வள்ளல் கொடுத்த அருமையான நெல்லிக்கனியை அருந்திய ஔவையார் உள்ளங்கனிந்து அதிகமானை வியந்து வாழ்த்தியபோது "என்றும் நிலைத்து நிற்கும் ஒப்பற்ற சிவபெருமானைப் போல நிலைத்து வாழ்வாயாக" என்று பாடினார்.

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல மன்னுக."

இதுதான் ஔவையாரின் வாழ்த்துரை. "ஒருவனாக உலகேத்த நின்றவன்" எனும் அப்பர் வாக்கை ஔவையாரின் வாழ்த்துரை நினைவூட்டுகிறது.

தமிழகத்தில் பண்டைக்காலத்தில் சிவபெருமானுக்குப் பெருங்கோயில்கள் பல இருந்தன. இவை மிகப்பெருந் தோற்றமுடையனவாதலின் ''நகர்'' எனவும் பெயர் பெற்றன.

காரிகிழார் எனும் புலவர் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப்பாடிய பாடலிலே முனிவர் வணங்கும் சிவனுடைய கோயிலை வலம் வருதற்கு நின்கொற்றக் குடை தாழ்க'' என்று அறிவுரை பகர்கின்றார்.

''பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே''

என்பதே அந்த அறிவுரையாகும்.

சிவபெருமானே யாவர்க்குந் தலைவன் என்பதையும் அவனே உலக முதல்வன் என்பதையும் பத்துப்பாட்டில் ஒன்றான ''மதுரைக் காஞ்சி'' பின்வரும் அடிகளிலே திறம் பட விளக்கிக்காட்டுகிறது.

''நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவ னாக.''

சைவர்களாலே புறப்புறச் சமய நூல்கள் எனக் கருதப் படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கடவுளர்களையும் கோயில்களையும் வரிசைப்படுத்திக் கூறுமிடங்களிலே சிவபெருமானுக்கே முதலிடங் கொடுத்துள.

''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்

வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்''

எனக் காவிரிப்பூம்பட்டணத்திலுள்ள கோயில்களை முறைப்படுத்தி உரைக்கும் பொழுது சிலப்பதிகாரம் ''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்'' என்று சிவன் கோயிலையே முதலில் வைத்துக் கூறுகின்றது.

மதுரை மாநகரிலுள்ள கோயில்களை அடுக்கி முறைப் படுத்திக் கூறும்பொழுதும் இளங்கோ அடிகள் ''நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்...'' எனச் சிவன்கோயிலையே முன்னிறுத்திக் கூறுகின்றார்.

காவிரிப்பூம் பட்டிணத்திலுள்ளோர் வழிபட்ட தெய் வங்களைத் தனித்தனி கூறாமல், ''இவர் முதலாக இவர் ஈறாக'' என்று தொகுத்துக் கூற விரும்பிய சீத்தலைச் சாத்தனார் ''சிவபெருமான் முதலாகச் சதுக்கப் பூதம் ஈறாக'' என முதலிடத்தைச் சிவபெருமானுக்கும் கடைசி இடத்தைச் சதுக்கப் பூதத்துக்கும் கொடுத்துக் கூறும் திறப்பாடு எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

''நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக......''

என்பது அவர் கூற்று.

மணிமேகலையிலுள்ள இந்த அடிகள் மட்டுமே சிவபெருமானைத் தமிழ்நாட்டினர் அக்காலத்தில் ''முது முதல்வன்'' என்று வரலாற்றோடு பட உணர்ந்து வியந்து உருகிப் பாராட்டினமையை அழுத்தந் திருத்த மாகக் காட்டப் போதியனவன்றோ!

5

தம்பிரான் தோழர் *

மொழிக்குமொழி தித்திக்கும் தேவார திருவாசகங் களைப்பாடி உலகத்து மக்களுக்கு உய்யும் நெறியைக் காட்டிய சைவசமய முதல்வர்கள் நால்வராவர். அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் எனும் இந்நால் வரும் சிவனருளை நான்கு வழிகளிற் பெற்றனர். இந்த நான்கு வழிகளும் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சன்மார்க்கம், சகமார்க்கம் எனப்படும்.

அப்பர் தாச மார்க்கத்தினின்றும், சம்பந்தர் சற்புத் திர மார்க்கத்தினின்றும், மணிவாசகர் சன்மார்க்கத்தி னின்றும், சுந்தரர் சகமார்க்கத்தினின்றும் ஒழுகி முத்தி பெற்றார்கள். சகமார்க்கத்திலே நின்று முத்திபெற்ற சுந்தரர் ஆடிமாதத்தில் சோதி நட்சத்திரத்திலே கயிலையை அடைந்தார் என்பர்.

சுந்தரமூர்த்திநாயனாருக்குப் பல பெயர்கள் உள. அவற்றுளெல்லாஞ் சிறந்ததும், அவருடைய உயர்ந்த நிலையைக்காட்டுவதும் ''தம்பிரான் தோழர்'' எனும் பெயரேயாகும். மற்றைய நாயன்மார்களும் அடியார் களும் கடவுளுக்கு அன்பர்களாய், குழந்தைகளாய், அடியார்களாய் வாழ்ந்து முத்திபெறச் சுந்தரர் மட்டுமே தோழராக வாழ்ந்தார். தமிழிலே சமத்து வத்தைக் குறிக்கும் சிறந்த சொல் ''தோழன்'' என்பதே. அண்ணன், தம்பி, மாமன் முதலிய சொற்களெல்லாம்

---

*23.7.1950 இல் இலங்கை வானொலியில் நிகழ்த்திய உரை.

வேறுபாட்டைப் புலப்படுத்த, இந்தச் சொல் ஒன்றே சரிநிகர் சமனாக இருவரைத் தொடர்புபடுத்துகிறது. இதன் உண்மையை இராமனாலே தோழன் என்று அழைக்கப்பட்ட குகன் ''தோழன் என அவர் சொல்லிய சொல் ஒருசொல் அன்றோ'' என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் உரைத்தான்.

இத்தகைய பெருமைவாய்ந்த இச்சொல்லின் பொருளைச் சுந்தரருடைய தேவாரப்பகுதிகள் மிகத்தெளிவாகப்புலப்படுத்துகின்றன. ''தாயினும் நல்ல தோழருமாம் தம்பிரான்,'' ''என்னுடைய தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி'' எனுங் கூற்றுக்கள் தோழன் தாயினுஞ் சிறந்தவன், செய்யுங் குற்றங்களுக்கு உடன்படுபவன் என்பனவற்றைப் புலப்படுத்துகின்றன. இன்னும் சிவபெருமானே சுந்தரரைத் தோழனாகக் கொண்டார் என்பதையும் ''தோழமை அருளித் தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்'' எனுஞ் சுந்தரர் தேவாரப்பகுதி கூறுகிறது.

இவ்வாறு தம்பிரானுக்கு இனிய தோழராயிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் அடியார்களுக்கு அடியாராக இருந்தார் என்பதை நாம் அறியும் பொழுது சுந்தரருடைய தாழ்மையும், அன்பும் நன்கு விளங்குகின்றன. அன்பும், தாழ்மையுமே சைவத்தின் உயிர் நிலை. அந்தணர் குலத்து உதித்த சுந்தரர்—சிவனைத் தோழனாகப் பெற்றபெரியார்—தாழ்ந்த குலத்தவர்களாகிய நந்தனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோர்க்குத்தாம் அடிமை என்று கூறுகின்றார். ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன், திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்'' என்றுதொடங்கும் திருத்தொண்டத்தொகையைச் சுந்தரர் பாடினார். அடியார்க்கன்றி,

அடியார் அடியார்க்கும் அடியேன் என்றும் அவர்பாடி அடியார் பெருமையை நன்கு விளக்கியுள்ளார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகையே சைவ சமய நாயன்மார்களுடைய வரலாற்றை அறிதற்கு ஆதார மாயிருந்தது. இதனைத்தழுவியே நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியினை இயற்றினார். இவ்விரு நூல்களுமே சேக்கிழார் சுவாமிகள் தெய்வமணங் கமழப் பாடித்தந்த பெரியபுராணத்துக்கு முதனூல்களாக இருந்தன. ஆகவே அடியார் பெருமையை மாததிரமன்றி அவர்களுடைய வரலாற்றையும் நாம் அறியச் செய்தவர் சுந்தரரேயாவர்.

பெரியபுராணம் எனுங் காப்பியத்துக்கும் காப்பியத் தலைவராகச் சுந்தரமூர்த்திநாயனார் விளங்குகிறார். அடியார்களின் பெருமையைப் பாடத்தொடங்கிய சேக்கிழார் தமது நூலைக் காப்பிய இலக்கணங்கள் அமைந்த சிறந்த நூலாக்க விரும்பினார்; தக்க தலைவர் சுந்தரரே எனக்கொண்டார்; தமது காப்பியத்தின் தொடக்கத்திலும் இடையிலும் கடைசியிலும் சுந்தரர் வரலாற்றைக் கூறினார். தடுத்தாட்கொண்டபுராணம், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம், சேரமான் பெருமாணாயனார் புராணம், வெள்ளானைச் சருக்கம் என்பன சுந்தரருடைய சரிதத்தைக் கூறும் பெரிய புராணப் பகுதிகளாகும். ஒவ்வொரு சருக்க முடிவிலும் சேக்கிழார் சுந்தரரைப்பற்றிப் பாடியுளர். காவியத்துக்கு இன்றியமையாததாகிய காதல் மணத்தையும் சுந்தரருடைய வரலாறு மாத்திரமே சிறப்பாகக் கூறுகிறது. அடியார்கள் பெற்ற பேரின்பத்தைச் சிறப்பாகப் பாட வந்த சேக்கிழார் சிற்றின்ப வாழ்வையும் தமது நோக்கத்துக்கு மாறுபாடில்லாமற் பாடியுளர்.

சுந்தரருக்குப் பரவையார், சங்கிலியார் என இரு மனைவிகளுளர். இவ்விரு மனைவியரையும் காதல் மண முறைப்படி சுந்தரர் மணந்தார். எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் சிவன்றாளை மறவாத பெரு நோக்கத்தோடு வாழ்ந்த சுந்தரர் காதல் கொண்ட பொழுதும் கடவுளை மறவாதிருந்தார். காதல் நிகழ்ச்சிகள் கடவுள் முன்னே திருக்கோயிலிலே நடந்தன இதனைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் எவ்வாறு தீட்டிக் காட்டுகிறார் என்று பார்ப்போம்.

திருவாரூர்க் கோயிலில் சிவபெருமானை வணங்குதற்குப் பரவையார் போனார். கண்டாரைக் கவரும் அழகு நிறைந்தவர் அவர். இத்தகையரைச் சிவபிரானை வழிபட அக்கோயிலுக்குச் சென்ற சுந்தரர் கண்டார்; காதல் கொண்டார்.

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்கமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்று அதிசயித்தார்."

சுந்தரரைக் கண்ட பரவையார் என்ன நினைத்தார். சேக்கிழார் கூறுவதைக் கேளுங்கள்.

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பில் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேஎன் மனந்திரித்த இவன்யாரோ எனநினைத்தார்"

சுந்தரரும் பரவையாரும் பல்லாற்றானும் ஒத்த தலைவனும் தலைவியுமாவர்; அவர்கள் சிவனருளிலும்

நினைத்தவர்கள். இதனால் ஒருவரை ஒருவர் கண்ட பொழுது அவர்கள் மனத்திலே தோன்றிய எண்ணம் ஒரு தன்மையுடையதாகவே இருந்தது. பரவையாரைக்கண்ட சுந்தரர் ''கற்பகத்தின் பூங்கொம்போ'' என்று கூறி அவரைத் தெய்வயானை அம்மையார் எனக் கருதப் பரவையாரும் சுந்தரரை ''முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ'' என்று கருதினார். சுந்தரர், காமனது மனைவியாகிய இரதியோ என்று கருதினார். பரவை யாரும் ''தன்னேரில் மாரனோ'' என்று நினைத்தார். கடைசியாகச் ''சிவனருளோ'' என்று சுந்தரர் நினைக்கப் பரவையார் 'சிவனருள் பெற்றவனோ' என்று எண்ணி னார். இறுதியில் இருவரும் சிவனருள் என்று கருதியது அவர்களின் சிவசிந்தனையையும் உள்ளத்தின் உயர்வை யுங்காட்டுகிறது. அவர்களுடைய காதல்வெறுங்காதலாக முடிவடையாது சிவனருளுடன் முடிந்த காதலாக மாறு கிறது.

''புயல் சுமந்து விற்குவளை பவள மலர் மதிபூத்த விரைக்கொடியோ'' எனுந்தொடரில் பரவையாருடைய அழகைச் சுந்தரர் சிறப்பாகவுஞ் சுருக்கமாகவும் காட்டு கிறார். சுந்தரர் தமிழ்ப்பெரும் புலவர். இவருக்குப் ''பெருநாவலர்'' என்றும் பெயருண்டு. ஆகவே தமது தமிழ்ப் புலமைக்கேற்பப் பரவையாரை ஒரு மணம் நிறைந்த பூங்கொடியாக வரைந்து காட்டினார். இந்தப் பூங்கொடி ஓர் அற்புதமான கொடி. வில், குவளை, பவளம், மலர், சந்திரன் முதலியன அதிலே பூத்துள்ள பூக்கள். வில் பரவையாருடைய புருவத்தையும், குவளை கண்களையும், பவளம் வாயிதழ்களையும், மலர் முகத் தையும், பிறைச் சந்திரன் நெற்றியையுங் குறிக்கின்றன.

காதல் கொண்ட சுந்தரர் பரவையாரை ''ஈசனார் அருள்,'' ''எந்தையார் அருள்'' என்றே கூறினார். இரு

வரும் சிவபெருமானையே தங்கள் திருமணத்தை நிறைவேற்றுமாறு வேண்டினர். இதுதான் தெய்வசிந்தனை; பெரியபுராணத்தின் தெய்வமணம். சிவனருளால் இருவருக்கும் மணம் நிகழ்ந்தது. இன்பமாகச் சிவசிந்தனையுடன் வாழ்ந்து வரும்நாளில் ஒருநாள் திருவொற்றியூர்க்குச் சென்ற சுந்தரர் சிவன் திருமுன் சங்கிலியரைக் கண்டு காதல் கொண்டார்.

''மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின் கண்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காதல் உடையீர் அடியேனுக்கு
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடை அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீருமென''

வேண்டினார்.

சிவபெருமானே உமக்கும் இரு பெண்களுண்டு ஆதலின் எனக்கும் சங்கிலியாரைத் தந்தருள் செய்யும் என்று சிவனைக் கேட்டார். இம்மட்டுமா!

''எண்ணம் எல்லாம் உமக்கடிமை ஆமாறு எண்ணும் என் நெஞ்சில்
திண்ணம் எல்லாம் உடைவித்தாள் செய்வ தொன்றும் அறியேன்யான்
தண்ணிலா மின்னொளிர் பவளச் சடையீர் அருளும் எனத் தளர்ந்தார்.''

இந்தப் பாட்டினால் சுந்தரமூர்த்தி நாயனார் எப்பொழுதும் சிவசிந்தனை உடையவரென்பதும், அவருடைய மனம் சிவபெருமானிடத்து உறைப்பான பற்று உடையதென்பதும், வேறுவழிகளிற் செல்லாததென்பதும் நன்கு புலனாகின்றன. இவ்விடத்தில் தம்முடைய

மனத்தைப்பற்றி இராமர் கூறிய "ஆகும் நல்வழி அல்வழி என்மனம் ஏகுமோ" என்பது நினைவுகூரத்தக்கது. ஒன்று விட்டு ஒன்று பற்றி ஓடும் மனத்தை—காடும் செடியும் கால்விட்டோடும் மனக்குரங்கை-அடக்கி நல்வழியிற் செலுத்தி அமைதியும் இன்பமுங்காண மக்கள் யாவரும் முயலவேண்டும். இவ்வாறு செய்வதற்குத் தெய்வசிந்தனையை உண்டாக்கத்தக்கது நாயன்மார்களுடைய வரலாறுகளும் அவர்களுடைய அருட் பாடல்களுமேயாகும். இதனைச் சுந்தரமூர்த்தி நாயனாருடைய தேவாரங்களும் நன்கு புலப்படுத்துகின்றன. அவற்றுலே சிலவற்றைப் பார்ப்போம்.

இந்த உலகத்திலே மக்கள் பொருள் பொருள் என்று பித்துப பிடித்துப் பொருளினை ஈட்டிக் குவிக்க முயல்கிறார்கள். பொருளீட்டும் வழிகளில் மிகுபொருளை ஈட்டத்தக்கவழி வியாபாரமேயாகும். பொருளீட்டும் வாணிபத்திலும் அருள் ஈட்டும் வாணிபமே சிறந்தது. இளமையிலேயே சிவன் அருளைப் பெறமுயலவேண்டும். நரைவந்து, முதுகு கூனி, உரைதடுமாறும் வரையும் அருளை விட்டுப் பொருளை நாடுதல் கூடாது என்று சுந்தரர் அறிவுறுத்துகிறார்.

"புறம்திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீ உரையாற்றளர்ந்து
அறம்புரிந்து நினைப்பதாண்மை அரிதுகாண் இஃது அறிதியேல்
திறம்பியா தெழுநெஞ்சமே சிறுகாலை நாமுறுவாணிபம்
புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயம்தொழப் போதுமே"

என்பது அவர் திருவாக்கு.

நமது இவ்வுலக வாழ்வு நிலையில்லாதது. 'ஐந்திலுஞ் சாவு நூறிலுஞ் சாவு' என்பர். புல் நுனியிலிருக்கும் பனித்துளி சூரியனைக் கண்டவுடன் எவ்வளவு விரைவில் ஆவி

யாக மாறி விடுமோ அவ்வளவு விரைவாக அழியும் வாழ்க்கையே நமது வாழ்க்கை. 'நேற்று இருந்தவன் இன்று இல்லை எனும் பெருமை தான் இந்த உலகத்துக் குரியது' என்றார் வள்ளுவரும். இத்தகைய வாழ்வில் நாம் என்ன செய்கிறோம்; கடவுளை மறந்து விடுகிறோம். இன்றைக்கு என்ன செய்வது ? நாளைக்கு என்ன நடக்கப் போகிறது ? என்பவற்றை நினைத்து நினைத்து வருந்தித் துன்பத்தை அடைகிறோம். இந்த நிலையிலிருந்து நாம் தப்பும் வழி—உய்யும் நெறி யாது? சுந்தரர் காட்டுகிறார்.

''புல்நுனிப்பனி வெங்கதிர் கண்டாற் போலும்வாழ்க்கை
பொருளில்லை நாளும்
என்னெனக்கினி இற்றைக்கு நாளை என்றிருந்து இடருற்றலன்
எந்தாய்
முன்னமே உன் சேவடி சேரா மூர்க்கனாகிக் கழிந்தன காலம்
இன்னம்என்றனக் குய்வகை அருளாய் இடைமருதுறை எந்தை
பிரானே.''

என்றுவேண்டுகிறார் அவர்.

நான், எனது எனும் அகங்கார மமகாரங்கள் நம்மைக் கூத்தாடச்செய்கின்றன. இதனால் பல பாவங்களை நாம் கூசாமற் செய்கிறோம்; யாருந்தெருட்டினால், புத்தி கூறினால் அவற்றைக் கேட்பதில்லை ; கண்டதெல்லாம் பிதற்றுகிறோம் ; உலக வாழ்விலே பின்னி உழன்று சுழன்று களைக்கிறோம். நமது அறிவினைப் பயன் படுத்திக் கடவுளை நினைத்து, அவரை அடைந்தால் நாம் விடுதலை பெறுவோம்; இன்பம் பெறுவோம்; இதனைத் தம்பிரான் தோழர் தமது மனத்துக்குக் கூறுமாற்றால் வெளிப்படுத்துகிறார்.

''பாவமே புரிந்து அகலிடம் தன்னிற் பலபகர்ந்துஅல
மந்துஉயிர் வாழ்க்கைக்கு
ஆவென் றுழந்து அயர்ந்து விழாதே அண்ணல் தன்திறம்
அறிவினாற் கருதி
மாவின் ஈருரி உடைபுனைந் தானை மணியை மைந்தனை
வானவர்க் கமுதைத்
தேவ தேவனைத் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச்
சென்றடை மனனே''

கடவுளை நினைத்து அவரை வணங்காதவர்களைப் பேய்கள் என்கிறார் சுந்தரர். சிவனைச் சிறிது சிந்தித்தாலும் தாயினுஞ் சிறக்கத் தண்ணருள் புரிவார் என்றும் கூறி ஊக்கமூட்டுகின்றன அவருடைய தேவாரப்பாடல்கள்.

''நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த்திரிந்து எய்த்தேன் பெறலாகா அருள்பெற்றேன்
வேயார்பெண் ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர்
அருட் டுறையுள்
ஆயாவுனக் காளாய் இனி அல்லேன் எனலாமே''

என்பது ஆரூரர் முதலிற்பாடிய ''பித்தாபிறைசூடி'' எனுந் தேவாரத்துக்கடுக்கப் பாடிய பாடல்.

இன்னும் ''கசிந்தவர்க்கு இம்மையோடு அம்மையில் இன்பம் பெருக்கு நம்பி'' என்றும், ''அன்பிலரேனும் எம்பெருமான் என்றெப்போதும் அழைத்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச் சிராமத்து அடிகள்'' என்றும் சிவனின் பெருங்கருணைத்திறத்தை நமக்கு எடுத்துக் காட்டியுளர் அவர்.

''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசனும் பாடிய நற்றமிழ் மாலை, சொல்லியவே சொல்லி ஏத்துகப்

பானைத் தொண்டனேன் அறியாமை அறிந்து, கல்லியல் மனத்தைக் கசிவித்துக் கழலடி காட்டியென் களைகளை அறுக்கும் வல்லியல் வானவர் வணங்கா நின்றானை வலி வலந் தன்னில் வந்து கண்டேன்'' எனுந் தமது தேவா ரத்தில் அப்பர் சம்பந்தருடைய தேவாரங்களின் பெருமை யைச் சுந்தரரே எடுத்துக் கூறியுள்ளார். கடவுளருளைப் பெறுதற்கு அவர்களுடைய தேவாரங்கள் மிகச் சிறந்தன என்று அவர் கூறியது அவருடைய தேவாரங்களுக்கும் பொருந்தும். இத்தகைய தேவாரங்களைப் படித்துப் பயன் பெறாதவர்கள் சைவர்களாயிருப்பதால் பயனில்லை. காலையும் மாலையும் சமயம் வாய்க்குந் தோறும் உள்ளத்தை ஒடுக்கி உத்தமனாகிய சிவனை நினைந்து தேவாரங்களை ஓதினால் இவ்வுலகிலே சிறந்த இன்பத் தையும் ஞானத்தையும் பெறலாம்.

இன்றைய பேச்சை முடிக்குமுன் தம்பிரான்தோழர் நமக்குத் தந்தருளிய நகைச்சுவை நிறைந்த ஒரு தேவா ரத்தை நினைவூட்ட விரும்புகின்றேன். திருஓண காந்தன் தளி எனும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெரு மானை ஒருகேள்வி கேட்கிறார் அவருடைய தோழர் சுந்தரர். ''ஓய் கடவுளே! நீர் வாழ்வது ஆரூர். அஃதாவது யாரோ ஒருவருடைய ஊர். ஒற்றியூரும் உம்முடையதன்று. ஏனெனில் அதனை ஒற்றி வைத்து ஒற்றியூராக்கிவிட்டீர். உமது மார்பிலுள்ள மாலை பாம்பு. உமது ஊரோ காடு. உடுத்திருக்கும் ஆடை வெறுந்தோல். தலையிலோ ஒருபெண்ணைச் சுமந்து திரிகிறீர். இத்தகையரான உம்மிடத்தில் அன்புகொண்டு தொண்டு செய்யும் அடியாருக்கு நீர் என்ன கொடுப்பீர்? ஓட்டாண்டியாகிய உம்மிடம் கொடுக்கத்தான் என்ன இருக்கிறது?'' இவ்வளவையும் கூறும் பாடல்.

"வாரமாகித் திருவடிக்குப் பணிசெய்தொண்டர் பெறுவ தென்னே ?
ஆரம்பாம்பு, வாழ்வதாரூர், ஒற்றியூரேல் உம்மதன்று,
தாரமாகக் கங்கையாளைச் சடையில்வைத்த அடிகேள் உந்தம்
ஊரும்காடு, உடையுந்தோலே, ஓணகாந்தன் தளியுளீரே."

என்பது. இதில் பழிப்பது போலத் தமது தோழரின் பெருமையைப் புகழ்ந்தார் சுந்தரர்.

6

திருமுருகாற்றுப்படை *

"குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலையப் பூதப் பொருபடையாய்— என்றும்
இளையா யழகியாய் ஏறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை."

சிறந்த அறிவும், பரந்த கேள்வியும், விழுமிய ஒழுக்கமும் உடைய அவைத் தலைவர் அவர்களுக்கும் அவையோருக்கும் எனது வணக்கம் உரித்தாகுக.

சிற்றம்பலமேய செல்வன் கழலேத்தும் செல்வர்களே ! இந்தச்சைவ இளைஞர் மாநாட்டில் ஒருவிரிவுரை நிகழ்த்துமாறு என் அன்பரும் நண்பரும் இச்சங்க அமைச்சருமான திரு. மு. மயில்வாகனம் என்னைக் கேட்ட பொழுது நான் அவர் கேள்விக்கிசைந்தேன். அவர் யான் பேச விரும்பும் பொருளைப் பற்றிக் கேட்டார். யான் வேறு இரண்டு பொருள்களோடு மூன்றாவதாகத் திருமுருகாற்றுப்படையையும் குறிப்பிட்டு அவ்விரண்டு பொருள்களுள் ஒன்றைப்பற்றிப் பேசுவதுதான் என்விருப்பம் என்பதையும் அவருக்குணர்த்தினேன். ஆனாலும், அவர் திருமுருகாற்றுப்படையைப்பற்றி என்னைப் பேசும்படி கேட்டார். இளைஞர் மாநாட்டில் இளைஞனாகிய யான் என்றும் இளைஞனாகிய முருகக் கடவுளைப்பற்றிப் பேசுதல் ஏற்புடைத்தென எண்ணி அதற்கொருப்பட்

---

* யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்திலங்கைச் சைவ இளைஞர் மாநாட்டில் 6-1-1940 இல் நிகழ்த்திய உரை.

டேன். ஆனால் மாநாட்டின் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாநாட்டின் அமைச்சர், முருகக் கடவுள் மேற்பாடப்பட்ட நூலைப்பற்றிப் பேசும்படி என்னை கேட்டதில் ஒரு பொருத்தம் புலப்படுகிறது. மயில் வாகனம் முருகனுக்குரியதன்றோ? ஆகையால் அது முருகன் மேல்பாடப்பட்ட நூலைப்பற்றிப் பேசும்படி தானே கேட்கும். மாநாட்டிற்குத் தலைமை தாங்கவும் ஒரு சுப்பிரமணியரையன்றோ மயில்வாகனம் அழைத் திருக்கிறது.

அன்பர்களே! நான் முன்னர்க் கூறியபடி எனது சொற்பொழிவை இளைஞர்கள் முன்னிலையிலே நிகழ்த் துவதென்று சிறிதும் அச்சமின்றி வந்தேன். ஆனால் இங்கே குழுமியிருக்கும் உங்களை—ஆண்டாலும் அனு பவத்தாலும் அறிவாலும் மிக்க உங்களைப் பார்க்கும் பொழுது உங்களுக்கு எவற்றை எடுத்துக் கூறலா மென்றஞ்சுகின்றேன. உங்களுக்குள் பெரிய பண்டிதர் கள் இருக்கிறார்கள், புலவர்களிருக்கிறார்கள், சித்தாந்த சாத்திர வல்லுநர்களிருக்கிறார்கள், இசைவிரும்பினவர் களும், புராணக்கதை விரும்பினவர்களும் பலர் இருக் கிறார்கள். எனது கூற்றின் நிறை குறை கூறவும் சிலரிருக் கிறார்கள். இபபடிப்பட்ட பல திறத்தினரையும் எவ் வாறு என்சிற்றுரையால் நிறைவு பெறச் செய்வேன். யான் பேச எடுத்துக் கொண்ட திருமுருகாற்றுப்படையின் இலக்கியச் சிறப்புக்களையா சித்தாந்தசாத்திரக் கருத்துக் களையா, முருகன் அருளின் பெருமைகளையா சிறப்பாக எடுத்து விரித்துரைப்பது எனுமையமும் என் அச்சத்தைக் கூட்டுகிறது. எனினும், ''ஒரு பெரும் பூதத்தினின்றும் தப்புதற்கு தக்கீரர் யாடிய நூலைப்பற்றிக் கூறும்பொழுது, உங்களுக்கேன் அஞ்சவேண்டும். அப்பூதத்திலும்

பார்க்கப் பெரிய பூதங்கள் இங்கில்லையே.'' எனு மெண்ணம் என்னச்சத்தைக்குறைக்க முருகன் திருவருளும் உங்கள் அன்புங்கொண்டு என் சிற்றறிவிற்கியன்றவரை சில கூறுகின்றேன். குற்றங்களைந்து குணங்கொள்மின்.

மெய்யன்பர்களே! ''திருமுருகாற்றுப்படை'' என்பது கடைச் சங்கம் மருவிய பத்துப்பாட்டு நூல்களுள் முதலாவது பாட்டாகும்.

''முருகு பொருநாறு பாணிரண்டு முல்லைப்
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.''

எனும் வெண்பா பத்துப்பாட்டு நூல்களை விரித்துக் கூறுகிறது. இப்பத்துப்பாட்டுக்களுள் திருமுருகாற்றுப் படையும் பெரும்பாணாற்றுப்படையும், சிறுபாணாற்றுப் படையும், பொருநராற்றுப்படையும் ஆற்றுப்படை களாம். ஆற்றுப்படை என்பது வழிப்படுத்தல். ஆற்றுப் படைகளின் இலக்கணம் ''தாவினல்லிசை'' எனுந் தொல்காப்பியச் சூத்திரத்தில்,

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்''

எனக்கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாற்றுப்படைகளுள் திருமுருகாற்றுப்படை

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

எனுந்தொல்காப்பியச் சூத்திரத்திற் கூறப்பட்ட கந்தழியைப் பெற்றானொருவன், அதனைப்பெற விரும்பிய ஒருவனை ஆற்றுப்படுத்தலைப் பொருளாகக் கொண்டது. கந்தழியாவது ஒருபற்றுமற்று அருவாய்த்தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருள். இதனை

"உற்றவாக்கையி னுறுபொருள் நறுமல ரெழுதரு நாற்றம்போற்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்"

எனுமறிஞர் கூற்றானறிக, இத்திருமுருகாற்றுப்படை புலவராற்றுப்படையெனவும் கூறப்படும்.

திருமுருகாற்றுப்படை என்பதில் திரு, முருகு, ஆறு படு எனும் நான்கு சொற்களுண்டு. திரு, எனும் பல பொருளொருசொல் தேவர்களுக்கும், அடியார்களுக்கும், புண்ணியத் தலங்கள் நிறை நூல்கள் முதலியவற்றுக்கும் அடையாகி அவற்றின்முன் மகிமைப் பொருளுணர்த்தி வரும். திருமால், திருவாசகம், திருநாவுக்கரசர், திருவாரூர் திருவடி முதலியன காண்க. முருகனெனும் பண்பிப் பெயர் முருகு எனும் பண்புப் பெயராய் நின்று அப்பண்பிப் பொருளையே தந்துநின்றது. ஆறு, படு எனுமிரு சொற்களும் ஆற்றுப்படு என

ஒரு சொல்லீறாமைப்பட்டு, "ஐ" எனுந் தொழிற் பெயர் விகுதியுடன் புணர்ந்து ஆற்றுப்படை என்றாயின. "திருமுருகாற்றுப்படை" என்பதன் சொற்பொருள் திருமுருகனிடத்தில் ஆற்றுப்படுத்தல என்பதாகும்.

இத் திருமுருகாற்றுப்படை முருகக் கடவுள்மேல் நக்கீரரால் பாடப்பட்டது. முருகக் கடவுளைக் குறிஞ்சி நிலக் கடவுளாகப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. "சேயோன் மேயமைவரை உலகம்" என்பது தொல்காப்பியம். திருமுருகாற்றுப்படையிலும், "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" எனக்கூறப்பட்டிருக்கிறது. குறுந்தொகை முதற்பாட்டும் பரிபாடலில் எட்டுப்பாடல்களும் முருகக்கடவுளை வணங்கும் பாடல்களாகக் காணப்படுகின்றன.

இவற்றைவிட முருகக்கடவுளை வழிபடும் முறைகளும, அவரின் படைவீடுகளின் பெருமையும், அவர் சூரனை வதைத்த செய்தியும், பிறவும் பழந்தமிழ் நூல்களில் இடையிடையே காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைப் பொருத்தமான இடங்களில் எடுத்துக் காட்டுவேன்.

முருகக் கடவுள் குறிஞ்சிநிலக் கடவுளாக மாத்திரமன்றித் தமிழ்க் கடவுளாகவும் விளங்குகின்றார். எங்கள் தமிழ்த் தாய்க்கும் முருகக் கடவுளுக்கும் பலதொடர்புகள் உண்டு. முருகனைப் போலவே எங்கள் தமிழ்த்தாயும் என்றும் இளமையுடையவளாய் - கன்னியாய் விளங்குகிறாள்.

முருகக்கடவுள் அகத்தியருக்குத் தமிழ் அறிவுறுத்தினார் என்றும், தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தா

ரென்றும், தமிழின்மேற் கொண்ட ஆசையால் உக்கிரப் பெருவழுதியாக அவதரித்தாரென்றும் நூல்கள் கூறுகின்றன. இத்திருமுருகாற்றுப்படையின் ஆசிரியராகிய நக்கீரர் இறையனார் களவியல் என்னும் நூலுக்குக் கண்ட உரையை மெய்யுரையெனப் பாண்டியனுக்கும் புலவர்களுக்கும் அறிவித்த உருத்திரசன்மனென்னும் மூங்கைப் பிள்ளையும் முருகக் கடவுளே என்பர் இதனை,

''திருத்தகு மதுரை தன்னிற் சிவன்பொரு ணிறுக்கு மாற்றால்
உருத்திரசன்ம னாகி யுற்றெழும் நிமலன்''

எனக் கந்த புராணம் கூறுகிறது.

இனி, இத் திருமுருகாற்றுப்படையை இயற்றிய நக்கீரரைப்பற்றியுஞ் சிலகூறி மேற்செல்லுதும், நக்கீரரை நினைக்கும் பொழுதெல்லாம் ''நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'' என அவர் சிவபெருமானோடு எதிர்த்த செய்தியும், அவரது வீரமும், தமிழ்ப்புலவர்கட்கியல்பாயுள்ள அஞ்சாநெஞ்சும் என்மனக்கண் முன்னே தோன்றுவதுண்டு.

பரிசில் கொடுக்கக் காலம் தாழ்த்திய அரசனை நோக்கி,

இரவலர் புரவலை நீயு மல்லை
புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர்''

எனக்கூறிய தமிழ்ப்புலவரின் வீரம் என்னே! சோழனோடு மாறுபட்டபொழுது கம்பர் அஞ்சா நெஞ்சுடன்

''மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்-என்னை

விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு''

எனக்கூறி அவனைப் பிரிந்து சென்ற செய்தியை உணரும் பொழுது கோழைகளுக்கும் வீரமுண்டாகுமன்றோ!

எங்கள் ஆறுமுகநாவலர் பெருமானின் வீரச் செயல் களை எடுத்துக் கூற யாரால் முடியும்? அவர் எழுதிய கண்டனங்களை உற்று நோக்கின் அவரது அஞ்சாமை நன்கு விளங்கும். கிறித்துவ சமயத்தைத தலைகாட்டா தொடுக்கிய அவரது வீரச்செயலைப் புகழாதோர் உளரோ?

வரகவியாகிய சுப்பிரமணிய பாரதியாருடைய வீரம் அவருடைய பாட்டுக்களில் ஒவ்வொரு அடியிலும், ஒவ் வொரு சொல்லிலும் புலப்படுகின்றது. அவரது வீரப் பாடல்களைப் பாடினால்-கேட்டால் யாவர்க்கும் வீரம் உண்டாகுமன்றோ?

அன்பர்களே! ஒருமொழியைப் பேசும் மக்களுடைய வீரம் அம்மொழிப் புலவர்களுடைய வீரத்தையே சார்ந் துளது. தமிழ்ப்புலவரிடத்து விளங்கிய வீரமன்றோ தமிழ் மக்களிடத்து விளங்குகின்றது. தமிழ்ப்புலவர்கள் வீரம் நிறைந்தவர்களாயிருக்காவிடில் அவர்களுடைய பாடல்களையும் நூல்களையும் படிப்புவர்களுக்கு வீரம் உண்டாகுமா? புறநானூற்றில் காணப்படும் தமிழ்ப் பெண்கள் சிலருடைய வீரச்செயல்களுக்குத் தமிழ்ப்புலவர் களுடைய வீரமே காரணம்; இதனை நீங்கள் நன்கு

உணர்ந்து எங்கள் புலவர்கள் ஈட்டித்தந்த வீரத்தை ஓம்பி வளர்க்க வேண்டும்.

கடைச்சங்கப் புலவர்களுள் நக்கீரரும் ஒருவர். இவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனவும் கூறப்படுவர். பத்துப்பாட்டுக்களுள் திருமுருகாற்றுப் படையையும், நெடுநல்வாடையையும் இவரியற்றியுளர். இன்னும் நற்றிணை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை முதலியவற்றில் சில பாடல்களும், பதினொராந் திருமுறையிற் பத்துப் பிரபந்தங்களும் இவர் இயற்றியன வாகக் காணப்படுகின்றன. இவருடைய வரலாறு மிக விரிந்தது. திருவிளையாடற் புராணங்கள், சீகாளத்திப் புராணம், கல்லாடம் முதலியவற்றில் இவருடைய வரலாறு காணப்படுகிறது. விரிப்பிற் பெருகுமாதலின் விடுத்து இவர் இத் திருமுருகாற்றுப்படையை இயற்றிய வரலாற்றைச் சிறிது கூறுதும்.

சிவபெருமானால் சபிக்கப்பெற்றுக் கயிலை காணச் சென்ற நக்கீரர் இமயமலைக்கு அண்மையிலேயுள்ள ஒரு பெருங் காட்டினுள் போகும் பொழுது ஒரு தடாகத்தைக் கண்டு நீராடிச் சிவபூசைசெய்து கொண்டிருந்தார். அவ்வாறிருக்கையில் அத்தடாகக் கரையிலுள்ள தெய்வத் தன்மையுள்ள ஓர் ஆலமரத்தினின்று ஒரு பழுத்த இலை பாதி நீர்ப்புறத்திலும் பாதி நீரிலுமாக விழுந்தது. நீர்ப் புறத்து விழுந்த பாதி பறவை வடிவமும், நீரில் மிதந்த பாதி மீன்வடிவமுமடைந்து இருபக்கமும் இழுக்க நக்கீரர் அவ்வற்புதமான நிகழ்ச்சியிலே மனத்தைச் செலுத்தினார். செலுத்தலும் சிவபூசைக்கு இழுக்கு உண்டாயிற்று.

நக்கீரரைப் போலவே சிவபூசையில் வழுவின தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒரு மலைக் குகையில் அடைத்து வைத்து, இன்னும் ஒருவர் வேண்டுமெனக் காத்திருந்த ஒரு பூதம் நக்கீரரை எடுத்துக் கொண்டுபோய் அக்குகையில் அடைத்து வைத்துவிட்டு அவ்வாயிரவரையும் உண்ணக் கருதி நீராடப் போயிற்று.

முன்னே அக்குகையில் அடைபட்டிருந்தவர்கள் நக்கீரரைப் பார்த்து ''நாங்கள் நெடுங்காலம் இக்குகையில் அடைபட்டிருந்தும் பூதம் நல்கிய உணவையுண்டு உயிர் வாழ்ந்திருந்தோம். இன்று உம்மாலேயே நாங்கள் இப் பூதத்துக்கு இரையாகப் போகிறோம்,'' என்றுரைத்தனர். உடனே நக்கீரர் தம்மையுள்ளிட்ட ஆயிரவரும் உயிர் கொண்டு தப்பவேண்டி, முருகக்கடவுள் மேல் இத்திருமுருகாற்றுப்படையைப் பாடினார். பாடி முடித்தவுடன் முருகக்கடவுள் அவர்களைக் காப்பாற்றியருளினார். இது வழி வழி வந்த கதை திருமுருகாற்றுப்படையின் பெருமையைப் புலப்படுத்தக் கட்டப்பட்ட கதை.

அன்பர்களே! இதுவரையும் திருமுருகாற்றுப் படையின் அமைப்பையும் பாடப்பட்டோர்—பாடினோர் வரலாற்றையும் கூறினேன்; இனி நூலைப்பற்றியும் அதன் சிறப்புக்களைப் பற்றியும் சில கூறுகிறேன்.

திருமுருகாற்றுப்படை முந்நூற்றுப் பதினேழு அடிகளையுடையது; முத்தியைப் பெற்றானொருவன் முத்தியைப் பெறுதற்குத் தக்க ஒருவனை முருகக்கடவுளிடத்தே வழிப்படுத்தியதாகப் பாடப்பட்டது. முத்தியைப் பெற்றவன் பெறத்தக்க ஒருவனுக்கு முருகக்கடவுளுடைய தெய்வ

ஒளியையும், திருக்கரங்களையும், திருப்பாதங்களையும், கடப்பமாலை புரளும் மார்பையும், காந்தள் மலரணிந்த திருமுடியையும், அவர் சூரனைக் கொன்ற செயலையும் பற்றிக் கூறி, அப்படிப்பட்ட முருகனுடைய திருவடியடை தலாகிய முத்தியை விரும்பின் இப்பொழுதே பெறுவா யெனுங் கருத்துப்பட,

"செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்மலுள் ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே" என்று கூறு கின்றான்.

இவ்வாறு கூறியவன் "நீ அக்கடவுளை அடைந்து வழி பட்டே முத்தியைப் பெறவேண்டுமாகையால் அவர் எழுந் தருளியிருக்கும் சிறந்த புண்ணியத் தலங்களை அறிந்து கொள். அவர் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளுதலுமுரி யர்; அதுவுமன்றித் திருச்செந்தூரிலும் எழுந்தருளுதலு முரியர்; அதுவுமன்றித் திருவாவினன்குடியிலும்எழுநதருளு தலுமுரியர்; அதுவுமன்றித் திருவேரகத்தின் கண்ணே எழுந்தருளியிருத்தலுமுரியர். அதுவுமன்றி மலைகள் தோறும் விளையாடுதலும் அவரதியல்பு. ஊர்தோறும் எடுக்கும் திருவிழாவிலும், வேலனுடைய வெறியாடு களத்திலும், காட்டிலும், சோலையிலும், ஆற்றிடைக் குறையிலும், நதிகளிலும், குளங்களிலும், வேறுபல ஊர் களிலும், நாற்சந்தியிலும், முச்சந்தியிலும், கடம்பிலும்

ஊருக்கு நடுவே பலர் கூடும் மரத்தடியிலும், அம்பலத்திலும், ஆத்தீண்டு குற்றியை உடைய இடத்திலும் எழுந்தருளியிருத்தலுமுரியர்.

இவ்விடங்களிலேனும் பிறவிடங்களிலேனும் நீ அவரைக் கண்டவுடன் முகமலர்ந்து துதித்து, கைகுவித்து வாழ்த்தி, அவருடைய பாதங்களையுன் சிரசின் மேலணிந்து, வணங்கிப் பலவாறு புகழ்ந்து, "உம்முடைய பெருந்தன்மைகளை ஒருவராலும் அளவிட்டறியமுடியாது. ஒப்புயர்வில்லாத மெய்ஞ்ஞானமுடைய பெருமானே! உம்முடைய திருவடியைப் பெற விரும்பிவந்தேன்' என்று நீ முறையிடுதல் வேண்டும். உடனே அவருடைய பரிசனர் தோன்றி உனக்கு முத்தி கொடுத்தருளும்படி, உன்பொருட்டு முருகக்கடவுளை வேண்டுவர். பழமுதிர் சோலைக்குரிய அவனுந் தன்னிளைய வடிவத்தைக் காட்டி, முத்திபெறவந்த நின்வரவை யாமறிவோம். அஃது உனக்குக் கிடைத்தல் அரிதென்று அஞ்சாதே! என அன்புடன் பலகூறி மிகப் பெரிய திருவருளாகிய பரிசிலைத் தருவான்" எனக் கூறுகின்றான்.

முருகக்கடவுள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை குன்றுதொறாடல் எனும் ஆறுபடை வீட்டிலும் எழுந்தருளியிருத்தல் பாராட்டிக் கூறப்பெற்றிருக்கிறது. இப்படை வீடுகளாறும் இம்முறைப்படியே கந்தபுராணக் கடவுள் வாழ்த்திலும், கந்தரந்தாதியின் முதற் செய்யுளிலும் அமைத்துப் பாடப்பெற்றுள்ளன.

"ஆறுதிருப் பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே"

என்பது கந்தர் கலிவெண்பா.

சிலப்பதிகாரத்தில் "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும். ஏரகமும் நீங்கா இறைவன்" எனக் கூறப் பட்டிருக்கிறது.

திருப்பரங்குன்றம் மதுரைக்கு மேற்கே உள்ளது இதில் செவ்வேள் எழுந்தருளியிருப்பது பழந்தமிழ் நூல் களிலும் கூறப்படுகிறது.

"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற்
சீர்மிகு முருகன் றண்பரங் குன்றத்து"

என்பது அகநானூறு.

"ஒன்னாதார்க் கடந்தடு உரவு நீர்மாகொன்ற
வெண்வேலான் குன்றின்மேல் வைத்து"

என்பது கலித்தொகை.

முருகப்பெருமான் திருச்சீரலைவாய் எனும் திருச் செந்தில் பதியில் எழுந்தருளியிருப்பது,

"வெண்டலைப் புணரியலைக்குஞ் செந்தில் நெடுவேள்
நிலைஇய காமர் வியன்துறை"

எனவும், "நஞ் செந்தின்மேய வள்ளி மணாளர்க்குத் தாதை" எனவும் பழந்தமிழ்ப்புலவர்களால பாடப்பட் டுள்ளது.

முருகக்கடவுள் யானைமேல் திருச்செந்தூருக்கு எழுந்தருளும்போது அவருடைய ஆறுமுகங்களுஞ் செய்யும் தொழில்களுக்கேற்பப் பன்னிருகைகளும் தொழிற்படல் சிறப்பாகப் பாடப்பட்டிருக்கிறது.

முதலாவது முகம் உலகம் மாசின்றி விளங்க ஒளி வீசியது. சூரியனுடைய வெம்மையை உலகத்திலுள்ள உயிர்கள் தாங்கமாட்டாவென்று நினைத்து, முனிவர்கள் சிலர் அதனுடன் திரிந்து அதன் வெம்மையைத் தாங்குகின்றனர். ''நிலமிசைவாழ் நரலமரல் தீரத்-தெறுகதிர் கனலி வெம்மை தாங்கிக்-காலுணவாகச் சுடரொடு கொட்குமவிர் சடைமுனி வருமருள்'' எனப் புறநானூறு கூறுகின்றது. அம்முனிவர்களைப் பாதுகாத்தாலே உலகத்துக்கு வேண்டிய ஒளி கிடைக்கும். ஆகவே, முதலாவது முகத்துக்குரிய கைகளிரண்டில் ஒன்று, ஆகாயத்தில் இயங்கும் முனிவர்களுக்குத் தீங்குவராமல் பாதுகாத்தது; மற்றையது வேறுதொழிலின்மையால் மருங்கிலே கிடந்தது.

இரண்டாவது முகம் அன்பர்கள் வணங்க அவர்களுக்கு வேண்டிய வரங்களைப் பெருமகிழ்வுடன் கொடுத்தது. இத்தொழிலின் பொருட்டு எம்பெருமான் யானை மீதேறி அன்பர்களிடம் செல்லுவாராகையால் இம்முகத்திற்குரிய இருகைகளிலொன்று யானையை ஓட்டும் அங்குசத்தைச் செலுத்த மற்றக்கை தொடையிற் கிடந்தது.

மூன்றாவது முகம் மந்திரவிதிப்படி செய்யப்படும் வேள்விகளுக்குத் தீங்குவராமற் பாதுகாத்தது. இம்முகத்தின் தொழிலினிது நிறைவேற அசுரர்கள் வந்து வேள்வியை அழியாமல் அவர்களை ஓட்டல் வேண்டும். இதனால் இம்முகத்துக்குரிய கைகளில் ஒன்று பரிசாயுதத்தையும் மற்றது வேலாயுதத்தையும் சுழற்றின.

நான்காவது முகம் வேதாகமங்களில் மறைந்து கிடந்த பொருள்களை ஆராய்ந்து மாணாக்கர்க்கு அறிவித்தது.

இத்தொழில் புரியும் பொழுது மாணவர்களுக்கு உரையிறந்த பொருளை விளக்குவதற்காக மௌனமுத்திரை காட்டி அமரவேண்டும். இதனால் இம்முகத்திற்குரிய கைகளில் ஒன்று மௌன முத்திரை காட்டி மார்பினொடு விளங்க, ஒருகை மாலையோடு சேர்ந்து விளங்கியது.

ஐந்தாவது முகம் அசுரர்களை அழித்துப் போர்க்கள வேள்வியை வேட்டது. களவேள்வி வேட்டற்கு மணியொலித்தலும் வேள்வி வேட்கும் முத்திரை கொடுத்தலும் வேண்டுமாகையால் இம்முகத்திற்குரிய கைகளில் ஒன்று மணியை ஒலிக்க, மற்றையது மேலே சுழன்று முத்திரை கொடுத்தது.

ஆறாவது முகம் வள்ளிநாயகியாரோடு நகையாடியது. இம்முகம் உலகத்தில் இல்வாழ்க்கையை நிகழ்த்துவிப்பது.

''தென்பாலு கந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பாலு கந்திலனேற் பேதாயிரு நிலத்தோர்
விண்பா லியோகெய்தி விடுவர்காண் சாழலோ''

என மணிவாசகர் திருவாய்மலர்ந்தருளினமையும் காண்க. இல்லறம் இனிது நடக்க மழை இன்றியமையாதது. திருவள்ளுவரும் மழையின் இன்றியமையாமையை ''வான்சிறப்பு'' எனுமதிகாரத்தில் மிகச் சிறப்பாகக் கூறியிருக்கிறார். ''உண்டிகொடுத்தோ ருயிர் கொடுத்தோரே'', ''உணவெனப்படுவது நிலத்தோடு நீரே'' எனும் பழந்தமிழ்ப்புலவர்களுடைய கூற்றுக்களையும் நோக்குக. பகவத்கீதையில் பார்த்தசாரதியும் உலகத்

துயிர்கள் அன்னத்தாலுண்டாகின்றன. அன்னம் மழையாலுண்டாகின்றதெனக் கூறியுள்ளார்.

ஆகவே, இல்லறம் இனிது நடத்தற்காக இம்முகத்திற்குரிய கைகளில் ஒன்று மழையைப் பெய்வித்தது. மற்றையது இல்வாழ்க்கையை நிகழ்த்தற் பொருட்டு மணமாலையைச் சூட்டியது. இந்த ஆறுமுகங்களின் செயல்களும் பன்னிருகைகளின் செயல்களும் இவ்வாறே கந்தர்கலி வெண்பாவிலும் கூறப்பட்டுள.

முருகக் கடவுள் அசுரரைக் கொன்று தேவரைக் காத்துத் தெய்வயானையைத் திருமணம் செய்தகாலை தமது திருக்கரத்திலிருந்த வேலை நோக்கி ''நமக்கு எல்லாந் தந்தது இவ்வேல்'' என்றார். அது கேட்ட பிரமன் ''இவ்வேலுக்கு இந்நிலை என்னால் வந்தது'' எனலும் முருகக் கடவுள் கோபித்து "நம் கையிலுள்ள வேலுக்கு நீ கொடுப்பதொரு ஆற்றலுண்டோ?'' என்றுரைத்து ''இப்படிக் கூறிய நீ பூமிக்குச் செல்வாய்'' என்று சபித்தருளினார். அவ்வாறே பிரமதேவர் பூமிக்குச் சென்றதால் படைத்தற்றொழில் நடைபெறவில்லை. படைத்தற்றொழில் இல்லாமையால் மற்றையிருவருக்கும் காத்தல் அழித்தல் எனுந் தொழில்களிலவாயின.

இரு மூர்த்திகளும் தத்தமக்குரிய தொழில்களைச் செய்து தலைவராதற்குப் பிரமன் தொழிற்பட வேண்டியிருந்தது. பிரமனோ பூமியில் தோன்றியிருக்கின்றான். அப்பிரமனைப் பழைய நிலையிலே நிறுத்த முருகன் திருவருள்புரிய வேண்டும். அதனால் திருமாலும், சிவனும், இந்திரனும் முப்பத்துமூவரோடும், பதினெண்

கணங்களோடும் முனிவர்முன்னே செல்லவும், பெண்களோடு கந்தருவர் இனிய நரம்பையுடைய யாழை வாசிக்கவும், ஒருங்கே வந்து முறைப்படி தம்மைக் குறையிரந்து, பிரமனைப் பழைய நிலையிலே நிறுத்தும்படி வேண்டித் தங்கள் தலைமையைப் பெற்றுக் கொள்ளுதற்காக முருகக்கடவுள் தெய்வயானையம்மையாரோடு திருவாவினன்குடியில் எழுந்தருளியிருக்கிறார்.

அன்பர்களே! இவ்விடத்திலொன்று குறிப்பிடத் தக்கது. தேவர்கள் வரம் பெறவேண்டின் முருகக்கடவுளிருக்குமிடந் தேடிவந்து இரக்கவேணடும், ஆனால், அன்பர்களுக்கு-அடியார்களுக்கு முருகன்தானே யானையூர்ந்து சென்று வேண்டிய வரங்களைக் கொடுக்கின்றான். என்னே! கலியுகவரதனாம் முருகனுடைய அன்பர்க்கு எளியனாம் தன்மை!

திருவேரகத்தைச் சுவாமிமலையெனச் சிலர் கருதுகின்றனர். நச்சினார்க்கினியர் மலைநாட்டகத்தொரு திருப்பதி என உரைத்துளர். கருநாட்டில் ''சுப்பிரமணியம்'' எனும் ஒரூர் இருக்கிறதெனவும் அதுதான் ''திருவேரகம்'' எனவும் சிலர் கூறுகின்றனர். இச்சுப்பிரமணியம் எனும் ஊரின் வரலாறு கார்மண்டல சதகத்திற் கூறப்படுகிறது.

திருவேரகத்தில் பிராமணர்கள ''ஆறெழுத்தடககிய அரும்மறைக் கேளவியை நாவியன் மருங்கில் நவிலபபாடி'' முருகப் பெருமானை வணங்கும் முறை சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. சடாட்சரத்தை ⁄ ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி எனக்குறிப்பிட் டமை வியக்கத்தக்கது.

குமரகுருபர சுவாமிகளும் ''ஆறெழுத்துங் கூறுமவர்'' எனப்பாடியுள்ளார்.

அன்பர்களே! எங்களுடைய பிள்ளைகள் வீட்டு முற்றங்களிலும், தெருத் திண்ணைகளிலும் விளையாடுவார்கள். பெரிய செல்வர்களுடைய பிள்ளைகள் மேல் மாடிகளிலும் நிலா முற்றங்களிலும், பூந்தோட்டங்களிலும் விளையாடுவார்கள். முருகனாகிய இப்பிள்ளையோ குறிஞ்சி நிலத்துக்கு உரியவனாகையால் அவன் மலைகளிலேயே விளையாடுவான்.

வேடர்கள் பெண்களோடு குரவைக் கூத்தாட, வேலன் கட்டிய மாலையை முருகன் சூடிச், செய்யன் சிவந்த ஆடையனாயும், அசோகந்தளிர் அசையும் காதினனாயும், கச்சைகட்டி, கழலை அணிந்து, வெட்சிமாலையைச் சூடி, குழலை ஊதி, சிறிய வாத்தியங்களை இயக்கி, ஆட்டுக்கடாவைப் பின்னே விட்டு, மயிலின் மேலேறி, கோழிக் கொடியை உயர்த்தி, நெடியனாய்த், தொடி அணிந்த தோளனாய், குளிர்ந்த மெல்லிய புடைவையையுடுத்து, பாடும் மகளிர் கூட்டத்துடனே குன்றுதோறும் திரிந்து விளையாடுவான்.

பழமுதிர்சோலை எனுந்தலம் இப்பொழுது அழகர் மலை என அழைக்கப்படுகிறதெனவும், முன்னே சுப்பிரமணியக் கடவுள் எழுந்தருளியிருந்த கோவிலில் இடையில் திருமாலை எழுந்தருளச் செய்து வணங்குகின்றனர். எனவும் சிலர் கூறுகின்றனர்.

பழமுதிர்சோலை மலையிலுள்ள அருவியின் செயல் அடுக்கடுக்காக மிகச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

அருவி துகிற் கொடிகள் போல அசைகிறது; சந்தன மரங்களைத் தள்ளுகிறது; மூங்கிலின் வேரைப் பிளக்கிறது; பெரிய தேன் கூடுகளைச் சிதைக்கிறது; பலாச்சுளைகள் கலக்கும் படியும் சுரபுன்னையின் மலர்கள் உதிரும்படியும் அலைகளை வீசுகிறது. அதன் அலை வீச்சைக் கண்டு குரங்குகள் நடுங்குகின்றன! பெரிய பெண் யானைகள் குளிரடைகின்றன.

பொன்னையும், மணியையும் கொண்டு அவ்வருவி குதிக்கிறது; மகரந்தப் பொடிகளைக் கரையிலொதுக்குகின்றது; வாழைக் குலைகள் உதிரும்படி அவற்றை மோதுகிறது; மிளகின் கரிய பூங்கொத்துக்களைச் சாய்க்கிறது; மலையுச்சியில் நின்று இழுமெனும் ஓசையுடன் குதிக்கிறது. அருவியின் ஓசையைக் கேட்ட மயில்களும் கோழிகளும் அஞ்சி ஓடுகின்றன; கரடிகளும் ஆண் பன்றிகளும் மூலையிலொதுங்குகின்றன; ஆமா நல்லேறுகள் முழங்குகின்றன.

"இத்தகைய அருவியையுடைய பழமுதிர் சோலை மலைக்குரிய முருகன் உனக்கு ஒப்பில்லாப் பரிசிலைக் கொடுப்பான். நீ அவனை எங்கே கண்டாலும் கண்டவுடன் பின்வருமாறு அவனைப் போற்றுவாயாக" என்று முத்தி பெற்றவன் சொல்லி முடிக்கின்றான்.

"நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!

வானோர் வணங்கு விற்றானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவி லொருவ! பொருவிறன் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்த ரேறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே!
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையினர்க் கார்த்து மிசை பேராள;
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்!
பெரியோ ரேத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந! குரிசில்"!.

முருகனைப் போற்றும் இந்த அடிகள் அரும்பொருள் நிறைந்த மறைமொழிகளே!— மந்திரங்களே! இவற்றை நாளும் கூறி வாழ்த்துவாருக்கு முருகன் திருவருள் கிடைக்குமெனக் கூறவும் வேண்டுமா? இவை முருகனின் அவதாரத்தையும் அளப்பரும் தன்மைகளையும் அடியார்களுக்கு எளியனாம் தன்மையையும் வீரச் செயல்களையும் பிறவற்றையும் மிகச் சிறப்பாகக் கூறுகின்றன. இவற்றின் சிறப்பைத் தனித்தனி எடுத்துக்கூற நேரமிடங் கொடாது. ஆகையால் முதல் மூன்றடிகள் குறிக்கும் செய்தியை மாத்திரம் குறிப்பிட்டு மேற்செல்கின்றேன்.

"நெடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ"

இவ்வடிகளில் முருகன் திருவவதாரம் கூறப்படுகின்றது. சிவபெருமானது நெற்றிக்கண்ணிலே தோன்றிய தீப்பொறிகளாறையும் அக்கினிதேவன் கங்கையிலே விட்டான். கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையிலிட்டது. சரவணப்பொய்கையில் அவதரித்த ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தனர். அவற்றை உமாதேவியார் கட்டித் தழுவி எடுக்க அவை ஒன்றாய் இசைந்து அறுமுகக் கடவுளாயின. இது கந்தபுராணத்திற் கூறப்படும் வரலாறு. ஆனால் நச்சினார்க்கினியர் வேறு வரலாறு கூறுகின்றார்.

"சிவபெருமான் உமாதேவியாரை மணஞ்செய்த நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி நீங்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவருமதற்குடன்பட்டுக் கருப்பத்தை இந்திரன கையில் கொடுக்க, அதனை இருடிகள் பெற்றுத் தாங்க முடியாமையால் இறைவன் கூறாகிய முத்தீக்கட் பெய்து, சத்தி குறைந்த பின் அதனைத் தம் மனைவியர்க்குக் கொடுக்க, அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கி விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப் பொய்கையில் பதுமப் பாயலில் அறுவரைப் பயந்தனர். ஆறு கூறாகி வளரும் பொழுது இந்திரன் சென்று வச்சிராயுதத்தாலெறிய அவ்வாறு வடிவும் ஒன்றாகி அவனுடனே

பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்ல மண்டிச் சென்றது.'' இதுதான் அந்த வரலாறு.

நச்சினார்க்கினியர் கூறும் முருகக் கடவுளின் இந்த அவதார வரலாறு பரிபாடல் ஐந்தாம் செய்யுளில் காணப்படுவது. பரிபாடல் உரையாசிரியராகிய பரிமேலழகர் இவ்வரலாற்றைப் பௌராணிகர் கூற்றென்கிறார். ஆகவே பரிபாடற செய்யுளிற் காணப்படும் இவ்வரலாறு எப்புராணத்திலுள்ளது என்பது அறிஞர் ஆராய்ச்சிக்குரியது. இவ்விடயத்தில் வேறுமிரு ஆராய்ச்சிக்குரிய விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

''இருபேருருவின் ஒரு பேரியாக்கை'' எனுந் திருமுருகாற்றுப்படை அடிக்கு நச்சினார்க்கினியர் கூறும் ''மக்கள் வடிவும் விலங்கின் வடிவும்'' சூரனுக்குரியன என்பது எந்நூலில் கூறப்படுகிறது? கலித்தொகையில் சூரனைப்பற்றி ''ஈரணிக்கேற்ற ஒடியாப் படிவத்துச்சூர்'' என வரும் அடிக்கும் நச்சினார்க்கினியர் இக்கருத்தையே கூறுகின்றார். ஆறுமுக நாவலர் கந்த புராண வரலாற்றைத் தழுவி ''இருபேருரு'' என்பதற்கு சூரன் பதுமன் என்னும் இரண்டு பெயர்களையுடைய வடிவம் என்றுரைத்துளர்.

''அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர் மாமுதல் தடிந்த'' என்னும் அடிகளின் கருத்தின் கீழ் ''அவுணர் எல்லாருந் தம்முடன் எதிர்த்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே

கூடும்படி மந்திரங் கொண்டிருந்து சாதித்த மாமரத்தை'' என நச்சினார்க்கினியர் கூறும் மாமர வரலாறு எப்புராணத்தில் அல்லது வேறு எந்த நூலிற் காணப்படுகின்றது. பரிபாடல் பதினெட்டாம் பாடல் முதலடிக்குறிப்பின் கீழ்இவ்விடயத்திற்கு ஆதாரங்களாகப் பழந்தமிழ் நூலுரைகளில் காணப்படுவனவற்றைக் குறிப்பிட்ட உ. வே. சாமிநாதையர் இவ்விடயம் ஆரா யப்படத்தக்கதெனக் கூறியுளர்.

''இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள''

என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் ''யான் வறிய னென்று இரப்பான் சொல்லு மிளிவரவைத்தான் பிறர்கட் சொல்லாமையும், அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும் இவையிரண்டு முளவாவன குடிப் பிறந்தான் கண்ணே'', எனத்தம் கருத்துரைத்துப் பின் ''இலனென்னு மெவ்வ முரையாமை ஈதல்'' என்ப தற்கு

''அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் எனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவனுரையா வகையாற் கொடுத்தலெனவும், யான்இதுபொழுது பொருளுடையேனல்லே னெனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது

கொடுத்தலெனவும் உரைப்பாருமுளர்'' எனக் கூறியுளர். இத்திருமுருகாற்றுப்படையில் முருகக்கடவுள் கொடுக்கும் கொடையில் மேற்கூறிய தன்மைகள் யாவும் அமைந்திருப்பது அறிந்து இன்புறற்குரியது. இது குறளின் உண்மைக் கருத்தையும்புலப்படுத்துகின்றது. இரவலனைக் கண்ட முருகக்கடவுள் ''இரவலனே! உன்வரவை நானறிவேன். நீ இரந்து வந்த பொருள் கிடைக்குமோ வென்று பயப்படாதே'', என்றுபல அன்புடை மொழிகள் கூறி முத்தி கொடுப்பார். அம்முத்தியைப் பெற்றவன் பிறருக்கே முத்தியைக் கொடுக்கத் தக்கவனாயின் அம் முத்தியின்பெருமையைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

''அஞ்ச லோம்புமதி அறிவனின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருணிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி............''

முருகக் கடவுள் இதுபொழுது பொருளுடையனல்ல னெனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது, இலனென்னும் இளிவரவை இரவலன் தனக்குச் சொல்வதற்கு முன்பே, தானே குறிப்பறிந்து ''அறிவனின் வரவு அஞ்சலோம்புமதி'' எனக்கூறிப், பிறனொருவனிடத்துச் சென்று அவ்விரவலன் இலனென உரையாது, அவனே பிறருக்கு முத்தி கொடுக்கத்தக்க முறையிலே முத்தி கொடுப்பார்.

அன்பர்களே! இத்தெய்வத் திருமுருகாற்றுப்படையின் அருமை பெருமைகளை இன்னும் எடுத்துக்கூற எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் போதாமையால் முடிபுரையாகச் சில கூறி என்னுரையை முடிக்கின்றேன்.

இத்திருமுருகாற்றுப்படையைப் போலக் கடவுளிடத்திலே வழிப்படுத்திச் செய்யப்பட்டிருக்கும் நூல் பிறமொழிகளில் இல்லை. இந்நூல் எங்கள் தமிழ்மொழிக்குத் தனிப்பெருமை அளிக்கும் ஒரு தெய்வத் திருநூல். இதன் பெருமை என்னால் எடுத்துரைக்கத்தக்கதா? இது சங்க இலக்கியங்களுளொன்றாக இருப்பதன்றித் திருமுறைகளிலும் ஒன்றாயமைந்திருக்கிறது. இதை நாடோறும் பாராயணஞ்செய்பவர்கள் பலருண்டு. ''முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன்'' மேலதாய் விளங்குமிதனைப் பாராயணம் பண்ணுபவர்களுக்கு முருகன் திருவருள் எளிதிற் கிடைக்கும்.

முருகனடியார்களே! சென்ற இரண்டு நாள்களில், முதல்நாள்பேசிய அறிஞர்கள் சிவனை வழிபடவேண்டும் என்றும், அடுத்தநாள் பேசியவர்கள் சத்தியை வழிபட வேண்டுமென்றும் உங்களுக்குக் கூறினார்கள். இன்று அவர்களின் முதல்வனாகிய முருகனை வழிபடுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். முருகனை வழிபடல் அவன் பெற்றோரை வழிபடுதற்குச் சமம்—மேலானதுமாம்; பெற்றோருக்கு மகிழ்ச்சியையுங் கொடுக்கும்.

ஈண்டு, மெய்யன்பர்களாகிய உங்கள் முன்னிலையில் இவ்விடயத்தைப் பேசக் கூட்டி வைத்த செந்தமிழ்ப் பரமாசிரியனாகிய முருகன் இணையடி இறைஞ்சி, அகில இலங்கைச் சைவ இளைஞர் சபை நாடுதோறும் நாடோறும் வளரத் திருவருள் புரியுமாறு அவனை வேண்டி என் சிற்றுரையை முடிக்கின்றேன்.

''முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே — ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்''.

7

இத்திக்கும் திருமுறைகள் *

தேவார திருவாசகங்களைப் பாடித் தமிழினை வளம் படுத்திச் சைவ நெறியினை நிலைநாட்டிய நாயன்மார் களுடைய காலத்துக்கு முன்பு சைவத் திருநெறியினை விளக்கி மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளத் தக்க நூல்கள் தமிழிலே பெரிதும் தோன்றவில்லை. வட மொழியிலுள்ள நூல்கள் தமிழ் மக்கள் பலருக்கு விளங் காத மொழியில் அமைந்திருந்தன. வடநாட்டிலிருந்து தென்னாடு புக்க சமண பௌத்த சமயங்களின் தலை வர்கள் தமிழ் மக்களின் தாய்மொழியாகிய தமிழிலே தம் சமய உண்மைகளை எழுதியும் பேசியும் தம் சமயங்களைத் தமிழ் நாட்டில் வேரூன்றச் செய்தனர். இத னால், வேத நெறியும் தளர்ந்தது; சைவத் துறையும் பொலிவிழந்தது. வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் தாய் மொழியாம் தமிழிலே சைவ சமய உண்மைகளை எடுத்துக்கூறி மக்களின் உள் ளத்துணர்ச்சியை எழுப்ப வேண்டிய நிலைமை தோன் றியது. அப்பொழுது நம் சமயாசாரியர்கள் தோன்றி, மொழிக்கு மொழி தித்திக்கும் தேவார திருவாசகங் களைப் பாடிச் சைவ சமயத்தை நிலைநாட்டினர்.

பின்னர், சென்ற நூற்றாண்டிலே, மேனாட்டார் ஆட்சியில், கிறித்துவசமயத்தால் நம் சைவ சமயத்துக்கு இடையூறு உண்டானது. அப்பொழுது நாவலர் பெரு மான் தோன்றி வடமொழியிலுள்ள சமய நூல்கள் சில

---

* வேலணையில் நடைபெற்ற திருமுறை விழாவிலே 17-4-55இல் நிகழ்த்திய வரவேற்புரை.

வற்றைத் தமிழில் உரைநடை நூல்களாக ஆக்கியும், செய்யுள் நூல்கள் பலவற்றை யாவர்க்கும் விளங்கத்தக்க உரைநடையில் எழுதியும் சைவ சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பிச் சைவசமயத்தைப் பாதுகாத்தார்.

இப்பொழுது நம் ஈழ நாடும் தாய்நாடும் அரசியற் சுதந்திரம் பெற்றுவிட்டன. இதன் பயனாக எம் தாய் மொழியாகிய தமிழ்மொழிப் பற்று மக்களிடையே வீறு கொண்டு எழுந்துள்ளது. இதனால் நம் நாட்டிலும் வீட்டிலும் ஆலயங்களிலும் நம் தாய்மொழியே தலையிடம் பெறவேண்டும் என்னும் எண்ணம் நாள்தோறும் பெருகி வருகின்றது. அரசியல் மொழியாகவும், கல்வி ஊட்டும் மொழியாகவும் தமிழ்மொழி விரைவில் நிலைபெறப் போகின்றது நமது ஆலயங்களில் நடக்கும் அருச்சனை தமிழிலும் நடக்கவேண்டும் என்று பலர் உணர்கிறார்கள்; சிலர் உரைத்தும் வருகின்றார்கள். ஆனால், தலைமுறை தலைமுறையாக அடிமை வாழ்விலே தோய்ந்த காரணத்தால் இந்த உண்மையை உணரவும், உணர்ந்தாலும் அச்சமின்றி உரைக்கவும், பிறர் உரைத்தாலும் ஏற்றுக் கொள்ளவும் ஆற்றலின்றிச் சிலர் இருக்கின்றார்கள். இவர்கள் யாவரும் வெட்கித் தலைகுனியத்தக்கதாக நம்முடைய கோயில்களிலே தமிழிலும் அருச்சனை செய்யலாம் என்று உறுதியுடன் உரைத்து நிலைநாட்டிய பெருஞ்செயலாளர் இங்கு எழுந்தருளியிருக்கும் குன்றக்குடியடிகளாவார்.

அடிகளார் முன்னணியில் நின்று நடத்திவரும் இச் சீரிய தொண்டு, தமிழைத் தாய்மொழி என்று கூறும் சைவ நன்மக்கள் எல்லாராலும் உச்சிமேற் கொண்டு போற்றத்தக்கது; தெய்வத் திருமுறைகளுக்கும் பெருமை அளிப்பது. இத்திருமுறைகள் வடமொழியிலுள்ள எந்தநூல்களுக்கும்-வேதாகமங்களுக்கும்-எவ்வாற்றானும் குறைந்தன அல்ல என்பதை ஏற்றுக்கொள்ளாத சைவத் தமிழ் மக்கள் நம்மிடையே இருப்பார்கள் என்று நான் எண்ணவில்லை.

உலகத்துள்ள ஏனைய மொழிகளிலும் பார்க்கத் தமிழ் மொழி பல துறைகளிலே சிறந்து விளங்குகிறது. தமிழ் மொழியிலுள்ள அருட்பாடல்கள் போன்ற பாடல்களை வேறெம் மொழியிலுங் காணல் முடியாதென மேனாட்டறிஞருங் குறிப்பிட்டுளர். இப்பெருமையினைத் தமிழ் மொழிக்குக் கொடுப்பன இப்பன்னிரு திருமுறைகளிலுமுள்ள பதினெண்ணாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களேயாகும். இவை சைவ சமயத்துடன் தொடர்புடையன வாயிருப்பினும் தமிழ் வளமும், உள்ளத்தையும் ஊனையும் உருக்கும் ஆற்றலும் மிக்கனவாதலின் பிற மதத்தவர்களையும், பிறமொழியினரையுங்கூட ஈர்த்து இன்புறுத்துகின்றன.

இப்பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும். தேவாரங்கள் என்ற பெயர் பிற்காலத்திலே தோன்றியது. பத்தாம் நூற்றாண்டுக்

குப் பின்தோன்றிய கல்வெட்டுக்களிலும் உமாபதி சிவாசாரியார்பாடியகோயிற்புராணத்திலுமே தேவாரம்எனும் சொல்லை முதலிலே காண்கிறோம். தேவாரங்கள் தோன்றிய காலம் முதல், பல நூற்றாண்டுகளாகத் தேவாரம் என்னும் சொல் தமிழ்நாட்டில் வழங்கவில்லை. **தேவாரப் பாடலகள் யாவும் 'தமிழ்மாலை' என்றே முதலில் வழங் கப்பட்டுள.** அப்பர் பெருமான் "பன்னிய நூற்றமிழ் மாலை பாடுவித்தென் சிந்தைமயக்கறுத்த திருவருளினானை" என்று தமது பாடல்களைத் தமிழ்மாலை எனவே குறிப்பிட்டுளர். "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" என்று சுந்தரர் குறிப்பிடுகிறார். தேவாரங்களிலும் பெரியபுராணத்திலும் தமிழ் மாலை எனும் சொல்லே பயின்று வந்துளது. தமிழ் மாலை எனும் இச்சொல் தமிழுக்கும்—சைவத்துக்கும், தமிழுக்கும்—தேவாரங்களுக்குமுள்ள தொடர்பை எவ்வளவு சிறப்பாக விளக்குகிறது பாருங்கள்.

மூவர் தேவாரங்களையும் 'மூவர் தமிழ்' என்றே திருமுறைகண்ட புராண ஆசிரியரும் ஔவையாரும் குறிப்பிட்டுளர். தேவாரங்கள் தமிழ் மொழிக்கும், சைவசமயத்துக்கும், தென்னாட்டுக்கும் அளவில்லாத பெருமையினை அளித்திருக்கின்றன. வேதாகமங்களுடைமையாற் சிறந்து விளங்கிய வடமொழியிலுந் தேவாரங்களைப் பெற்றமையால் நம் தமிழ்மொழி சிறந்து விளங்கியது. இதனை அழகாகச் சேக்கிழார் பெருமான் பல இடங்களிற் புலப்படுத்தியுளர்

"திசை அனைத்தின் பெருமை எலாம்
 தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும்
 மேதினியே தனி வெல்ல
அசைவில் செழுந் தமிழ்வழக்கே
 அயல்வழக்கின் துறைவெல்ல"

எனும்பாடலில், திருஞானசம்பந்தர் அவதரித்துத் தமிழ் மாலைகளைப் பாடித் தமிழையுஞ் சைவத்தையும் வளம் படுத்தியதால் ஏனைய திசைகளிலும் பார்க்கத் தென் திசை பெருமைபெற்றது எனவும், எல்லா மொழிகளிலும் தமிழ்மொழி உயர்ந்துவிட்டது எனவும் அவர்கூறிய அருமைப்பாட்டை உணரும் ஆற்றல் உள்ளவர்கள் தமிழிலே பூசைசெய்வதை வரவேற்பதற்கு இன்னுங் காலந் தாழ்த்துவார்களா?

மேலுஞ் சேக்கிழார் சுவாமிகளே "நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறைபாடும் வாயார்" என்று கூறிச் சைவசமய முதற் கடவுளாகிய சிவபெருமானுக்குத்—தூ ம றை பா டும் வாயார்க்குத் தமிழ்மேல் உள்ள விருப்பத்தைக் குறிப்பிட் டார்; வடமொழி வேதங்களிலும் இத்தமிழ் மாலைகள் சிறந்தன என்பதையும் புலப்படுத்தினார். சுந்தரமூர்த்தி நாயனாரும் "தமிழோடிசைகேட்கும் இச்சையால் காசு

நித்தல் நல்கினீர்'' என்று பாடித் தமிழ்மாலைகளிற் சிவபெருமானுக்குள்ள ஈடுபாட்டைச் சுட்டிக்காட்டியுளர்.

''அங்கண் வடதிசை மேலும் குடக்கின் மேலும் அருந்தமிழின் வழக்கு அங்கு நிகழாதாகத் திங்கள்புனை முடியார் தந் தானந்தோறும் சென்று தமிழ் இசைபாடும் செய்கைபோல'' எனும் செய்யுளில், தமிழ் வழங்காத இடங்களிலுள்ள திருக்கோயில்களிலும் தமிழ் மாலைகள் பாடப்படவேண்டும் என்னும் குறிப்பினை உட்கொண்டு ஞானசம்பந்தர் பதிகம் பாடினார் எனவுஞ் சேக்கிழார் செப்பியுளர்.

''பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண்ணன்றி விண் கொடுக்கும் மணிகண்டன்'' எனவும்,

''தமிழோடிசைபாடல் மறந்தறியேன்'' எனவும்,

''ஏந்தைபூம் புகலூர் பாடுமின் புலவீர்காள்'' எனவும் வரும் நாயன்மார்களுடைய கூற்றுக்கள் கோயில்களிலே தமிழ்ப பாடல்களைப் பாடிக்கடவுளை வணங்குதல் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன. ஆகவே இத்திருமுறைவிழாவிற் பங்குபற்றும் அன்பர்களும் திருமுறைகளைப் போற்றுஞ் சைவசீலர்களும் எம் தாய் மொழியாம் தமிழிலேயே எம்முடைய கோயில்களில் அருச்சனை முதலியன செய்யக் கடமைப்பட்டவர்களாவார்கள். இவ்வாறு செய்யவேண்டுமென்று கேட்பது வடமொழிமேற் கொண்ட வெறுப்பினாலன்று; ''எம்மொழி

யினும் இனிய நமது தமிழ்மொழி'' என்று நாவலர் பெருமான் போற்றிய தமிழ்மொழியில்—எமது தாய் மொழியில் — எமக்குப் பொருள் விளங்கும் தெய்வத் தமிழ்மொழியில் திருமுறைகளைத் தந்த சைவப்பெரியார்கள் தங்கருத்திற்கேற்ப நாம் கடவுளை வழிபட்டு உய்தி பெறவேண்டும் என்னும் நோக்கத்தினாலேதான். பொருள் விளங்காது வடமொழியிலுள்ள சுலோகங்களை ஓதுவதாலும் கேட்பதாலும் நம் உள்ளம் எத்தகைய உணர்ச்சியையும் அடைவதில்லை. ஆனால் உள்ளத்தை உருக்கும திருமுறைகளை ஓதிக் கடவுளை வணங்கும்பொழுது நாம் பெறும் இன்பத்தை அளவிட்டு உரைத்தல் முடியுமா? சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுதல் வேண்டும் என்பது மாணிக்கவாசகர் தம் ஆணையாகும். ஆகவே இனிமேலாகுதல் நாம் இலகுவில் பொருள் விளங்கும் தமிழ் மாலைகளை முறைப்படி ஓதியும் ஓதுவித்தும் உயர்நிலை அடைவோமாக.

இக்காலத்தில் எமது சமய வாழ்வு சமூக வாழ்வுடன் இணைந்து செல்லாது தனித்து நிற்கின்றது. இந்த நிலைமையை மாற்றுதற்கும் இங்கு எழுந்தருளியிருக்கும் அடிகளார் முயன்று வருகின்றார்கள். 'அன்பர் பணியே அரன் பணி' 'தாழ்த்தப்பட்டோரைத் தாங்குதலே சைவப்பணி' என்று அவர்கள் போதித்தும் சாதித்தும் வருகின்றார்கள். தீண்டாதார் என்று அறியாமையினாலும் சுயநலத்தாலும் நாம் ஒதுக்கிவைத்திருக்கும் மக்களின் சேரிகள் எங்குஞ் சென்று அம்மக்களின் நல்வாழ்வுக்

காகப் பெருந்தொண்டாற்றி வருகின்றார்கள். திருமுறை களைப் போற்றும் இத்திருநாளில், சைவப் பெருமக்கள் யாவரும் சைவத்திரு நெறிக்கே மாசுவிளைக்கும் இத்தீண் டாமையை நம் நாட்டினின்றும் அகற்றிவிட முடிவுசெய்து முயலுதல்வேண்டும்.

திருக்கோயில்களிலே திருமுறைகள் புலப்படுத்தும் வழிபாட்டு முறைக்கு மாறாக இருக்கும் அழகற்ற செயல் பணங்கொடுத்து அருச்சனை செய்வித்தலேயாகும். இதனால் அன்பையும் அருளையும் உண்டாக்கவேண்டிய வழிபாட்டு முறை ஒரு வியாபார முறையாக மாறி விட்டது. வழிபடுவோரின் பணநிலைக்கேற்பக் கடவுள் அருளை விலைக்கு வாங்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இருபத்தைந்து சதம், ஐம்பது சதம், ஒரு உருபாய் முதலிய தொகைகளைக் கொடுத்துச் சீட்டுப் பெற்ற பின்னரே கடவுள் அருளை நாடல் வேண்டியிருக்கின்றது. கோயில் களைப் பரிபாலிப்பதற்கும், அவற்றிலே பணி ஆற்றுபவர் களுடைய வாழ்க்கைச் செலவுக்கும் பணம் வேண்டும் என் பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், கடவுள் அருளை விலை கூறி விற்கும் சீட்டுக்கள் வாயிலாகவும், அருச்சனைக்குப் பெறும் பணம் வாயிலாகவும் கோயி லுககுப் பொருளையீட்டுதல் பொருத்தமற்றதாகும். இதனையும் மாற்றி அமைத்தற்கு நாம் முயலல்வேண்டும்.

அடுத்ததாக நம் சமயத்தவர்கள் யாவரும் ஒன்று பட்டு உடனே செய்யவேண்டிய பெரும்பணி கோயில் களில் உயிர்ப்பலி இடுதலை நீக்குதலேயாகும். அன்பர்கள்

சிலருடைய முயற்சியினாற் பல கோயில்களில் இந்த ஆபாசச் செயல் நிறுத்தப்பட்டுளது. எனினும் இன்னும் பல கோயில்களிலே தெய்வத்தின் பெயரால் உயிர்கள் நூற்றுக்கணக்கில் வதைக்கப்படுகின்றன. இந்த அநியாயத்தை நீக்க முயலாமல் திருமுறை விழாக்களையும் சைவமாநாடுகளையும் மாத்திரம் நடத்துவதாற் பெரும் பயன் விளையாது. இத்திருமுறைவிழாவிற் கலந்துகொள்ளும் தமிழ்ப் பெரியார்கள் ஒன்றுபட்டு உழைத்தால் இவ்வாண்டு முடிவதற்கு முன்னரே உயிர்ப் பலி இடும் பாதகச் செயலை ஒழித்துவிடலாமன்றோ!

இனி, இத்திருமுறைகள் ஒவ்வொன்றினுடைய சிறப்பியல்புகளையும் எடுத்து விளக்குதற்கு அறிஞர்கள் பலர் இங்கு வந்துள்ளார்கள். ஆதலின் அவற்றைப்பற்றி யான் இப்பொழுது கூறவேண்டியதில்லை. எனவே, திருமுறை என்பதன் பொருளையும், திருமுறை வகுக்கப் பட்ட வரலாற்றையும், திருமுறைகளின் பெருமையையும் மாத்திரம் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

திருமுறை என்பதில் திரு என்பது 'தெய்வத் தன்மை உடைய' என்ற பொருளைத்தரும் அடையாகும். முறை என்பது, நூல் என்னும் பொருளை உடையது. ஆகவே திருமுறை என்பது தெய்வத்தன்மையுடைய நூல்கள் எனப்படும். முறை எனும் சொல் பெரிய புராணத்திலே தேவாரச் சுவடிகளைக் குறிக்கின்றது, ஓதுவார் கேட்பார் உள்ளங்களை உருக்கி அவர்களுக்கு உய்யும் நெறியை அளிக்கும் சிறந்த தமிழ் நூல்களைப் பன்னிரு திருமுறைகளாக நம்முன்னோர்கள் வகுத்துளர்.

சம்பந்தர் பாடிய தேவாரம் முதல்மூன்று திருமுறைகள். அப்பர் பாடியன நாலாம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகள். சுந்தரர் தேவாரங்கள் ஏழாம் திருமுறை. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமுந் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை. திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறை. திருமந்திரம் பத்தாந் திருமுறை. திருமுகப்பாசுரம் முதலிய நாற்பது பிரபந்தங்கள் பதினொராந் திருமுறை. பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறை. ''தோடுடைய செவியன்'' என்று தொடங்கி ''உலகெலாம்'' என முடியும் இப்பன்னிரு திருமுறைகளிலும் பதினெண்ணாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் உள. இவற்றினைச் சிவஞானச் செல்வர் இருபத்தெழுவர் பாடினர். இத்திருமுறைகளில், முதற் பதினொன்றையும் நம்பியாண்டார் நம்பி, இராசராச சோழன் விரும்பியபடி வகுத்துவைத்தார். இவ்வரலாற்றைத் திருமுறை கண்ட புராணம் விரிவாகக் கூறுகின்றது. இப்பதினொன்றுடன் சேக்கிழாருடைய பெரிய புராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாக்கிச் செப்பேட்டில் எழுதுவித்தவர் பெரிய புராணத்தைப் பாடுவித்த அநபாயச் சோழரேயாவார். இச்செய்தியைச் சேக்கிழார் புராணங் கூறுகிறது.

இத் திருமுறைகள் யாவும் எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவபெருமானையும் அவருடைய அடியார்களையும் பற்றிப் பாடப்பட்டன. சிவன் அருளால் அவன்றாள் வணங்கிச் சிவஞானங் கைவரப் பெற்ற பெருமக்களால் இயற்றப்பட்ட பெருமை வாய்ந்தன; வடமொழி வேதங்களிலும் சிறந்தன எனக் கொள்

ளப்படுகின்றன; 'எழுது மாமறை' எனவும் ''எழுதுமறை'' எனவும் போற்றப்பட்டுள்ளன. வடமொழி வேதங்களை மட்கலமெனவும், இவற்றைப் பொற்குடமெனவும் அறிஞர்கள் கூறுவர். வடமொழி வேதங்களை ஓதினால் உள்ளமும் ஊனும் உருகுவதில்லை என்பதையும், இவற்றைப் பொருளுணர்ந்து பாடினாற் கருங்கல் மனமுங் கரைந்துவிடும் என்பதையும் அறிஞர் பெருமக்கள் அழகாக எடுத்துக்கூறி இருக்கின்றனர். திருமுறை கண்ட அபயகுல சேகர மன்னன் தேவாரங்களை ஓதக் கேட்டு அடைந்த நிலையைக் ''கையிரண்டும் உச்சிமேல் ஏறக் கண்ணீர் கரைந்தோட மெய்ம் முழுதும் புளகம் போர்ப்ப ஐயன் மலர்ப்பத முளத்தே கொண்டு போற்றி'' எனும் செய்யுட் பகுதி இன்றும் நமக்குக் காட்டுகின்றது.

இத்திருமுறைகளிலுள்ள பாடல்கள் யாவும் ஒப்புயர்வில்லாத தமிழ் மந்திரங்களாகும். ''நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திர மென்ப''என்று தமிழ் மந்திரங்களைப்பற்றித் தொல்காப்பியர் குறிப்பிட்டார். ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்'' என்பது வள்ளுவர் பெருமான் வாய்மொழி. இத்திருமுறைகளை இயற்றிய சிவஞானச் செல்வர்கள் நிறைமொழியாளர் என்பதையும், அவர்களுடைய இப்பாடல்கள் மறைமொழியாம் மந்திரங்கள் என்பதையும் சைவர்கள் யாவரும் ஏற்றுக் கொள்வர்; இம்மந்திரங்களை முறைப்படி ஓதினால் முந்தை வினை முழுவதையும் ஒழித்து முத்திபெறலாம் என்பர்.

இத்திருமுறைகளின் உண்மையியல்புகளை அறியாமையாற் சாதிவேற்றுமையைச் சைவத்திற் புகுத்தித் தீண்டாமையை நிலைநாட்ட விரும்பும் நம் சைவர்கள் சிலர்

கர்மத்தைத் தமக்கு உதவியாக்கி அழிவழக்குப் பேசுகின்றனர். மூடக்கொள்கைகளுக்கும் சுயநலக் கட்டுப்பாடுகளுக்கும் ஆளாகிய இவர்களைப் போன்றவர்கள் ஞானசம்பந்தர் காலத்திலுமிருந்தனர். அவர்களுக்குச் சம்பந்தர் கூறிய அறிவுரையினை இப்பொழுது நினைவூட்ட விரும்புகின்றேன்.

''அவ்வினைக்கு இவ்வினையா மென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது
உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்
பெறாதிரு நீலகண்டம்''

இதுதான் அவர்தம் திருவாக்கு. திருமுறைகளைத் தந்த சிவஞானச் செல்வர்கள் யாவரும் ஒருமுகமாகக் கூறும் உண்மை ''சிவசிவ என்றிடத் தீவினை மாளும்'' ''சிவசிவ என்றிடத் தேவருமாவர்'' என்பதேயாகும்.'இந்த உண்மைதான் சைவத்தின் அடிப்படை என்பதையும், இதுதான் சைவத்தின் பெருமைக்குக் காரணம் என்பதையும் யாம் மறத்தல் கூடாது.

அயலார் வறுமையால் வாடி வதங்க அவர்கட்குச் சிறிதும் உதவி செய்யாது, புகழ் கருதிச் சமயச்சடங்குகளுக்கும் திருவிழாக்களுக்கும் பணத்தை வாரி இறைப்பவர்கள் உண்மைச் சைவர்கள் ஆவார்களா? பசு முதலிய பிராணிகளிடத்து இரக்கங் காட்டாமல் கோயில்களிலே ஆடு, கோழிகளைப் பலியிடுபவர்கள் சைவநெறியில் வாழ்பவர்கள் ஆவார்களா? மக்களிடையே பிறப்பால் உயர்வு

தாழ்வு பேசித் தீண்டாமையைப் போற்றுபவர்கள் பிறர்க்கு இன்னுரை வழங்கத் தகுதி உடையவர்களா? இவர்களைச் சிவநெறியினர் என்று எவ்வாறு கூறலாம்? அன்பினால் மக்கள் யாவரையும் தம்மைப்போல் மதித்துப் பேணிப் பிற உயிர்களிடத்தும் இரக்கங்காட்டி வாழுகின்ற வர்களே உண்மைச் சைவர்கள். 'அன்பே சிவம்' என்பது தான் திருமுறைகளின் முடிந்த முடிபு.

8

அழுது அடி அடைந்தவர் *

இராப்பகல் உலக வாழ்விலே ஈடுபட்டு "நாம் யார்? எம் உள்ளம் யார்? வந்தவாறெங்ஙனே! போமாறேதோ?" என்று சிந்திப்பதற்கும் நேரமின்றி அலைந்து திரியும் நாம் இடையிடையேயாகுதல் சிறிது நேரம் இவற்றைச் சிந்திக்க வேண்டாமா? இவற்றைப் பற்றிச் சிந்தித்து எம் வாழ்க்கையை உயர்ந்ததாக்க — வாழ்வின் பயனைப் பெற— மாணிக்கவாசகர் போன்ற அடியார்களின் வரலாற்றை அறிதலும் அவர்களுடைய பாடல்களைப் பாடி மகிழ்தலும் இன்றியமையாதன.

மாணிக்கவாசகர் திருவாதவூரிலே பிறந்து வாதவூரர் என்னும் பெயருடன் வளர்ந்து வந்தார். பல கலைகளையும் முறைப்படி கற்றுப் பேரறிஞராக விளங்கினார். இவருடைய கல்விச் சிறப்பைக் கேள்வியுற்ற அரிமர்த்தனன் எனும் பாண்டிய மன்னன் அவரைத் தன்னுடைய முதலமைச்சராக நியமித்தான். தென்னவன் பிரமராயன் எனும் பெரும் பட்டத்தையுங் கொடுத்துச் சிறப்புச் செய்தான்.

முதல் அமைச்சராகக் கடமைகளைச் செய்து வந்தாலும் "கூத்தாடுவோர் தன்மை வேறு, கோலம் வேறு" போல உலகப் பற்றிலே ஈடுபடாமல் உயிர்க்குறுதி பயக்

---

* மாணிக்கவாசகர் குருபூசைத் திருநாளான 23—6—1947 இல் இலங்கை வானொலியில் நிகழ்த்திய உரையைத் தழுவியது.

கும் உண்மைப் பொருளை அறிய மாணிக்கவாசகர் விருப் பங்கொண்டார். இதனால் உண்மையை உணர்த்தத்தக்க ஓராசிரியனை நாடிக்கொண்டே இருந்தார். உரியகாலம் வந்தது.

கீழைக் கடற்றுறையிலே பல குதிரைகள் வந்திறங்கின. அங்கு சென்று நல்ல குதிரைகள் வாங்கி வருமாறு வேண் டிய பொருள் கொடுத்துப் பாண்டியன் அவரை அனுப்பி வைத்தான். அரசனுடைய பணியை நிறைவேற்றச் சென் றவர் வழியில் திருப்பெருந்துறையை அடைந்தார்; அங்கே குருந்த மரத்தடியில் குருவடிவுடன் விளங்கிய சிவபெரு மானைக் கண்டார்; காந்தத்தால் இழுக்கப்படும் இரும்பு போல இழுக்கப்பட்டார். அவருடைய அடியில் விழுந்து வணங்கித் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். அவரிடம் மெய்ப்பொருளினை அறிந்து, தெளிவு பெற்று, உண்மையை உணர்ந்தார்; உலகத்தை மறந்தார்; சிவா னந்தப் பெருங்கடலில் படிந்தார்; பேரின்பத்தைக் கண் டார்; தாம் பெற்ற பேரின்ப உணர்ச்சிகளையும் அதனைப் பெறுதற்கு முயன்ற வகையினையும் செந்தமிழ்ப் பாட்டுக் களில் எடுத்துரைத்தார். இப்பாட்டுக்கள் விலை மதிக்க முடியாத மாணிக்கங்களாக விளங்கின. இதனாலே இவருக்கு மாணிக்கவாசகர் எனும் பெயர் வந்தது.

சிவபெருமானுடைய அருளைப் பெற்றுச் சிவமய மாகிச் சிவனடியார்களுக்கும் கோயிற்றிருப்பணிகளுக்கும் அரசன் குதிரை வாங்கக் கொடுத்த பொருளைச் செல விட்டுப் பகலிரவாவதும் அறியாமல் அவர் திருப்பெருந் துறையிலேயே இருந்தார். முதன்மந்திரியாருடைய இந்தப் போக்கினைக் கேள்விப்பட்ட பாண்டியன் அவரை

உடனே திரும்பிவருமாறு கட்டளையிட்டான். மாணிக்க வாசகர் அரசனுடைய கட்டளையைத் தம் தலைவராகிய சிவபெருமானுக்கு அறிவித்தார். எம்பெருமான் விலை மதிக்க முடியாத ஒரு மாணிக்கத்தை அவருக்குக் கொடுத்தார். அதனைப் பெற்ற மாணிக்கவாசகர் அரசனை அடைந்து அதனைக் கொடுத்து, ஆவணிமாத மூலநாளிற் குதிரைகள் வந்து சேரும் என்றுங் கூறினார்.

குறித்தநாள் வந்தது. குதிரைகள் வரவில்லை. அரசன் அளவில்லாத கோபங்கொண்டு மாணிக்க வாசகரைச் சிறையிட்டான். தம் அடியவருக்கருள் செய்ய விரும்பிச் சிவபெருமான் காட்டிலிருந்த நரிகளை எல்லாம் குதிரைகளாக மாற்றிக்கொண்டு வந்து அரசனிடம் ஒப்படைத்துச் சென்றார். அவர் சென்றபின் அக்குதிரைகள் எல்லாம் நரிகளாகி அரசனிடமிருந்த குதிரைகளையும் கடித்துவிட்டுச் சென்றன. இதனையறிந்த அரசன் அடிகளாரைப் பலவாறு தண்டித்தான்.

தம் அடியார்க்குற்ற துன்பத்தை நீக்க எண்ணிச் சிவபெருமான் வையை ஆற்றினை அளவின்றிப் பெருகச் செய்தார். வெள்ளத்தினைத் தடுப்பதற்குக் கரையினை உயர்த்திக் கட்டுமாறு மதுரை மக்கள் யாவர்க்கும் அரசன் கட்டளையிட்டான். யாருமற்ற செம்மனச்செல்வி என்னும் பிட்டு வாணிச்சியின் பங்கை அடைப்பதற்கு ஒருவரும் கிடைக்கவில்லை. எம்பெருமானே அவளுக்காக மண்சுமந்து கரைகட்டவந்தார். வந்தவர் அவளுடைய பிட்டை வாங்கி உண்டுவிட்டுக் கரைகட்டாமலிருந்ததால் பாண்டியன் பிரம்பால் அவரை அடித்தான், அடிபட்ட

வுடன் கூலியாளாக வந்த சிவபெருமான் மறைந்து மாணிக்கவாசகருடைய அன்புத் திறனையும், சிவனடியே சிந்திக்கும் செல்வத்தையும் யாவர்க்கும் புலப்படுத்தினார்.

இந்த அற்புதச் செயல்களைத் தம் பொருட்டுச் சிவ பெருமானே செய்தார் என்பதை அடிகளாரே திருவாசகத்தில் பின்வருமாறு புலப்படுத்தியிருக்கிறார்.

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்துஎன் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே",
"பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பித்தனே",
"மண்சுமந்து கூலிகொண்டக் கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி".

அடிகளார் பொருட்டு எம்பெருமான் இவ்வாறு செய்த திருவிளையாடல்களை அறிந்த பாண்டியன் தான் செய்த குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டி அவரடி பணிந்தான். அடிகள் அவனைத்தேற்றித் தமது முதலமைச்சர் பதவியைத் துறந்து தமிழ் நாட்டிலுள்ள பல திருத்தலங்களுக்குச் சென்று பல வாசகங்களைப் பாடினார். தில்லையிலே புத்தர்களோடு வாது செய்து வென்று ஊமைப் பெண்ணைப் பேசுவித்தார். பின் திருக்கோவையாரையும் பாடியருளித் தில்லையிலே முத்தியடைந்தார்.

மாணிக்கவாசகர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமது முப்பத்திரண்டாவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்துப பேரின்பமடைந்தாரெனினும், அவருடைய திரு

வாசகம் அன்றுதொடக்கம் இன்றுவரையும் இன்னுந் தமிழ்மொழி உள்ள காலம் முழுவதும் நிலைத்து நின்று யாவர்க்கும் இன்பம் அளிக்கத்தக்கதாய் விளங்குகிறது.

உலகத்திலே திண்மையான பொருள்களைக் கல்லைப் போன்றன என்று கூறுகிறோம்; பலவகையான கற்களில் கருங்கல்லே மிகவும் இறுக்கமானது. இந்தக் கருங்கல்லைப் போல இருக்கும் மனத்தையும் திருவாசகம் கரைத்துவிடத் தக்க அவ்வளவு பெருமை வாய்ந்தது; படிப்போர் கேட்போர் மனத்தை உருக்கிக் கண்ணீரைப் பெருக்கி, உணர்ச்சியை எழுப்பி, அன்புக்கடலில் முழுகச் செய்யும் ஆற்றல் உடையது. சைவசமயத்தவர்கள் மாத்திரமன்றிப் பிறசமயத்தவர்களும் இதனில் ஈடுபட்டுப் படித்து உருகிப் பரவசமடைந்து வருகின்றனர். போப் எனும் மேனாட்டறிஞர் இத்திருவாசகத்திலீடுபட்டு இதனை மிகச் சிறப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கில மொழியினையும் வளப்படுத்தியிருக்கிறார்.

திருவாசகம் போல் மக்களின் மனத்தை இழுத்து மெழுகு போல உருகச் செய்யும் ஒரு சிறந்த நூல் வேறெம் மொழியிலும் இல்லை எனல் புகழுரையாகாது. ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' எனும் உரை தமிழ்நாட்டில் வழக்கிலுளது. திருவாசகத்தைப் படித்துப் படித்து உருகித் தாம் பெற்ற அனுபவங்களைப் புலவர்கள் பலர் தம் பாட்டுக்களிலே கூறி இருக்கிறார்கள்.

திருவாசகத்தில் ஈடுபட்டுத் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த சிவப்பிரகாச சுவாமிகள் கூறுவதையும், வட-

மொழி வேதங்களிலும் திருவாசகம் சிறந்ததென்பதை அவர் நிலைநாட்டுகின்ற முறையையும் பாருங்கள்!

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனும ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாத வூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்கு வீராயின்,
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகம்இங் கொருகா லோதின்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றைய ரிலரே''

திருவாசகத்தை ஒருமுறைபடித்தாலும் அவர் அன்பராகிவிடுவார் என்பது வெறும் புகழுரையன்று. திருவாசகத்தைப் படித்தனுபவித்தவர்களுக்கு இதன் உண்மை நன்கு தெரியும்.

இவ்வாறு திருவாசகம் யாவருடைய உள்ளத்தையும் உருக்கி அன்பராக்குவதற்குக் காரணம் யாது? மாணிக்கவாசகர் அழுது அடி அடைந்த அன்பராக விளங்கினமையேயாகும். எந்தத்திருவாசகத்தைப் படித்தாலும் அழுகைக் குரல், தாழ்மையின் சாயல், அன்பின் பெருக்கு முதலியனவே அதில் காணப்படும். அளவிறந்த அன்பும் தாழ்மையாலேற்பட்ட அழுகையும் நிறைந்தது திருவாசகம்

என்று சுருங்கக்கூறலாம். இதனாலேயே திருவாசகத்தைப் படிக்கிறவர்கள், கேட்கிறவர்கள் அழுகிறார்கள்; அன்புடையவர்களாகிறார்கள்.

"யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உனைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே"

எனும்அவருடைய வாசகம் அழுகையின் பெருமையையும் பயனையுங் கூறுகிறது.

அடிகளாருடைய தாழ்மையை மிக நன்கு புலப்படுத்தும் பாடல் ஒன்றுண்டு. அன்பர்களுக்குள் அன்பரென நாம் நினைந்து நினைந்து உருகும் அடிகளார் தம்மிடத்தில் அன்பு சிறிதும் இல்லை என்று கூறுகிறார். சைவசமய அடியார்களுள் மிகப்பெரிய அன்புடையவர் கண்ணப்பராவர். இந்தக் கண்ணப்பர் கடவுளிடத்து எவ்வளவு அன்பு கொண்டிருந்தாரோ அவ்வளவு அன்பின்மை தம்மிடம் உளது என்று அடிகளார் அருமையாகப் பாடியிருக்கிறார்.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ

என்பதே அப்பாடல். இந்தப் பாட்டு திருவாசகத்தின் உயிர் நிலையாகும்-சைவத்தின் உயிர்நிலையும் இதிலே அடங்கி இருக்கிறது. அந்தணர் குலத்துதித்த மாணிக்க

வாசகர் தமது தாழ்மையாகிய உரை கல்லிலே வேடர் குலத்துதித்த கண்ணப்பனாரின் அன்பை உரைத்துக் காட்டினார். தாழ்மையும் அன்புமே சைவம். இவை இரண்டினுருவமே மணிவாசகர். இவருடைய மலர்வாய்ப் பிறந்த வாசகமும் இந்த இரண்டுங் கலந்த ஓர் இன்பக் களஞ்சியம்; தேன் ஊற்று; அமுதசுரபி.

''கண்ணப்பன் ஒப்பதோர்'' எனும் இந்தச் செய்யுளிலே அடிகளார் சிவபெருமானுடைய வான் கருணையையும் புலப்படுத்தியுளர். சிவபெருமானைத் தாயிற் சிறந்த கருணை உடையவராக அவர் பாடியுளர். தாய்மாருள்ளும் பால்நினைந்தூட்டும் தாயே சிறந்தவள். குழந்தையின் பசி நேரத்தை அவள் அறிந்து அது வருந்துமுன்னரும், கேட்கும் முன்னரும் கொடுக்கும் அன்பும் இரக்கமும் உடையவள். இதனாலேயே அடிகளாரும் பானினைந்தூட்டும் தாயிலும் சிறந்த கருணை உடையவர் கடவுள் என்று பாடினார்.

''பானினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

என்பது அவர் திருவாக்கு

தமது கல்போன்ற—இரும்புபோன்ற—மனத்தோடு, தம் பெருமானின் தாயிற்சிறந்த கருணையையும், தமது நாய் போன்ற சிறுமையோடு, தம் தலைவருடைய தேவர்க்கும் எட்டாத பெருமையையும், தம் அளவில்லாத குற்றங்களோடு தம் ஆண்டவனின் ஆட்கொள்ளுந்திறனையும் அவர் பல பாடல்களில் ஒப்பிட்டுக்காட்டி இரங்குகிறார். இவையாவும் அவருடைய அன்பையும் தாழ்மையையும் நன்கு புலப்படுத்துகின்றன.

உலகத்திலுள்ள பிறவிகளில் நாய்ப்பிறவியே கடைகெட்டதென்பர். நாய்களுள்ளும் ஊர்நாயே மிக இழிவானது. அதற்குச் சொந்தமாக ஓரிடமுங்கிடையாது. எங்கே போனாலும் அதனை யாவரும் அடித்துக் கலைப்பார்கள். உணவும் உறையுளும் இன்றி அலைந்து திரிவது தான் அதன் தலைவிதியாகும், இந்த ஊர் நாயிலும் பார்க்கத் தாம் கடையானவர் என்று கூறித் தம் தாழ்மையைப் புலப்படுத்துகிறார் மாணிக்கவாசகர்.

''நாயிலாகிய குலத்தினுங் கடையாகிய நம்மை; பிழைப்பு வாய்ப்பொன்றறியா நாயேன்; செய்வதறியாச் சிறுநாயேன்; ஒன்றும் போதா நாயேன்; புழுத்தலைநாய் போன்றேன்; ஊர்நாயிற் கடையானேன்; நாயிற் கடையா நாயேன்;'' எனும் அவருடைய வாசகங்களைப்படிக்கிறவர்களுடைய அகங்காரம் அவர்களை அறியாமலே குறைந்துவிடுகிறது. தம்மைப்பற்றி முன்கொண்டிருந்த பெரும் எண்ணங்களை அவர்கள் நழுவ விடுகிறார்கள். அதிகாரம், பட்டம், பதவி இவற்றால் உண்டான

செருக்கு மறைந்து விடுகிறது. அவர்கள் தங்களுடைய உண்மையான நிலையைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறார்கள். "எம்வாழ்க்கையின் நோக்கம் யாது? இதுவரை என்ன நோக்கத்தோடு வாழ்ந்தோம்" என்று அவர்கள் ஆராயத் தொடங்குகிறார்கள். இந்த ஆராய்ச்சிக்கு மாணிக்கவாசகருடைய வாக்குகள் வழி காட்டுகின்றன.

"ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம் பாழுக்கு இறைத்தேன்; சீலமின்றி நோன்பின்றிச் செறிவே இன்றி,தோலின் பாவைக்கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடந்தேன்; சாதி, குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறினேன்; வைத்தநிதி பெண்டீர் மக்கள் குலங் கல்வி என்னும் பித்த உலகிற் பிறப்போடிறப்பென்னும் இவற்றால் கலங்கினேன்; பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப் பேய்த்தேர் முகக்குறும்பேதையானேன்" முதலிய வாசகங்கள் அவர்களுடைய கண்களைத் திறக்கின்றன. அவர்களைச் சூழ்ந்திருந்த இருள் குறைகிறது. "உண்மை முழுதும் உண்மை" என்று அவர்களுடைய அனுபவம் கூறுகிறது.

மேலும், "கொம்பரில்லாக் கொடிபோல் சுழலுகிறேன்; நினைப்பிரிந்து இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து வருந்துகிறேன்; மத்துறுதயிர் போல் புலன்களால் கலங்குகிறேன்; நீர்வற்றச் சிறுமீன் வாடுவது போல் நின்னருளின்றி வாடுகிறேன்" முதலிய தொடர்களிலுள்ள உவமைகள் அவர்களுடைய நிலையைப்

படம்பிடித்துக் காட்டுகின்றன. இவற்றைப் படிக்கப் படிக்க அவர்களிடம் இரங்கல் உணர்ச்சி பிறக்கிறது.

''சிவனே என்னை ஆண்டருள், நான் உன் அடைக் கலம், அந்தோ விட்டு விடாதே, கைகொடு, ஏற்றருள், வாடினேன், தவித்தேன், ஐயோ புகலிடம் வேறின்றி அலைகிறேன், இனிப்பொறுக்க மாட்டேன், உடையானே இப்பொழுதே அருள் செய், யாருமில்லேன், ஐயனே யாரொடு நோவேன், உன்னருளின்றி வாழேன் வாழேன், அப்பனே செய்வதறியேன்'', **என்று சுவாமிகள் நெக்கு நெக்குருகித் துடிப்பதை அறிய அவர்களுடைய உள்ளம் துடிக்கிறது; ஆராமை பிறக்கிறது; உணர்ச்சி பொங்கு கிறது.**

''என் தலைவனை நனிகாணேன், தீயில் வீழ்கிலேன், திண்வரை உருள்கிலேன், செழுங்கடல் புகுவேனே'' ''அறுக்கிலேன் உடல் துணிபடத் தீப்புக்கு ஆர்கிலேன், இரும்பின் பாவையனைய நான் பாடேன், நின்று ஆடேன், அந்தோ அலறிடேன், உலறிடேன், ஆவிசோரேன்;'' **எனும் வார்த்தைகள் முன்பிறந்த உணர்ச்சிக்கும் துடிப் புக்கும் அவர்களை அடிமைகளாக்கி விடுகின்றன.**

''மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே''

என்றும்)

"உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்தமர்ந்து உறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருகி வேண்டுவனே"

என்றும் அவர்கள் மாணிக்கவாசகருடன் சேர்ந்து கூறித் தம்வசம் இழந்து அழுது கடவுளுடைய அருளை நாடுகின்றார்கள்.

"தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்பனே! இடையறா அன்பு உனக்கெம் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்" என்று அவர்கள் வேண்டுகிறார்கள். அவர்களுடைய உள்ளத்தில் எக்களிப்பும் தெய்வ ஒளியும் தோன்றுகின்றன, கல்லைப்பிசைந்து கனியாக்கும் வித்தைக்குத் தாம் ஆளாகியிருப்பதை அவர்கள் உணர்கிறார்கள். நாய் சிவிகையில் ஏறுவதைப்போல், தாமும் இன்பம் பெறலாம் எனும் நம்பிக்கை உண்டாகிறது. இந்த நம்பிக்கையோடு திருவாசகங்களைப் பொருத்தமான இசையுடன் படிக்கப்படிக்கப் பெருமழை பெய்து ஓய்ந்தது போல ஓர் அமைதி அவர்களுடைய உள்ளத்தில் குடிகொள்கிறது. முன்சிறிதும் அறியப்படாத இந்த அமைதியின் பயனாகப் புதுவகையான இன்பம் பிறக்கிறது.

"தினைத்தனை உள்ளதோர் பூவினிற் றேனுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உண்ணெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ."

என்பதையும்,

"ஞானக் கரும்பின் தெளியைப் பாகை நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சு வையா யினானைச் சித்தம் புகுந்து தித்திக் கவல்ல கோனை"

என்பதையும்,

"அப்பனே எனக்கமுதனே ஆனந்தனே அகநெக அள்ளூறு தேன்ஒப்பனே"

என்பதையும்,

ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட்கலந்து
தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்",

என்பதையும் இவை போன்ற பிறவாசகங்களையும் படிக்கப் படிக்க முன்பிறந்த இன்பம் பெருகுகிறது; வாழ்க்கையிலே பேரின்ப நிலையைப் பெறும் வழி தோன்றுகிறது.

மாணிக்கவாசகர் நெக்கு நெக்கு, அழுது அழுது, துடித்துப்புலம்பிச் சிவனருள் பெற்றுச் சித்தஞ் சிவமாகிப் பாடின திருவாசகத்தின் பெருமையை முழுவதுமாக எடுத்துரைத்தல் ஒண்ணாது. இந்தத் திருவாசகத்தில் ஒரு வாசகமே உயிர்களையும் - இறைவனையும், மக்களையும்- கடவுளையும் ஒன்று படுத்திவிடும் என்றும், பிறவித் துன்பத்தை நீக்கிப் பேரின்பத்தை அளிக்கும் என்றும் இராமலிங்க அடிகளார் பாடினார்.

"வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் னுடயனையும் ஒன்றுவித்துத்
தருமொழியா மென்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே"

என்று இராமலிங்க அடிகளார் தம் அனுபவத்தை எங்களுக்கு எடுத்துரைத்துள்ளர். திருவாசகத்தைப் படித்தாலே போதும், வேறுசமய அனுட்டானங்கள் வேண்டாம் என்றும் அவர் கருதுகிறார்.

பேரின்ப நிலையை இத்தன்மையது என்று சொற்களினாலே தெளிவாக உரைக்க முடியாது, எனினும் இந்த நிலையை மாணிக்கவாசகர்,

"எனைநான் என்பதறியேன் பகல்இர வாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான் எனைமத்தோன் மத்தனாக்கிச்
சினமால் விடையுடையான் மன்னுதிருப் பெருந்துறை உறையும்
பனவன்எனைச் செய்தபடிறு அறியேன்பரஞ்சுடரே"

என்று ஒருவாறு புலப்படுத்துகிறார். காதலாகிக் கண்ணீர் மல்கிக் கசிந்துருகித் திருவாசகத்தினை ஓதுவார் இந்த நிலையைச் சிறிது நேரமாகுதல் அடைதல் கூடும் என்பதை அனுபவத்தால் மாத்திரமே அறியலாம்.

"தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே-யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமெனுந்தேன்"

9

பரிபாடலும் கீதையும்

ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்திலே தோன்றிய கடைச்சங்க இலக்கியங்களிற் பரிபாடலும் ஒன்றாகும். ''பரிபாடல்'' என்பது ஒருவகையான இசைப்பாடலாகும். இத்தகைய பாடல்களாற் பாடப்பட்ட நூலாதலின் இந்நூல் பரிபாடல் எனப்பெயர் பெற்றது. இந்நூல் எழுபது பாடல்களைக் கொண்டது. எனினும் இப்பொழுது இருபத்திரண்டு பாடல்களே கிடைத்திருக்கின்றன. இவற்றுளே ஆறுபாடல்கள் திருமாலுக்குரியன; எட்டுப் பாடல்கள் முருகனுக்குரியன; ஏனைய எட்டும் வையை ஆற்றுக்குரியன.

திருமாலையும் முருகனையும் பற்றிக் கடவுள் வாழ்த்தாகப் பாடப்பட்ட பாடல்கள் படிக்கப்படிக்க உள்ளத்தை உருக்கத்தக்கன; சொன்னயம் பொருள்நயங்களுடன் அருள் நலங்கனிந்து விளங்குகின்றன. வேதங்கள், உபநிடதங்கள், தேவாரங்கள். ஆழ்வார்களின் பாடல்கள் முதலியவற்றின் கருத்துக்கள் இவற்றில் வியத்தகு முறையில் அமைந்து மிளிர்கின்றன. தேவாரங்களுக்குந் திவ்வியப் பிரபந்தங்களுக்கும் முன்னர்த் தோன்றிய தீந்தமிழ்த் தெய்வப்பாடல்கள் இவை என்பதை உணரும்பொழுது இவற்றின் இனிமையும், பழமையும், முதன்மையும் நம்மைக் கவர்கின்றன.

திருமாலின் தெய்வ நலத்தைப் பற்றிக் கூறும் பரிபாடற் பாடல்களிலுள்ள கருத்துக்கள் கண்ணன்

திருவாக்கிலுள்ள— கீதையிலுள்ள — பல கருத்துக் களுடன் பின்னிப் பிணைந்து காட்சியளிக்கும் அருமைப் பாடு அறிந்தின்புறத்தக்கது.

தமிழ்ப் பெருங்குடி மக்கள் பழங்காலந் தொடக்கம் திருமாலை வணங்கி வந்துள்ளனர். "மாயோன் மேய காடுறை உலகமும்" என்று தொல்காப்பியம் திருமாலை முல்லைநிலக் கடவுளாக உரைக்கிறது. இக்கடவுளினைப் பற்றிப் பழங்காலத் தமிழ் மக்கள் கொண்டிருந்த கருத்துக் களைப் பரிபாடல் அழகு ததும்பத் தீட்டிக் காட்டுகிறது.

கண்ணன் திருவாக்கு பாரதகாலத்திலே தோன்றியது. போர்க்களத்திலே கண்ணனால் அருச்சுனனுக்கு அருளிச் செய்யப்பட்டது. வேதங்கள் உபநிடதங்கள் முதலிய வற்றின் கருத்துக்கள் கண்ணன் திருவாக்கில் இழையோடு கின்றன. இந்நூல் தோன்றிய பாரத காலத்திலே பாண்டி நாடு முதலிய தமிழ் நாடுகள் மிகுந்த நாகரிகமும் பண்பாட்டுச் சிறப்பும் உடையனவாய் விளங்கின என்பத தற்குப் பாரதத்திலே பல சான்றுகள் உள. சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் எனுஞ் சேர அரசன் பாரதப் போரில் ஈடுபட்ட கவுரவர் சேனைக்கும் பாண்ட வர் சேனைக்கும் போர் முடியும் வரை உணவு வழங்கி னான் என்று புறநானூறுபுகல்கிறது,

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

எனும் புறநானூற்றடிகள் இச்செய்தியைக் குறிக்கின்றன. சிலப்பதிகாரத்தில் கட்டுரை காதையும், வாழ்த்துக் காதைச் செய்யுள் ஒன்றும் இதனைக் குறிப்பிடுகின்றன.

"ஒரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழல்ஆட ஆடாமோ ஊசல்
கடம்பு எறிந்தவாபாடி ஆடாமோ ஊசல்"

என்பது சிலப்பதிகாரச் செய்யுள். "உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை" என இச்செய்தியை அகநானூறும் சுருக்கி நுவல்கிறது.

எனவே கண்ணன் கருத்துக்கள் முதலில்தோன்றினவா பரிபாடல் வாழையடி வாழையாக உரைக்கும் கருத்துக்கள் முதலிலே தோன்றினவா என்பது ஆராய்ச்சிக்குரியது. கடைச்சங்க காலத்திலே தோன்றிய இப்பரிபாடலுக்கு முன்னர்த் தலைச் சங்க காலத்திலே பல பரிபாடல்கள் இருந்தன என்பது இறையனார் அகப்பொருளுரை முதலியவற்றாற் புலனாகின்றது. அப்பரிபாடல்களின் வழிவந்த இப்பரிபாடலும் அவற்றிலுள்ள பழைய கருத்துக்களையுங் கொண்டிருத்தல் இயல்புடையதே. இவ்வாறாயின் இக்கருத்துக்கள் கீதைக்கு முன்னர்த் தோன்றியன எனல்சாலும். இப்பரிபாடலிற் காணப்படும் சொல்லாட்சி, தத்துவக்கருத்துக்களைச் சுருக்கமாகவுந் தெளிவாகவும் அக்காலத்திலே தமிழில் விளக்கியுளர் என்பதை நன்கு காட்டுகிறது.

இவ்விரு நூல்களிலுமுள்ள கருத்துக்களின் கால அடைவு எத்தகையதாயிருப்பினும் இவற்றிலுள்ள கருத்துக்கள் சிலவற்றின் ஒற்றுமைப்பாங்கும், அவற்றை இயம்பியுள்ள திறனும் இவ்விரு நூல்களையும் படிப்போர் உள்ளத்தை உருக்கி உவகை ஊட்டத்தக்கன.

உதாரணத்துக்காகப் பரிபாடற்பாட்டின் ஒருபகுதியையும் அதனோரடொப்புடைய கண்ணன் திருவாக்குக்களையும் ஈண்டு நோக்குவோம்.

''தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம்நீ
கல்லினுள் மணியும்நீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ பூதத்து முதலும்நீ
வெஞ்சுடர் ஒளியும்நீ திங்களுள் அளியும்நீ
அனைத்தும்நீ அனைத்தினுட் பொருளும்நீ; ஆதலின்
உறைவும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாய மாரனையே;
முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலின்
பிறவாப் பூவைப் பூவி னோயே;
அருள்குடை யாக அறம் கோலாக
இருநிழல் படாமை மூவே முலகமும்
ஒருநிழ லாக்கிய ஏமத்தை மாதோ''

எனும் பாடற் பகுதியிலே திருமாலின் தெய்வத் தன்மையைப் பரிபாடல் எடுத்தியம்புகிறது. நெருப்பில் வெம்மையும். மலரில் மணமும், கல்லில் மணியும், சொல்லில் வாய்மையும். அறத்தில் அன்பும், வீரத்தில் வன்மையும், வேதத்தில் நுண்பொருளும், ஐம்பூதத்தில் வானும். சூரியனில் ஒளியும், சந்திரனில் தண்மையும், திருமாலே யெனவும்

எங்கும் வியாபித்திருக்கும் பொருள்களும் அவற்றின் வியாப்பியமும் திருமாலே எனவும், திருமால் தங்குதலும் தங்குமிடமுமற்றவர் எனவும், முத்தொழிலினுட்பட்டு அவர் பிறவாத பிறப்பில்லை எனவும், அவரைப் பிறப்பித்தோரிலை எனவும், காயாம் பூவின் நிறத்தையுடைய அவரே மூவேழுலகத்தையும் தாங்கிக் காப்பவர் எனவும் இப்பகுதி கூறுகிறது.

இதனுடன் கண்ணன் திருவாய் மலர்ந்த பின்வரும் கூற்றுக்களை ஒப்பிடுக:

''மண்ணில் நறுமணமாகவும் தீயில் சுடராகவும் இருக்கிறேன்; எல்லா உயிர்களின் உயிர்ப்பாகவும் இருக்கிறேன்''...,'(அத். 7- சு.9)

''சத்துவ ராசத தமோ குணங்களில் உண்டான பொருள்கள் எல்லாம் என்னிடத்துத் தோன்றியவை. நான் அவைகளைச் சாரவில்லை. அவைகள்என்னைச் சார்ந்துள''...(அத். 7- சு.12).

''நான் முழு உலகத்துக்கும் வித்து'' (அத். 7-சு.6)

''எல்லா உயிர்களின் உள்ளே உறையும் ஆத்துமா நானே. உயிர்களின் தொடக்கமும் இடையும் இறுதியும் நானே......'' (அத் 10-சு.20)

நான் பிறப்பற்றவன், அழிவற்றவன், உயிர்களுக்கெல்லாம் ஈசன். எனினும் என்பிரகிருதியை வசப்படுத்தி ஆத்தும மாயையினால் நான் அவதரிக்கிறேன்.'' (அத்.4-சு.6)

10

பாடல் நெறி

மக்களின் வாழ்க்கை முறைகளும் சூழலும் மாறிக் கொண்டே போகின்றன. இவற்றிற்கேற்ப நம் வழி பாட்டு முறைகளும் மாறாவிடில் அவைதாமாகவே சிதைந்துவிடும். சமயம் வாழ்வைப் பூரணப்படுத்த வேண்டுமேயன்றி அதனைவிட்டுப் பிரிந்து நிற்றல்கூடாது. இரண்டையும் பிரிக்க முயல்பவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றுபவர்களாவார். தம் வாழ்க்கை முறைகளை நாளுக்குநாள மாற்றிக் கொண்டு வழிபாட்டு முறைகளை மாற்றக்கூடாது என்று கூறுகின்றவர்கள் போலிச்சைவர் களேயாவர்.

''முத்திதரும் தெய்வசபையைக் காண்பதற்குச் சேர வாரும் செகத்தீரே'' என்று யாவரையும் அழைக்கும் நமது சமயம், ''எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு''என்று யாவரிடத்தும் அன்பு கொள்ளுமாறு ஏவும் நமது சமயம் எவ்வளவு பரந்தது! எவ்வளவு முற்போக்குடையது! பாருங்கள்!! நமது சமயத்தைவிட முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நிற்கும் தகைமை வாய்ந்த சமயம்வேறுண்டோ? ஆகவே நமது சமயத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு மாறுபாடில்லாமல் நம் வழிபாட்டு முறைகளைச் செம்மைப்படுத்துவது தான் நமதுகடன். இதுதான் இயற்கையோடிசைந்த வாழ்வு; தெய்வநியதி.

''அன்பேசிவம்; அன்பர் பணியே இறைபணி;'' என்பவற்றை நமது சமயவழிபாடுகள் நன்கு புலப்படுத்தல் வேண்டும். ''அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்'' என்பதே சிவயோகிகள் நமக்கு வழங்கிய மூலபண்டாரம். படமாடுங்கோயில்வழிபாடு நடமாடுங்கோயில்களாகிய மனிதர் குலத்துக்குப் பணி செய்தலோடிசையவேண்டும். இனிநாம் போற்றவேண்டிய மகா மந்திரம் அப்பர் எனும் சிவஞானச் செல்வர் அருளிச்செய்த ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பதாகும். இதுவே சமயப் பற்றில்லாதவர்களையும் இழுத்து இழுத்து அன்பராக்கத் தக்க இனியமந்திரம்.

அன்பர்பணி செய்தற்குச் சித்தஞ் சிவமாதல் வேண்டும். இதற்கு இக்காலத்திலே மிகப் பொருத்தமான வழிபாட்டு முறை அருட்பாடல்கள் புலப்படுத்தும் பாடல் நெறியேயாகும். சைவ சமயாசாரியர்கள் யாவரும் திருக் கோயில்கள் தோறும் சென்று பக்கவாத்தியங்களோடு தமிழ் மாலைகளைப்பாடிப் பேரின்பம் பெற்றார்கள். ஆனாயநாயனார் புல்லாங்குழல் வாசித்ததனாலே முத்தியடைந்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தருடைய தேவாரங்களை யாழிலே இசைத்துச் சிவகதிபெற்றதை யாவரும் அறிவர். இசையின் பெருமையையும் தாய்மொழியின் சிறப்பையும் உணர்ந்து, இரண்டையும் ஒன்றாகப்பிணைத்துப் போற்றிய தமிழ்மக்கள் கண்ட சிறந்த நெறியே இப்பாடல் நெறி. இதன் பெருமையையையும் இக்காலத்துக்கு ஏற்றதகைமையையும் உணர்ந்தே உத்தமர்காந்தியடிகளும் இதனைப் போற்றிப்பரப்பினார்.

சிவபெருமான் தமிழிசை கேட்பதில் மிக்கவிருப்ப முடையவர் என்பதையும் தமிழர்கள் தமிழ்ப்பாடல் களையேபாடி அர்ச்சிக்க வேண்டுமென்பதையும் பெரிய புராணமும் தேவார திருவாசகங்களும் கூறுகின்றன. "நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர்" என்று சுந்தரர் சிவபெருமானைப் பழித்தார். "காதாரமுதம் பெறவன்றோர்காரிகை பாற் றூதாய்ச் சென்றார்" என்று ஒருபுலவர் பாடினார். கடவுள் "பண்ணாரின்பமாயபரஞ்சுடர்" என்று சுந்தரர் கூறியதன் உண்மையை உணர்ந்து பாருங்கள்.

தமிழிலே கடவுளை வைதாலும், பொய்யாகப் புகழ்ந் தாலும் அவருடைய அருள் கிடைக்குமென்று சிவஞானச் செல்வர்கள் கூறியுளர். எனவே, நமது செந்தமிழ் மொழியின் கடவுட்டன்மையையும், இனிமையையும், பாடல்நெறியின் பெருமையையும் பற்றிப் பரக்கப்பரக்க உரைக்கவேண்டுமா! இதனாலன்றோ "உளக்குமறைநாலி லும் உயர்ந்ததமிழ்" என்று கம்பரும், "யாமறிந்தமொழி களிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்," என்று பாரதியாரும் பாடினார்கள். "உல கத்திலே சிறந்த பாட்டுக்கள் கிரேக்க மொழியிலேதான் உள்ளன. இந்தப்பாடல்களிலும் சிறந்தன தமிழ்ப் பாடல்களே" என மேனாட்டறிஞர் வின்சுலோவும், "பாட்டுக்களிலே சிறந்தது தமிழ்ப்பாடலே" எனவட நாட்டுக்கவிஞர் தாகூரும் கூறினார்கள். "முத்தமிழால் வைதாரையு மங்குவாழவைக்கும்" முருகன் என்று திருப் புகழைப்பாடிய அருணகிரியார் திருவாய் மலர்ந்தார்.

''பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாகக் கொள்வானே,'' என்று பாடினார் சுந்தரர்.

''எங்களுடைய குரல் கூடாது. நல்லமுறையிலே பாடவுந் தெரியாது'' என்று சிலசைவர்கள் எண்ணிக் கோயில்களிலே கூடப் பக்திப்பாடல்களைப் பாடுவதில்லை. இவர்கள் ''கோழை மிடறாகக் கவிகோளும் இலவாக இசைகூடும் வகையால் ஏழையடியாரவர்கள் யாவைசொன சொன் மகிழும் ஈசன்'' எனும் சம்பந்தர் திருவாக்கை உணர்ந்து இனியாகுதல் பாடி வணங்குவார்களாக. உள்ளத்திலே பெருகும் அன்பிலிருந்து பிறக்கும் சொன்மலர்களின் பெருமையைச் சம்பந்தரன்றி வேறு யார் அறிய வல்லார்? பிறமொழிகளுக்கு அடிமையாகி நம் உரிமையையும் பெருமையையும் இழந்த நாம் ''ஏழையடியாரவர்கள் யாவை சொன சொன் மகிழும் ஈசன்'' என்பதை இனியாகுதல் நிலைநாட்ட வேண்டும். உள்ளத்தை ஒடுக்கி உத்தமனை நினைந்து, நெக்கு நெக்குருகி அறிந்தவற்றை எல்லாங் கூறிப்பாடுங்கள். ''அறிந்த அளவிற் புகழ்ந்து ஏத்துங்கள்'' என்றார் நக்கீரரும். ''பாடுவார் பாடலுகப்பாய் போற்றி'', என்று அப்பர் கூறியதை மறவாதீர். பாடும் ஆற்றல் வாய்ந்தவர்கள் யாவருங் கடவுளையே பாடவேண்டும். பொய்மையாளரைப் பாடக் கூடாதென்றும் சுந்தரர் பாடியுளர். உள்ளத்திலிருந்து பிறக்கும் பாடல்களையும், நம் சிவஞானச் செல்வர்கள் பாடித் தந்த அருட் பாடல்களையும் பாடிப்பரவுவதுதான் பாடல் நெறியாகும்.

''மதிதருவான் நெஞ்சமே யுஞ்சுபோக வழியாவது
இதுகண்டாய் வானோர்க் கெல்லாம்

அதிபதியே ஆரமுதே ஆதியென்றும் அம்மானே
ஆரூர் எம்மையா வென்றும்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்சூழும்
வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே காலகாலா கற்பகமே
என்றென்று கதறா நில்லே''

எனும் அப்பர் தேவாரம் இதனை விரித்து விளக்குகிறது. இந்த நெறியே இனி எங்கும் பரவவேண்டும். அருட் பாடல்களைத் தனிததும் சேர்ந்தும் பாடலாம்.

சமயாசாரியர்கள் நால்வரும் அருட்புலமை மிக்கதமிழ் நாவலர்களாக விளங்கினார்கள். சித்தஞ்சிவமாகிய பின் செந்தமிழ்மாலைகளைப்பாடி நமக்கு அளித்துளர். சிவ பெருமானே அவர்களைப் பாடுவித்தாரென்று அவர்களே கூறியுளர். ''பன்னாட்பாமாலைபாடப்பயில்வித்தானை,'', ''நாயேனைத்தன்னடிகள் பாடுவித்த நாயகனை'' எனுங் கூற்றுக்களைக்காண்க. இவர்களுடைய தேவார திருவாச கங்களை விடச்சிறந்த அருட்பாடல்கள் வேறெம் மொழி யிலுமில்லை. மொழிக்கு மொழி தித்திக்கும் இவற்றை இறைவன் விரும்பி ஏற்பாரென்பதை 'நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை'' எனும் சுந்தர மூர்த்தி நாயனார் திருவாக்குப் புலப்படுத்துகிறது, ''தமிழ் மாலை செம்மாந்து இருந்துவாய் திறப்பார் சிவலோகத் தாரே'' என்றும் ''திருஞானசம்பந்தன் சொன்மாலை தஞ்சமெென நின்றிசைமொழிந்த அடியார்கள் தடுமாற்றம்

வஞ்சம் இலார்'' எனவும் நாயன்மாரே இவற்றின் பெரு மையைக் கூறினர். ''சொல்லியபாட்டின் பொருளு ணர்ந்து சொல்லுவார் செல்வர்சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப்பணிந்து'' என்று மணி வாசகர் திருவாய் மலர்ந்துளார்.

ஆகவே இவற்றின் பொருளை உணர்ந்து நாம் இசை யுடன் பாடிக்கடவுளைத் தொழவேண்டும். பொருளறிந்து உணர்ச்சியுடன் இவற்றை ஓதினால் இவை நம்மைச் சிவ நெறியிற்புகுத்தி, அன்பர் பணியில் ஈடுபடச் செய்து, பேரின்பம் பெறச் செய்யும். ''தாவரம்'' ஏற்படுதற்கும், ''தனக்கு ஒரு வீடு'' உண்டாவதற்கும் தேவாரங்கள் இன் றியமையாதன என்பதையும் அவற்றைப் படிப்பதால் இவை உண்டாக வேண்டும் என்பதையுமே,

''தாவாரம் இல்லைத் தனக்கொரு வீடில்லைத்
தேவாரம் ஏதுக்கடி — குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி''

எனும் சித்தர்பாடலும் புலப்படுத்துகிறது.

பாடல்நெறியின் பயனையும் நாயன்மார் நன்கு எடுத்து விளக்கியுளர். ''வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்'', ''பாடி நாடொறும் பரவு வார் வினை பற்றறுக்குமே;'' ''பண்ணொன்ற இசை பாடும் அடியார்கள் குடியாக மண்ணின்றி விண்கொடுக் கும் மணிகண்டன்;'' ''பாட்டுப்பாடிப் பரவித்திரிவார் ஈட்டும் வினைகள் தீர்ப்பார்'' முதலியன காண்க. வழி

பாட்டு முறைகளுள் இப்பாடல் நெறியே சிறந்ததென் பதை நாவுக்கரசர் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டி யுளர். ''அளப்பிலை கீதஞ்சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே'' என்பது அவர் தம் திருவாக்கு. ''அம்பலக் கூத்தனைப் பாடலாளர்க்கல்லாற் பயனில்லையே !'' என் பது அவர் கண்ட முடிபு.

11

சந்தேகம் வேண்டாம் *

இந்த உலகவாழ்வே கண்கண்ட வாழ்வு. இந்த உலக வாழ்வின்பின் மக்கள் அடையும் நிலைபற்றிப் பலரும் பல வாறு கூறுவர். இந்நிலைபற்றிப் பேசும் சமயங்களும் தம்முள் மாறுபட்ட கருத்துடையனவாக முரண்படுகின்றன. நரகம், சுவர்க்கம், மறுபிறப்பு முதலியன உண்டு என்பாரும் இல்லை என்பாரும் உளர். கருதல் முதலிய அளவைகளான் அன்றிக் காட்சி அளவையான் இறப்பின் பின் மக்கள் நிலைமையை அறிதல் சாலாது. எனவே, இவ்வுலகவாழ்வே உறுதியானது; கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனவாழ்வதே இன்பவாழ்வு என வாதிடுவாரும் உளர். இதனால் மக்கள் பலருடைய உள்ளத்தில் இவ்வுலகில் நல்வினை செய்யவேண்டுமா? ஒழுக்கமாகக்கட்டுப்பட்டு வாழவேண்டுமா? எனும் ஐயங்கள் பிறக்கின்றன. இந்த ஐயங்களால் அறிவு சிறக்காமல், உணர்ச்சி பிறழ்ந்து மக்கள் பலர் தம்மையும் சமுதாயத்தையும் கெடுக்கின்றனர்.

இத்தகைய ஐயங்களை உடையவர்களுக்குச் சிறந்த முறையில் கோப்பெருஞ்சோழன் எனும் அரசர் அறிவுரை கூறியிருக்கிறார்.

---

* *18-5-1962* இல் வெளியிடப்பட்ட தெய்விக வாழ்க்கைச் சங்க வெள்ளிவிழா மலரில் இடம் பெற்றது.

ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் அவர் கூறிய இந்த அறிவுரை அன்றும் இன்றும் என்றும் பொருத்தமுடையதாக மிளிர்கிறது; அறிவுக்குவிருந்தாகத் தருக்கத்துக்கு இசைந்ததாக, உள்ளத்தைப் பிணிப்பதாக இருக்கின்றது; படிக்கப் படிக்க அரசரின் பேருள்ளத்தையும், ஆராய்ச்சித் திறனையும், உண்மையை உணரும் ஆற்றலையும் புலப்படுத்துகிறது.

இவ்வுலகத்து மக்கள் ஒவ்வொருவருடைய வாழ்வுக்கும் ஓர் உயர்ந்த குறிக்கோள் இருத்தல் வேண்டும். எவ்வகைத் தொழிலைச் செய்து எந்த நிலையில் வாழ்ந்தாலும் இக்குறிக்கோள் இன்றியமையாதது. இக்குறிக்கோளின்றேல் மக்கள் வாழ்வு மலர்ந்து சிறந்து ஓங்கவழியில்லை. அவர்களுடைய தனிவாழ்வும் சமுதாய வாழ்வும் இசைந்து இடர்ப்பாடின்றி உயரமுடியாது. எனவே இறப்பின் பின் பிறஉலகில்-மறுபிறப்பில் பெறும் நன்மைகளை நம்பாதவர்களுக்கு இவ்வுலகில் அவர்கள் அடைய வேண்டிய சிறப்பை அரசர் சுட்டிக்காட்டுகிறார். அவர் கூறும் சிறப்பு-குறிக்கோள்-தமிழினம் விழுமியது, இன்றியமையாதது எனக்கொண்ட குறிக்கோளேயாகும். எனினும் இதை அவர் நம் உள்ளத்திற் பதியவைக்கும் முறை ஈடிணையற்ற முறையாகவுளது.

"யானை வேட்டை மிகவும் அரிய செயல்; துணிவும் வீரமும் மிகவேண்டியசெயல்; அபாயம் நிறைந்த செயல். இத்தகைய வேட்டைக்குப் போகும் ஒருவன் யானை வேட்டையாடி வெற்றிபெறவும் கூடும். காடை முதலிய

பறவைகளை வேட்டையாடுதல் மிக இலகுவான செயல்; எவரும் எவ்வகை அபாயமுமின்றிச் செய்யத்தக்க செயல்; காடைவேட்டையாடச் சென்றவன் வெற்றி அடையாமல் வெறுங்கையுடன் திரும்பவும் கூடும்.

எனவே, அரிய பெரு முயற்சிகள் இலகுவில் பயன்தர மாட்டா என்றோ, இலகுவான சிறு முயற்சிகள் உறுதியாகப் பயன்தரும் என்றோ கூறல்முடியாது. ஆகவே இலகுவிற் பயனடையலாம் என்று சிறுமுயற்சிகளை மட்டும் நாடல்வேண்டாம். பெருமுயற்சிகளை விரும்புங்கள். உள்ளும் முயற்சிகள் யாவும்-விரும்பும் வினைகள்யாவும் பெரியனவாயிருத்தல்வேண்டும்.

உயர்ந்த விருப்பத்தையுடையவர்களே உயர்ந்தவர்கள். இத்தகையோர் செய்யும் முயற்சிகளால் பயன் உண்டாகுமானால் அவர்கள் மேலுலகில் அதனை அனுபவிப்பார்கள். அவ்வாறு ஒருலகில்லை. அப்படி அனுபவிக்கவும் மாட்டார்கள் எனின், மறுபிறப்பிலாகுதல் அவர்கள் அனுபவித்தல் கூடும்; அப்படி மறுபிறப்புமில்லை; மறுபிறப்பு இருந்தாலும் அப் பிறப்பில் அவர்கள் அதன் பயனை அனுபவிப்பார்கள் என்பதற்கு என்ன சான்று உண்டு? என்று வினவினால், அதனையும் விட்டுவிடுவோம்.

இப் பிறப்பிலேயே அவர்கள் தம் பெரும் செயலால் பெரும் புகழை நிறுவலாம்; இமயமலையின் உயர்ந்த

சிகரம்போல உயர்ந்து நிலைத்து விளங்கும் புகழை ஈட்டலாம்; இறக்கும்பொழுது பழி சுமக்காத உடம்போடு இறக்கலாம். இவ் வுலகத்திலே பெறும் இப்புகழும் பழி யின்மையும் கண்கண்ட பயன்களாக இருக்கும். எனவே, சந்தேகம் வேண்டாம்.

''எவ்வகையாக ஆராய்ந்தாலும் பெரும்முயற்சி செய்தலே மக்களுக்குக் குறிக்கோளாக இருத்தல்வேண்டும். இக் குறிக்கோளுடன் முயல்வோர் மறுஉலகமோ மறு பிறப்போ இல்லை என்பார்களாயினும் அவர்களுடைய உயிருக்கு இவ்வுலகில், இப்பிறப்பில் இசை உண்டு; உடம்புக்குப் பழி செய்யாத உடம்பு என்ற பெயருண்டு,'' என்று அரசர் கூறுகிறார்.

''இந்த உண்மைகளை உணராமல் நல்வினைகளைச் செய்தற்குப் பல ஐயங்களை எழுப்புகிறவர்களுடைய அறிவில் அழுக்கு இருக்கிறது. உள்ளத்தில் துணிவு இல்லை'' என்றும் அரசர் சுட்டிக்காட்டுகிறார்.

இனி அவருடைய பாடலைப் படிப்போம்.

''செய்குவங் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடுஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே,
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே.
அதனால்
உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனில்

தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையுங் கூடும்;
மாறிப் பிறவா ராயினும், இமயத்துக்
கோடு உயர்ந் தன்ன தம்இசை நட்டுத்
தீதுஇல யாக்கையொடு மாயதல்தவத் தலையே.''

(அறாஅர்-நீங்கார், கசடு-அழுக்கு, ஈண்டு-செறிந்த, காட்சி-அறிவு, குறும்பூழ்-காடை, வறுங்கை-வெறுங்கை, வேட்டத்து-விருப்பத்தையுடைய, உயர்ந்திசினோர்க்கு-உயர்ந்தோர்க்கு, எய்தல்-நுகர்தல், தொய்யா உலகம்-சோர்வில்லாத இன்ப உலகம், கோடு-சிகரம், இசை-புகழ், யாக்கை-உடம்பு, தவ-மிக, தலையே-சிறந்ததே.)

12

புலால் மறுத்தல் *

நம் தமிழ்நாட்டிலே பண்டைக்காலந் தொடங்கியே சைவமடங்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றி வருகின்றன. சமயாசாரியர் காலத்திலே பல மடங்கள் சிறந்திருந்தன. திருநாவுக்கரசு நாயனார் திருப்பூந்துருத்தியில் "திருமடம் ஆங்கொன்று செய்தார்" எனச் சேக்கிழார் கூறுகிறார். தமிழ்வேந்தர்கள் மறைந்து தமிழகம் பிறநாட்டாருக்கு அடிமைப்பட்டு அல்லலுற்ற அக்காலத்திலே தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணியாற்றிய தனிப்பெருமை, தமிழகத்துச் சைவ மடங்களுக்கு உரியது.

இத்தகைய மடங்களுக்குள்ளே முன்னணியில் - முதலாவதாய் விளங்குவது இந்தத் திருவாவடுதுறை மடமாகும்.

இம் மடத்திற்கு மிகப் பெருமதிப்பினை அளித்த தலைவர்களின் சிறப்பினை அளவிட்டுரைக்க வொண்ணாது. திருவாவடுதுறை மடத்தை நினைக்கும்பொழுது அதனோடு தொடர்பு கொண்டு பெருந்தொண்டாற்றிய மாதவச் சிவஞான முனிவரும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், மற்றும் பல தமிழ்ப்பேரறிஞர்களும் நம் அகத்தே சுடர்விட்டொளிர்கின்றனர். தமிழும் சைவமும் ஒன்றியதுபோல இந்தத் திருவாவடுதுறை தமிழுடனும் சைவத்துடனும் ஒன்றியுள்ளது.

---

* திருவாவடு துறை மடத்தில் நடைபெற்ற ஏழாவது திருமந்திர மாநாட்டில் 25-1-1960இல் நிகழ்த்திய உரை.

எங்கள் நாவலர்பெருமான் அவர்களுக்கும் இந்தத் திருமடத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. நாவலர் என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கிய பெருமையும் இம் மடத்துக்கே உரியது. அவர் இம் மடத்துக்கு எழுந்தருளியதைப்பற்றி வியப்பூட்டும் பல கதைகளுண்டு.

இந்த மடம் தொடங்கிய காலந்தொட்டு மரபுநிலை பிறழாதபடி வளர்ந்துவருவது மகிழ்ச்சிக்குரியது. தமிழ் நாட்டிலே தமிழர்களால் நடத்தப்படும் இந்த மடம் சைவத்தை மட்டுமன்றித் தமிழையும் பல துறைகளிலே வளர்த்துவருவது போற்றத்தக்கது.

சைவத்தோடு தமிழுக்கு உள்ள தொடர்புக்கிணை யான தொடர்பு சைவத்தோடு வேறெந்த மொழிக்கு மில்லை. சைவமும் தமிழும் பிரிப்பறியாதன. தென் னாட்டுத் தமிழகமே சைவத்தின் பிறப்பிடம். இதனா லேயே மணிவாசகப்பெருமான் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்று திருவாய் மலர்ந்துள்ளார். "தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டான்" என்றும் அவர் கூறு கிறார். எவ்வளவுக்கு எவ்வளவு தமிழோடு சைவத்தைப் பிணைத்து வளர்க்கிறோமோ அவ்வளவுக்குச் சைவம் பொலிகின்றது. இந்தப் பேருண்மையை நமது சமயாசாரி யர்களின் வாழ்வு நெறி நமக்கு அறிவுறுத்துகிறது. மொழிக்கு மொழி தித்திக்கும் தேவார திருவாசகங்களை அருளிச்செய்து தமிழையும் சைவத்தையும் பிணைத்து வைத்த பேரருளாளர்கள் அவர்கள். தேவாரங்கள் முன்பு

''தமிழ் மாலைகள்' என்றே போற்றப்பட்டு வந்தன. ''பன்னிய நற்றமிழ்மாலை பாடுவித்து என்சிந்தை மயக் கறுத்த'' என்பது அப்பர் திருவாக்கு. ''நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை'' என்பது சுந்தரர் தேவாரம்.

மூவர் தேவாரங்களையும், 'மூவர் தமிழ்' எனத் திருமுறைகண்ட புராண ஆசிரியரும் ஔவையாரும் கூறி யுள்ளனர். ''மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொலும் தமிழ் கேட்கும் திருச்செவி'' என்பர் தாயு மானார். நம் சேக்கிழார்பெருமான், தேவாரங்களைத் தமிழ்மாலைகள் என்றே கூறுகிறார். சைவத்தையும் தமிழையும் அசைக்கமுடியாமல் பிணைத்துவைத்தவர் சேக்கிழார். அவருடைய காப்பியத்திலே தெய்வத் தமிழே மணக்கிறது; 'மல்லல்நெடுந்தமிழ்' 'தீந்தமிழ்' 'வண்தமிழ்' ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்' என்று கூறிச் சேக்கிழார் தமிழ்டத்துத் தாம்கொண்ட ஆராமையை நமக்குக் காட்டுகிறார். தென் தமிழ் நாட்டுக்கே உரியதான தென்றலைப் பற்றிக் கூறும்பொழுதும் சேக்கிழார் அதனைத் தமிழுடன் இணைத்துச் 'செந்தமிழ் மாருதம்' என்கின்றார். தமிழ் என்றால் இனிமை; தமிழர் என்றால் இனியவர். தமிழ்நாட்டிலே — தமிழர்நாட்டிலே மறச் செயல்கள் இல்லை என்னும் கருத்துகளையெல்லாம் ''மறம் பயின்றதெங்கோ தமிழ் மாருதம்'' என்னும் வினா வினாலே புலப்படுத்தித் தமது பற்றைக் காட்டுகின்றார் சேக்கிழார்.

இந்த உலகத்திலே எத்துறையிலும், எந்த மொழிக்குறை குறையாமல் எங்கள் தாய்மொழியாம் தமிழ் ஓங்கி வளர வேண்டுமென்று சேக்கிழாருள்ளம் துடிதுடித்தது. இந்தத் துடிப்பைப் பெரியபுராணத்திலே பல இடங்களிலே காணலாம்.

திருஞானசம்பந்தர் சைவத்தை விளக்குதற்கு மட்டுமன்றித் தமிழை உயர்த்துதற்கும், நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்புதற்கும் தோன்றியருளினார் என்பதை அவர் எங்கள் உள்ளத்தில் பதியத்தக்க முறையில் எடுத்துரைத்துள்ளார். "வண்தமிழ் செய்தவம் நிரம்ப" ஞானசம்பந்தர் தோன்றினார் எனவும், "தென்றமிழ் விளங்க வந்த திருக்கழுமலத்தார்" எனவும் அவர் கூறுவன காண்க.

ஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தமையால் திசைகள் யாவற்றையும் தென்திசை வென்றுவிட்டது' பிறவுலகத்தை இவ்வுலகு வென்றுவிட்டது எனக் கூறிய சேக்கிழார், அயலிலுள்ள மொழிகளையெல்லாம் தமிழ் வென்றுவிட்டது எனவும் கூறித் தமிழ்த்தாய்க்கு ஒப்புயர்வற்றதோர் இடத்தை அளித்திருக்கிறார்.

"திசைஅனைத்தின் பெருமைஎலாம்
தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும்
மேதினியே தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல"

என்பது சேக்கிழார் வாக்கு.

தேவாரங்களைத் தமிழ்மாலைகள் என்று இயம்பிய சேக்கிழார் திருமந்திரத்தையும் "தமிழ் மூவாயிரம் எனக் குறிப்பிடுகிறார். அவர் தமிழோடு திருமந்திரத்'தையும் இணைத்துத் தமிழுக்கு முதன்மை அளிக்கிறார். அன்றியும் ஆகமப்பொருளை மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்பச் செய்தவர் சிவபெருமான் என்று கூறி, திருமந்திரம் தமிழாகமம் என்னும் உண்மையையும் தெளிவாக்குகிறார்.

"உள்ளுணர் வான ஞானம்
 முதலிய ஒருநான் குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறும்
 திருமூலர் பெருமை செப்ப"

என்று சேக்கிழார் கூறி, திருமூலர் பெருமைக்குக் காரணம் அவர் ஆகமத்தைத் தமிழில் செய்ததே என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

"முடிமன்னு கூனற்பிறை யாளன்
 றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே
 பரவிட்டு என்னுச்சி
அடிமன்ன வைத்த பிரான்
 மூலனாகின்ற அங்கணனே"

எனவரும் நம்பியாண்டார்நம்பிகள் கூற்று இதனை வலியுறுத்துகிறது.

இத் திருவாவடுதுறையிலே திருமூலர் இந்தத் திருமந்திரத்தை அருளிச் செய்தார். எனவே இங்கு இத்திருமந்

திரத்துக்குப் பெருவிழா எடுத்தல் மிகமிகப் பொருத்த மானதே. திருமந்திரத்தின் பெருமையை உணர்ந்து இத் திருத்தலத்துக்கும் திருமந்திரத்திற்கும் உள்ள தொடர்பை நிலைநாட்டி, ஆண்டுதோறும் இந்தத் திருமந்திரத்தைப் போற்றி விழா எடுத்துவரும் இம் மடத்தின் சிவத்தலைவரைப் பாராட்டுகிறேன்.

திருமூலநாயனார் சிவனருளாலே திரு ஆவடுதுறையிலே அமர்ந்து திருமந்திர நூலை அருளிச்செய்தமையாலே தமிழுக்கும் ஒப்பற்றதோர் உயர்வு உண்டாயிற்று. அவர் எழுந்தருளியிருந்த இத் திருத்தலம் போல, ஆகமக் கருத்துகளை அவர் பாடியருளிய தமிழ்மொழியும் உயர்வற உயர்ந்துள்ளது. அயல்மொழிகள் யாவற்றையும் அது வென்றுளது. எனவே திருமந்திரச் செம்பொருளை ஆராயும்பொழுதெல்லாம் திருமந்திரம் தமிழுக்களித்த பெருமை நம் உள்ளத்தை ஆட்கொள்கிறது. தமிழிலே வேதமில்லை என்னும் குறையையும் ஆகமம் இல்லை என்னும் குறையையும் இறைவனே நால்வர் பெருமக்கள் வாயிலாகவும் திருமூலர் வாயிலாகவும் நீக்கியருளினார். ஏனைய திருமுறைகளை ஆணையிற் கிளந்த பெருமக்களும், நிறைமொழி தந்த திருவள்ளுவரும் வினையின் நீங்கி விளங்கிய அறிவினால் முதனூல்களை-மறைநூல்களைத் தமிழில் ஆக்கி அருந்தமிழைத் தெய்வத் தமிழாக விளங்கச்செய்துள்ளார்கள். திருமூலர்,

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

எனத் திருவாய்மலர்ந்துள்ளார். இந்தப் பாட்டுடன் சேக்கிழார் திருவாக்காகிய,

"அற்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்"

என்பதை ஒப்பிட்டுணர்க.

"சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால்"

என்னும் திருமூலர் கூற்று சைவத்துக்கும் தமிழுக்கும், தமிழுக்கும் சிவபெருமானுக்கும், தமிழ்நாட்டுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள தனித்தொடர்பை உறுதிப்படுத்துகிறது; மேலும்,

"தென்னா டுடைய சிவனே போற்றி"

என்று மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகத்துக்கும்,

"தமிழன் கண்டாய்
"முத்தமிழும் ஆயினானை"

என்னும் தேவாரப் பகுதிகளுக்கும் நல்ல விளக்கம் அளிக்கிறது.

திருமூலநாயனார் சிவனருளாலே செந்தமிழ்த் திருமந்திரத்தை ஆக்கி ஆகமப் பொருளைத் தெளிவுறுத்தியது, மக்கள் பிறவித்துன்பம் நீங்கிப் பேரின்பம் அடையும் வழியைக் காட்டுதற்கேயாகும். ஆகமம் என்னும் சொல்லுக்குப் பல கருத்துக்கள் கூறுவர். மணிவாசகப் பெரு

மானுடைய திருவாசகம் ஆகமத்தின் பொருளை நன்கு விளக்குகிறது.

"ஆகம மாகி நின்று
அண்ணிப்பான் தாஅள் வாழ்க"

என்று அவர் திருவாய்மலர்ந்துள்ளனர். இறைவனோடு உயிர்களை அணுகச்செய்வதே ஆகமத்தின் நோக்கம். உலகிலே ஒருவரோடு ஒருவர் அணுக்கராதற்கு-நெருங்கிய தொடர்பு உடையவராதற்குக் காரணம் அன்பே என்பதை நாம் யாவரும் நம் அனுபவத்தால் அறியலாம். ஆகவே ஆகமநெறியின் பயன் அன்பையும் அதன் குழவியாகிய அருளையும் பெறுதலேயாம். அருள் அன்பில் அடங்கும். இறைவனை அன்பினாலே தம் அகத்திலே அடைத்து வைப்பவர்களே ஆகமசீலர்கள். இதனை,

"ஆர்வல்லார் காண
அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே
போர்த்தமைத்துச்-சீர்வல்ல
தாயத்தால் நாமும்
தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து"

என்று காரைக்காலம்மையார் விளக்கிச் சொல்லுகிறார்

"கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்குஅன் பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனை ஒக்குமால்"

முன்வரும் திருநாவுக்கரசர் வாக்கும்,

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே"

எனவரும் திருமந்திரமும்,

"அன்பேயென் அன்பேஎன்று
அன்பால் அழுதரற்றி
அன்பே அன்பாக
அறிவழியும்-அன்பன்றித்
தீர்த்தந் தியானம்
சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும பழமன்றே தான்"

என்ற திருக்களிற்றுப்படியாரும் அன்பின் உயர்வைப் புலப்படுத்துகின்றன.

சைவசமயத்துக்குப் பெருமையளித்த நாயன்மார்களுள்ளே அன்பின் எல்லையாக விளங்கியவர் கண்ணப்ப நாயனார் என்று திருவாசகம் கூறுகிறது.

"கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில்
என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பி"

கண்ணப்பநாயனாரிடத்து எவ்வளவு அன்பிருந்ததோ அவ்வளவுக்கு அன்பிலே குறைந்திருந்த என்னை-அனுக்

னாக முடியாத என்னை எம்பெருமான் தன் வான் கருணையினாலே ஆண்டுகொண்டான் என மணிவாசகர் கூறி அன்புக்கும் அனுக்கிரகத்துக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்தினார்.

> வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
> கேளார்கொல் அந்தோ கிறிபட்டார்-கீழாடை
> அண்ணற்கு அனுக்கிரராய்க் காளத்தி யுள்நின்ற
> கண்ணப்ப ராவார் கதை''

என்று கூறுகிறார் நக்கீரர்.

மக்களை இறைவனுடன் ஒன்றுவிக்கும் இப் பேரன்பினையும் அதன் முதிர்ச்சியாகிய அருளினையும் பெருக்குதற்கு மக்கள் கடைப்பிடித்தொழுக வேண்டியன வற்றையும் களைய வேண்டியனவற்றையும் திருமந்திரத்தின் முதலாம் தந்திரத்திலே நாயனார் எடுத்துக் கூறியுள்ளார். இத் தந்திரத்திலே கூறப்படும் அறநெறிகள் பிற அறநூல்களிலும் விளக்கப்பட்டுள. முதலாம் தந்திரத்திலுள்ள இருபத்து நான்கு அதிகாரங்களில் இரண்டொன்றைத் தவிர்ந்த ஏனைய யாவும் திருக்குறளிலும் காணப்படுகின்றன.

அன்பையும் அருளையும் வளர்க்கும் அறங்கள் யாவற்றுள்ளும் கொல்லாமையென்னும் அறமே மிகச் சிறந்ததாகும். கொல்லாமை அறத்தின் சிறப்பைத் தமிழ் நூல்கள் பன்முகமாக விளக்கியுள்ளன. பிற உயிர்களைக் கொல்லுதற்குப் பல காரணங்களுள. அவற்றுள்ளே அவற்றின் புலாலை உண்ணுதற்குக் கொல்லுதலும் ஒன்றாகும். ஏனைய கொலைகளுக்கும் இதற்கும் பல வேறு

பாடுகள் உண்டு. கொலைக்குக் காரணமாகவும் கொலையின் காரியமாகவும் உளது ஊன் உண்ணல். இதனால் கொல்லாமை அறத்தைக் கூறவந்த நூல்கள் பலவும் கொல்லாமையைமட்டும் அன்றிப் புலால் மறுத்தலையும் தனியாக எடுத்துரைத்துள. திருமூலரும் கொல்லாமையையும் கூறிப் புலால் மறுத்தலையும் தனிப்பட உரைத்தார். திருக்குறளும் இவ்வாறே பிரித்துக் கூறியுளது. பிற உயிர்களைக் கொல்வதையும் ஊன் உண்டலையும் ஒழித்தல் பேரறம்.

ஆறறிவுபடைத்த மக்களைக் கொல்லாதிருத்தல் நன்று என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். உலகம் முழுவதும் மக்கட் கொலையைத் தடுக்கச் சட்டங்கள் உள. பிற உயிர்களைக் கொல்லுதல் அறமன்று எனக் கூறின், இதனை ஏற்றுக்கொள்ளுதற்குப் பலர் பின்னிற்பர். ஊன் உண்ணுதற்காகவும் ஓருயிரையும் கொல்லல் கூடாது என்றால் இக் கூற்றை எதிர்ப்பதற்கும் இதனைக் கூறுவாரைத் தூற்றுதற்குங் கூடப் பலர் முற்படுவர். ''இந்த இருபதாம் நூற்றாண்டிலே இந்தக் கூற்றுக்கு இடமில்லை; உண்ணுவதற்குப் போதிய உணவின்றி அவதிப்படும் மக்கள் ஊனை உண்ணுதல் கூடாதெனில் வேறெதையுண்டு வாழ்வார்கள். ஊனுண்ணாதவர் மிக மிகக் குறைவாக வுளர். ஏனையோர் யாவரும் ஊனுண்டு தானே வாழ்கின்றனர். ஊனுண்ணுதலை மக்கள் ஒழித்துவிட்டால் ஊன் வழங்குதலில் ஈடுபட்டுள்ள கோடிக்கணக்கான மக்கள் எவ்வாறு வாழ்வர்? தாவரங்களே உண்டாகாத குளிர்மிகுந்த இடங்களிலே வாழ்பவர்கள் ஊனுண்ணாமல் எவ்வாறு வாழ்வார்கள்? ஊனுண்ணலை ஒழித்தல் வேண்டும் என்பவர்

கள் பகுத்தறிவில்லாதவர்கள் ; சமுதாயத்தை ஏமாற்றிப் பிழைப்போர்'' என்றெல்லாம் பலர் கூறுவார்கள்.

இன்று உலகத்திலே பல நாடுகளிலே குடியாட்சி நடக்கிறது. குடியாட்சி முறைப்படி வாக்கெடுத்தால் புலால் மறுத்தலை ஆதரிப்போர் இலட்சத்துக்கு ஒருவர் கூட இருப்பார்கள் என்று கூறமுடியாது: எனவே மக்கள் விரும்பாத - மேற்கொண்டொழுக முடியாத புலால் மறுத்தலெனும் அறத்தைச் சிவநெறிச் செல்வர்கள் ஏன் வலியுறுத்துகிறார்கள் என்பது எண்ணி ஆராய்ந்து பார்க்க வேண்டியதொன்று,

முதலில் இப்பொழுது இந்த உலகத்திலே புலாலை ஒழித்து வாழ்கின்றவர்கள் தொகையாக எங்கு வாழ்கிறார்கள். இவர்கள் இவ்வாறு வாழுதற்குக் காரணந் தான் என்ன ? எப்பொழுது தொடங்கி அவர்களுடைய இனத்தவர்கள் புலாலுண்ணலை நீக்கியுள்ளனர் என்பனவற்றை ஆராய்தல் இன்றியமையாதது.

இவ்வுலகில் ஊன் உண்ணாமல் வாழ்கின்றவர்களிற் பெரும்பான்மையினர் தமிழ் நாட்டிலேதான் வாழ்கிறார்கள். ஊன் கலக்காத உணவை இன்னும் சைவ உணவு எனத் தமிழ் மக்கள் வழங்கி வருகிறார்கள். சைவத் தமிழர்களிற் பலர்—சிறப்பாக உழுதூண் தொழிலிலே ஈடுபட்டோரின் வழிவந்தோர்—இன்றும் புலால் மறுத்தலைப் பேரறமாகப் போற்றி வருகிறார்கள்.

நாம் பிறந்து மொழிபயின்று ஆண்டு செல்லச்செல்ல அனுபவம் கூடக்கூட அறிவு வளம்பெற்று உளம் பண்படுதலை அறிகின்றோம். வாழ்வின் எல்லை நீட்சி அடைய

அடைய அகமும் அறிவும் வளப்படுகின்றன. மனித இனங்களின் நாகரிக முதிர்ச்சியும் பண்பு வளர்ச்சியும் இத் தகையதே. இந்த நிலவுலகின் மூத்த குடிமக்கள் இத் தென்றமிழ் நாட்டு மக்களே என்பது உலகறிந்த உண்மை. இப்பொழுதுள்ள மக்களினங்கள் தோன்றாத பழங்காலத்திலும் வாழ்வினில் உயர்ந்து, அறிவினிற் சிறந்து, பண்பாட்டில் ஓங்கி வாழ்ந்த இனம் தமிழ் இனமாகும்.

இந்த இனத்திலும் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் அன்பும் அருளும் நிறைந்த உள்ளத்தினராய்ப் புலால் நீக்கி வாழுதல் உயர்ந்த வாழ்வு என்பதை உணர்ந்து வாழ்ந்தனர். இவ் வுண்மையைப் பட்டினப் பாலையும் பிற சங்க நூல்களும் சிறப்பாக உணர்த்து கின்றன. 'கடலிறவின் சூடு தின்றும் வயலாமைப் புழுக் குண்டும்' வாழ்ந்த மக்களையுடைய காவிரிப்பூம்பட் டினத்திலே,

"கொலைகடிந்தும் களவுநீக்கியும்
நல்லானொடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை
கொடுமேழி நசையுழவரும்"

வாழ்ந்தனர் என அந்நூல் கூறுகிறது.

சைவம்மட்டுமன்றிச் சமணம் முதலிய சமயங்களும் புலாலுண்ணலை விலக்குகின்றன. இச் சமயங்கள் தமிழ்நாட்டில் புகுதற்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மக்களிற் பலர் கொல்லாமை அறத்தைப் போற்றிப் புலாலுண்ணலைக் கடிந்து வாழ்ந்தனர்.

மனிதர்களைப் போலவே பிற உயிர்களும் உடம்போடு கூடி வாழ்ந்து இன்புற விழைகின்றன என்பதையும், மக்களுயிர் செம்மையுறுதற்கு உடம்பு இன்றியமையாதது போலப் பிறவுயிர்களுக்கும் அவற்றின் ஏற்றத்துக்கு உடம்பு இன்றியமையாதது என்பதையும் தமிழ்ச் சான்றோர் நன்கறிந்திருந்தனர்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

எனும் வள்ளுவர் வாக்குக்கிசைய எவ்வுயிரிடத்தும் அருள் கொண்டு வாழும் வாழ்வை அவர்கள் தமது குறிக்கோளாகக் கொண்டனர். அருள் நிறைந்த உள்ளம் எல்லா உயிரையும் தன் உயிர்போல் மதிக்கும் இயல்பினது. பிற உயிரை நீக்க வேண்டி நேரிடின் தம்முயிரையே நீக்கும் பேரருளாளர் நம் தமிழரிடமே விளங்கினர். மனுச்சோழர் பசுக் கன்றுக்காகத் தம் மகனைக் கொல்ல முற்பட்ட அருஞ் செயல் மக்களுக்கு மட்டுமன்றிப் பிற உயிர்களுக்கும் அரசன் வேறுபாடின்றி முறைசெய்ய வேண்டுமெனும் கருத்துத் தமிழ்நாட்டில் அரும்பி மலர்ந்து பொலிந்ததென்பதைக் காட்டுகிறது.

மக்களுடைய துன்பத்தை மட்டுமன்றி, முல்லைக் கொடியின் வாட்டத்தையும், மயிலின் குளிரையும் போக்க நினைத்து அவற்றுக்கு முறையே தேரும் போர்வையும் நல்கிய அருள் வள்ளல்கள் நம் தமிழ்நாட்டிலே தோன்றினார்கள். இதனாலே தான் இந்த உலகத்திலே நம் தமிழ்

நாடே புலால் மறுத்தலாகிய அறத்தைப் போற்றும் பெருஞ் செயலுக்குரிய நாடாயிற்று. எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாது வாழும் குறிக்கோளைப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் போற்றி வாழ்ந்தனர் அன்பு பெருகி, அருள் முகிழ்த்த உள்ளம் உடையோர் புலால் துறத்தலைத் தம் கடனாகக்கொள்ளுதல் இயல்பே. தமிழ் நாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் உள்ள அருட்டிருவாய்ந்த பெருமக்கள் புலாலுண்ணலை நீக்கி வாழுதலைக் காண்கின்றோம்,

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந்தொழும்''

என்று வள்ளுவர் பெருமான் கூறியுளர். கொலை நீக்கிப் புலாலை மறுத்தவர்கள் மனிதருக்குள் தலையான மனித ராகத் — தொழத்தக்க பெரியாராகத் — தெய்வமாகக் கொள்ளப்படுவர் எனும் இக்கூற்று, புலால் உண்டலை ஒழித்தல் எத்தகைய பேரறமாகத் தமிழ் நாட்டிற் கொள்ளப்பட்டது என்பதை நன்கு காட்டுகிறது.

உண்ணும் உணவு வகையினாலே மக்களின் உடல் நலமும் குணநலமும் பாதிக்கப்படுகின்றன. தன் உடம்பை வளர்த்தற்குப் பிற உயிர்களைக் கொன்று அவற்றின் உடலை உண்பவன் எவ்வாறு அருள் உடையவனாகலாம் என வள்ளுவர் வினாவுகிறார். ஒன்றின் உடலினைச் சுவைத்து உண்பதில் ஈடுபடுபவர்கள் நன்மையானவற்றை எண்ணத் தகுதியற்றவர்களாவர். எனவே அருள் வாழ்வினைக் கடைப்பிடிக்க எண்ணுவோர் புலாலுண்ணல் கூடாது.

மனிதனிலும் குறைந்த அறிவுடைய விலங்குகளிலும் புலாலுண்ணாமல் வாழ்பவை பல. வெப்பம் மிக்க நாடுகளிலுள்ள விலங்குகள் மட்டுமன்றி குளிர் மிகுந்த நாடுகளிலுள்ள விலங்குகளிலும் பல தாவர உணவுடன் வாழ்கின்றன. எனவே மனிதன் எங்கு வாழ்ந்தாலும் அவன் தாவர உணவுடன் வாழலாம் என்பதை மறுத்தல் முடியாது; அன்றியும் புலால் உணவிலும் தாவர உணவே மக்களின் உடனலத்துக்கு மிகப்பொருத்தமானதெனவும் அறிஞர்கள் உரைத்துளர்.

திருமந்திரத்தில் புலாலுண்ணாமை பற்றி இரு செய்யுள்கள் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டாவது செய்யுள் இடைச்செருகல் போற்றோன்றுகிறது. இதனை விடுத்து முதலாவது செய்யுளை நோக்குவோம்.

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே."

புலாலை நுகர்வோர் புலையர் எனப்படுவர். புலையர் எனும் இனத்தாரைத் தமிழகத்தில் மிகத் தாழ்ந்தவர்களாகக் கருதினர். இதற்குக் காரணம் அவர்கள் புலாலை உண்டு வாழ்ந்தமையேயாகும். இந்த இனத்தவர் மட்டுமன்றிப் புலாலை உண்ணும் யாவரும் புலையர்களே யாவர். இதனை வலியுறுத்தவே திருமூலர் பெருமான் "பொல்லாப் புலாலை நுகரும் புலையர்" என்றார்.

புலாலைத் தனியே குறிப்பிடாது 'பொல்லாப் புலால்' என்று குறிப்பிடுகிறார். இந்தப் 'பொல்லா' என்னுஞ் சொல் பல கருத்துச் செறிவுகளைக் கொண்டுளது. நன்மக்களை மருட்டி உண்ணச் செய்து அவர்களைப் புலை

யாராக்குதலினாலும், அயல் வீட்டில் ஒரு பிணங் கிடந்தாலும் உண்ணாதவர்களை மயக்கி உண்ணச் செய்தலினாலும், உணவில் ஈ, எறும்பு முதலியன இருந்தால் வெறுப்படையும் மக்களை வெறுப்பின்றி விரும்பி நுகரச் செய்தலினாலும், ஊறுகாய் முதலியவற்றிலே புழு இருப்பின் அருவருப்படையும் மக்களை எவ்வித அருவருப்புமின்றி உண்ணுமாறு தூண்டுதலினாலும், உண்ண உண்ணத் தெவிட்டாது மீண்டும் மீண்டும் விரும்பச் செய்தலினாலும், பிற உயிரைக் கொன்றுண்ணல் பாவம் என்று தெரிந்தும் வாய்ச் சுவைக்காக உண்ணச் செய்தலினாலும், குடி முதலிய பாவங்களுக்குங் காரணமாக இருப்பதாலும், புலாலைப் "பொல்லாப் புலால்" என்றார் திருமூலர். பசி தீர்க்கும் நோக்கம் மட்டுமன்றிச் சுவைத் தின்புறும் நோக்குடன் உண்கின்றமையைப் புலப்படுத்த "நுகரும் புலையர்" என்றார்.

பொல்லாப் புலாலை நுகர்வோர் இவ்வுலகில் புலையரெனப் பழிக்கப்படுவர் என்று கூறியதோடமையாது மறுபிறப்பில் தீ நரகிற் பலகாலம் உழல்வர் என அவர் பின்னர் அடையும் தண்டனையையும் திருமூலர் எடுத்துக் காட்டுகிறார். இத்தண்டனையின் கொடுமையை உணர்ந்தாயினும் மக்கள் ஊனுண்டலை ஒழித்தல் வேண்டும் என்பது அவர் திருவுள்ளக் கருத்தாகும்.

மன்னுயிரெல்லாவற்றையும் தம்முயிர்போல் மதித்த நம்பேரருளாளர் சிறந்ததெனக் கைக்கொண்டு போற்றி வளர்த்த புலாலுண்ணாமையாகிய **இப்பேரறத்தை ஓம்புதல் சைவ நன்மக்களுடைய தலையான கடனாகும்.**

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று." —தமிழ்மறை

13

செந்தமிழுஞ் சிவபெருமானும் *

உலகத்தின் நாகரிகநிலை முதிரமுதிரப் பரவை வழக்குள்ள மொழிகள் யாவும் அதனுடன் ஒத்தியங்கித் திருந்தி முதிர்ச்சியடைகின்றன. இம் முதிர்ச்சியால் ஒவ்வொரு மொழியிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள சொல்லின் பாகங்களும், சொற்களும் சொற்றொடர்களும் வாக்கியங்களும் தத்தமக்குரிய பொருட்பெற்றி குறைந்தும் அழிந்தும் விரிந்தும் முற்றிலும் வேறுபட்டும் போகின்றன இவ்வேறுபாடு மொழிகளின் பழைமைக்கேற்ப அவற்றைத் தாக்குகின்றது ; பழைய மொழிகளிலிருந்து பல வழி மொழிகளைப் பிறப்பிக்கின்றது. இவ் வேறுபாட்டை மெற்கொண்டு இயங்கமுடியாது ஆரியம், இலத்தீன் கிரீக்கு முதலிய பழையமொழிகள் உலகவழக்கழிந்தொழிந்தன. இவற்றுக்குப் பின் தோன்றிய மொழிகளையும் இவ்வேறுபாடு பெரிதும் தாக்கியிருக்கின்றது. ஆங்கிலம் முதலிய மொழிகளின் முற்கால நிலைமைக்கும் தற்கால நிலைமைக்குமிடையிலுள்ள வேறுபாறு மிகப் பெரிது.

''ஆயுந் தொறும் தொறும் இன்பந்தரும்'' எங்கள் தமிழ்மொழியை இவ்வேறுபாடு எப்படித் தாக்கியிருக்கிற

---

* 1939-இல் மலர்ந்த இந்துசாதனப் பொன்விழா மலரில் வெளியிடப்பட்டது.

தென்பதைச் சிறிது ஆராய்வோம். தமிழ்மொழி, ஆரியம் இலத்தின், கிரீக்கு முதலிய மொழிகளோடொத்த பழமை யுடையதாயினும் அவற்றைப்போல் உலகவழக்கு அழிந் தொழிந்து சிதையாது இன்றும் நின்று நிலவுகின்றது. தமிழ்மொழியின் எழுத்தமைப்பும், சொற்பரப்பும், இலக்கிய விரிவும், இலக்கணச்சிறப்பும், பிறவும் காலவேறு பாட்டுக்கு இடங்கொடுக்கத்தக்கனவாகவே அமைந்திருக் கின்றன. இதனாலேயே இவ் வேறுபாடு தமிழ் மொழி யின் முற்கால தற்கால நிலைமைகளைப் பெரிதும் வேறு படுத்தவில்லை. பலநூற்றாண்டுகளுக்கு முன்னியற்றப் பட்ட திருக்குறள் முதலிய நூல்களிற் காணப்படும் சொற் களும், வாக்கியங்களும். கருத்துக்களும் இப்பொழுதும் இக்காலத்தன போலவே இருக்கின்றன.

பிற மொழிகளின் உதவியின்றி இயங்கத் தக்கதொரு தூய தொன்மொழியாகவும், நாகரிக முதிர்ச்சிக் கேற்பப் புதிய பொருள்களையும் கருத்துக்களையும் விஞ்ஞான உண்மைகளையும் குறிக்கும் சொற்களை உண்டாக்க இடம் கொடுக்கும் உயர்தனிச் செம்மொழியாகவும் எங்கள் தமிழ் மொழி அமைந்திருத்தலினாலேயே அது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருப்பினும் என்றும் மாறா இளமை யுடனிருக்கின்றது. இதனாலேயே அறிஞர்கள் இதனைக் ''கன்னித்தண்டமிழ்'' எனவும் ''தெய்வத்தமிழ்'' எனவும் பலவாறு வியந்தழைப்பாராயினர். தமிழ்மொழியின் இத்தனிச் சிறப்பியல்பை நன்குணர்ந்தே பெரும்புலவர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தம் மனோன்மணீயத்தில்.

''பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி
யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா
ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல
வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே''

என்று வாழ்த்தினார்.

இததகைய பெருமைவாய்ந்த தமிழ் மொழிக்கும் சிவ பெருமானுக்குமிடையில் பல தொடர்புகள் உளவெனக் கூறப்படுகின்றது. தமிழைச் சிவபெருமான் தோற்று வித்தாரென்றும், சங்கத்திலிருந்து வளர்த்தாரென்றும், அகத்தியருக்கறிவுறுத்தினார் என்றும், தமிழ் நூலியற்றி னாரென்றும், செய்யுள்கள் யாத்தாரென்றும், அடி யெடுத்துக்கொடுத்தாரென்றும் இன்னும் இன்னோரன்ன பல திருவிடையாடல்கள் புரிந்தாரென்றும் கூறப்படு கின்றது. இவற்றைச் சிலர் புராணக்கற்பனைகள் என்பர்; சிலர் இடைச்செருகல்கள் என்பர்; சிலர் செவிவழிக் கதைகள் என்பர்; சிலர் சில மெய்யுரையெனவும், சில பொய்யுரையெனவுங் கொள்வர்; சிலர் உபசாரமல்ல

உண்மையென்பர் ; உண்மையல்ல உபசாரமென்பர். செயற்கருஞ்செயல்களையெல்லாம் தெய்வச்செயலெனப் போற்றும் உயரிய சிறந்த மனப்பாங்குடைய பழந்தமிழ் மக்கள் தங்கள் மொழிக்கும் கடவுளுக்கும் தொடர்பு பாராட்டினர் எனவும், அவர்களின் பின் தோன்றிய மக்களும் புலவர்களும் இத் தொடர்பை இற்றைவரையும் போற்றிவருகின்றனரெனவும் சிலர் கூறுவர். சிலர் வேறு வேறு காரணங்களுங் கூறுவர். விரிப்பிற் பெருகுமாதலின் விடுத்துத் தமிழ் நூல்களில் செந்தமிழுக்கும் சிவபெருமானுக்கும் உள்ளவனாகக் கூறப்படும் தொடர்புகளை ஈண்டுச் சுருக்கிக் கூறுதும்.

தமிழ்மொழி ஆதியிற் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டு நடைபெறும் தெய்வமொழி என்பர்; இதற்குப் பல ஆதாரங்கள் காட்டுவர்.

''தம்மலரடி யொன்றடியவர் பரவத்
தமிழ்ச் சொல்லும்
வடசொல்லும் தாணிழற்சேர அம்மலர்க்
கொன்றைஅணிந்த
எம்மடிகள் அச்சிறுபாக் கமதாட்சி
கொண்டாரே'' என்பது தமிழ் வேதம்.

''மாரியுங் கோடையும் வான்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்தே
ஆரியமுந் தமிழு முடனல்கிக்
காரிகை யார்க்குங் கருணை செய்தானே''
என்பது திருமந்திரம்

''இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்
இயல்வாய்ப்ப'' என்பது காஞ்சிப்புராணம்
''தழற்பொலிவிழிக்கடவுள்தந்ததமிழ்'' என்பது
கம்பர் கூற்று

முத்தமிழிலக்கண முதனூலாகிய அகத்தியத்தை இயற்றியருளித் தமிழாசிரியர்களுட் சிறந்து விளங்கா நின்ற அகத்திய முனிவருக்குச் சிவபெருமான் தமிழறிவுறுத்தினாரென்பர். இதனை,

''கூம்பய கைத் தலமுடைய குறுமுனிக்குப்
பிஞ்ஞகனார்
தாம்பரிந்து தமிழ்விளக்கு மாசிரியத் தலைமை
யொடு
மேம்படுதென் றிசைக்கிறைமை நல்கி...'' எனவும்

''வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி
அதற்கிணையாந்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந்
தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்'

எனவும் வருஉங் காஞ்சிப்புராணச் செய்யுட்களாலும், ''திராவிடமெனப் பெயரிய மாபாடைக்கிலக்கணஞ் சிவபிரான் அகத்தியனார்க் கருளிச் செய்தான்''. எனக் காந்தத்து உபதேசகாண்டத்து வருதலானும்,

''ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொருபாகன்'' என்பதனாலும்.

''விடையுகைத்தவன்பாணினிக் கிலக்கண மேனாள்

வடமொழிக் குரைத்தாங் கியன்மலய மாமுனிக்குத்

திடமுறுத்தி யம்மொழிக்கெதிராக்கியதென்
சொன்மடமகள்''

என்பதனாலும் பிறவற்றாலும் அறிக.

முற்காலத்தில் தமிழை வளர்த்தற்கு மூன்று சங்கங்கள் நிறுவப்பட்டன. இவற்றில் முதற் சங்கத்தில் அகத்தியர் முதலிய புலவர்களுடனிருந்தும், கடைச்சங்கத்தில் மதுரைப் பேராலவாயாரெனும் பெயருடனிருந்தும் சிவபெருமான் தமிழை வளர்த்தாரென்பர். இதனைப் பின்வரும் கூற்றுக்கள் வலியுறுத்தும். ''திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும் அகத்தியரோடு தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார்'' என்று இறையனார் களவியலுரை கூறுகிறது. மணிவாசகரும் ''சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என சிந்தையுள்ளும் உறைவான் உயர்மதிற் கூடலினாய்ந்த வொண்டீந்தமிழ்,'' என்று பாடினார். ''கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந் தமிழ்,'' எனக் காஞ்சிப்புராணமும், ''தண்டமிழ் நூற் புலவாணர்க்கோ ரம்மானே

எனத்தேவாரமும் "சென்றணைந்து மதுரையினிற்றி ருந்திய நாற்சங்கத்துளன்றிருந்து தமிழாராய்ந்தருளிய வங்கணர்," எனவும், "சங்கப்புலவர் தந்திருமுகந் தந்தலைமேற்கொண்டு," எனவும் பெரியபுராணமும் 'பெருமை தரும் பெயர் மதுரைப் பேரால வாயனென வுரை செய்தேயவை நெடுநாளிருந்தவன் அவ்வயினொ ளிப்ப" எனப் பழைய திருவிளையாடலும் கூறுகின்றன.

அன்பினைந்திணைக் களவினைக்கூறும் இறையனார் அகப்பொருள் சிவபெருமானாற் செய்யப்பட்டு முருக வேளால் கேட்கப்பட்டதென்பர். இது செய்யப்பட்ட வரலாற்றின் விரிவை இறையனாரகப் பொருளுரையினிற் கண்டுகொள்க.

"மணிக் காலறிஞர் பெருங்குடித் தோன்றி
இறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும்"

எனவும்,

"அன்பினைந் திணை யென்றறுபது சூத்திரம்
கடலமு தெடுத்துக் கரையில் வைத்ததுபோல்
பரப்பின் தமிழ்ச்சுவை திரட்டி மற்றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்"

எனவும் கல்லாடம் கூறுகின்றது.

''திருத்தகு மதுரை தன்னிற் சிவன்பொரு
ணிறுக்கு மாற்றால்
உருத்திர சன்மனாகி உற்றெழு நிமலன் ''எனக்

கந்தபுராணம் நவில்கின்றது. ''நாத்திரமா மேவு
பொருணன்றா வறுபதெனுஞ் சூத்திரமாப்,
பாடியருள் தோற்றமும்'' எனத் தமிழ் விடுதூது

உரைக்கின்றது.

''திருவால வாயமர்ந்த செழுஞ்சுடரைச்
செழும்பொருணூல் தருவானை'' எனவும்
''நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க்
கீந்தானை''

எனவும் பெரியபுராணம் புகல்கின்றது.

''மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த
வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ்
செய்யப் பெற்றே''

என்பதையும் நோக்குக.

சிவபெருமானாற் செய்யப்பட்டதாகச் சில தமிழ்ச் செய்யுள்கள் காணப்படுகின்றன. பாண்டிய மன்னனால் தூக்கப்பட்ட பொற்கிழியைத் தருமி என்னும் பிராமணன் பெற்றுய்யும்படி அவனுக்கு இறையனார் ஒரு செய்யுளைப் பாடிக் கொடுத்தார்.

"கொங்கு தேர்வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே."

எனும் இச்செய்யுள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகையின் இரண்டாவது செய்யுள். இச் செய்யுளின் வரலாற்றைத் தமிழ் மக்களிற் பலர் நன்கறிவர். விரிவைத் திருவிளையாடற் புராணங்களிற் கண்டு கொள்க.

இத் திருவிளையாடலைப்பற்றிப் பல நூல்கள் விதந்தோதுகின்றன.

"பொதியப் பொருநப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்புடன் உதவி
என்னுள்ளங் குடிகொண்டு இரும்பய னளிக்கும்
கன்னவிழ் குழல்சேர் கருணையம் பெருமான்"

எனக் கல்லாடமும், "-தருமிக்கே ஓர் வாழ்க்கை வேண்டி
உயர்கிழிகொள்வான் கொங்குதேர்
வாழ்க்கைய என்றெடுத்த செய்தியும்" எனத்
தமிழ் விடுதூதும்,

"தென்னவன் குல தெய்வமாகிய,
மன்னர் கொங்கு தேர் வாழ்க்கையின் றமிழ்,
சொன்னலம் பெறச் சொல்லி நல்கினார்,
இன்னல் தீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினான்"

எனத் திருவிளையாடற் புராணமுங் கூறுகின்றன.

"என்செய்யுளுக்குக் குற்றம் கூறினார் யாவர்? எனவினவ,நக்கீரர்யானேஎனச்சிவபிரான்கூறியவெண்பா:

"அங்கங் குலுங்க அரிவாளின் நெய்தடவிப்
பங்கம் பட இரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீர்கீரென வறுக்கும் கீரனோ என்கவியை
ஆராயு முள்ளத் தவன்."

இச்செயலை

"அங்கங் குலுங்க அரிவாளின் நெய்யென்றோர்
பங்கக் கவிதை பரமன் சொல்"

எனப் பழைய திருவிளையாடலும்

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழி தருமிக் கருளினோன் காண்"

எனத்தேவாரமும்

"கீரன், இசையா வசையி னியம் பினானென்றே
வசையாடித் தர்க்கித்த வாக்கும்"

எனத் தமிழ்விடு தூதும் குறிப்பிடுகின்றன.

பாணபத்திரனுக்காகச் சிவபிரான் சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுக அகவல் :

''மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவிய பானிற வரிச்சிறை
அன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
ஒருமை யினிருமையு முதவிய வொளிதிகழ்
குருமா மணிநிரைக் குடையதனிற் கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பாலி யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.''

இது பதினொராந் திருமுறைகளிலொன்று. வரலாற்று விரிவைத் திருவிளையாடற் புராணங்கள் கூறுகின்றன.

''பாட்டுக் கிரங்கியொரு பாணனுக்குச்
சேரலன்மேற்

சீட்டுக் கவிவிடுத்த சீராட்டு'' எனத் தமிழ்விடு தூது பாராட்டுகின்றது.

திருக்குறளைப் புகழ்ந்து இறையனார் பாடியதாகத் திருவள்ளுவமாலையிற் காணப்படுஞ்செய்யுள் :

''என்றும்புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்-
குன்றாத

செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்
போன்ம
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.''
இதனைத் தமிழ் விடு தூது

''அறம்பொருள் வீடாரணர்சொன்னா ரத்
திறம் பரமர் வாக்கே செப்பாதோ'' எனக் குறிப்பிடுகிறது.

''கோட்டாற் கொழும்பிரசங் குத்தியத னடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக்-காட்டானை
தேனீ ரருந்துஞ் சிரமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை.

இச்செய்யுளைப் பொய்யாமொழிப்புலவர் முன் இறையனார் சிரமலையைப் பாடிய வெண்பாவாகத் தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது. இதற்கு ஆதாரங்கள் தமிழ் நூல்களிலிருப்பதாக எமக்குத் தெரியவில்லை,

தெய்வப்புலவராகிய சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணமாகிய திருத்தொண்டர் புராணத்தைப்பாட ''உலகெலா முணர்ந் தோதற் கரியவன்'' எனச் சிவபெருமானே அடியெடுத்துக் கொடுத்தாரென்பர். ''கலைமலி பெரும்புலவர் கைகுவிக்கக் கலைக்கன்னி நின்றேவல் கேட்கக் கனகசபையார் முதலளித்தருள'' என்பது சேக்கிழார் பிள்ளைத்தமிழ். இதன்விரிவை உமாபதிசிவாச்சாரியார் இயற்றிய சேக்கிழார் புராணத்தா லறிக. சமயாசாரியர்களுள் ஒருவரும் தம் தோழருமாகிய சுந்தரமூர்த்தி

நாயனாரைத் திருத்தொண்டத்தொகை பாடும்படி பணித்து, அவருக்கு அடியார்களுடைய வழித்தொண்டு தெரியும்படி செய்து தம் அருமைத் திருவாக்கினால் "தில்லைவாழ் அந்தணர்த மடியார்க்குமடியேன் என்று" சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்தார் என்று பெரிய புராணங் கூறுகிறது. இதனை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் "கார்கொண்ட சோலை சூழாரூர ரோரைக் கால் நம்பியாரூரர் முக்காலரைக்கா லாக முடிவு செய்தருண்மாக் கவி" எனச் சிறப்பாகப் பாடியுளர்.

சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட் கொண்ட பின், அவரைத் தம்மைப்பாடுமாறு சிவபெருமான் பணிக்க அவர், "தேவரீருடைய அனந்த குணங்களில் எதை அறி வேன்? எப்படிப் பாடுவேன்" என்று திகைக்க "முன் என்னைப்பித்தன் என்றழைத்தாய் ஆகையால் அப்படிப் பாடு" என்று கூற நாயனாரும் "பித்தா பிறைசூடி பெரு மானே" என்று பாடத்தொடங்கினார் என்பர்.

மாணிக்கவாசகருடைய ஒருவாசகமுமிணையில்லாத் திருவாசகத்தைச் சிவபெருமானே ஒரு பிராமண வேடந் தாங்கிச் சென்று தமதருமைத் திருக்கரத்தாலெழுதினா ரென்றும், பின் மாணிக்கவாசகரை நோக்கி "உமதிரு வாசகம் மிக இனிமையாகவிருக்கின்றது. நீர் சிவபெருமான் மேல் அகப்பொருட்கோவையும் ஒன்று பாடவேண்டும்" என்று கேட்டார் என்றும், அவர் கேட்டவாறு திருக் கோவையார் பாட, அதனையு மெழுதி இறுதியில் "மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையார் எழுதியது" என்று கைச்சாத்துமிட்டுப் பின் அவ்விரு நூல்களையு மெழுதிய ஏட்டுப் பிரதிகளைத் தம் வாழ்விடமாகிய பொன்னம்பலத்திலே பஞ்சாக்கரப் படியிலே வைத்தருளினாரென்றும் அவற்றைத் தில்லை வாழந்தணர் கண்டெடுத்து மகிழ்ந்து போற்றினார் களென்றும் கூறுவர்.

சங்கப்புலவர்களிருந்து தமிழாராய்ச்சி செய்யச் சில பெருமான் ஒரு சங்கப் பலகையை அளித்தாரென்றும், அது உண்மைப் புலவர்களுக்கு மாத்திரம் இடங்கொடுத்த

தென்றும் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. அச் சங்கப் பலகையைப்பற்றி "மொழியறி சங்கப்பலகை" எனவும், "பாவறி சங்கப்பலகை" எனவும் புலவர்கள் புகழ்ந்திருக்கின்றனர்.

"முழுதுணர்ந்திடு மலயநன்முனி மொழியு முத்தமிழும்
பழுதறும்படி புலவரேறிய பலகையொன்றுடையான்"

என்பது வில்லிபுத்தூரார் கூற்று. தமிழ்ப்பாடல்களின் சுவையில் சிவபெருமான் நன்கு விருப்பமுள்ளவரென்றும், சுந்தரருக்காகப் பரவையிடம் தூது சென்றதும், மதுரையில் சௌந்தர மாறனெனும் பெயர்தாங்கி வந்ததும், காரியார் நாரியார் பாப்பகுந்ததும் தமிழ்ப்பாடல்களின் சுவையை விரும்பியே என்றும் கூறுவர். இவற்றைப் பின் வரும் கூற்றுக்கள் புலப்படுத்துகின்றன :

"பாதஞ் சிவக்கப் பைந்தமிழ் வேண்டிப்
பரவைதன்பாற் றூதன்று சென்றவர்."
"காதாரமுதம் பெறவேண்டி அன்றொரு
காரிகை பாற்றூது நடந்தார்".
"தமரநீர்ப் புவனமுழுதொருங் கீன்றாள்
தடாதகாதேவியென் றொருபேர்
தாங்கிவந் ததுவும் தனிமுத லொருநீ
சௌந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ்ப் பெருமை
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்."

14

நாவலரும் நாமும் *

' பூமணக்கும் பொழில்மணக்கும் புனித நல்லூர் தான்மணக்கப்
பாமணககஉரை மணக்கப் பகர்சைவ நெறிமணக்கத்
தேமணக்கும் தமிழணங்கு செய்தபெருந் தவப்பயனால்
நாமணக்க அவதரித்த நாவலர்தாள் இறைஞ்சுதுமே.''

நாவலர் இவ்வுலகை விட்டு நீங்கி அறுபத்தைந் தாண்டுகள் கழிந்து விட்டன. இன்றைய நாளைத் தமிழ் உலகம் முழுதும் நாவலர் திருநாளாகக் கொண்டாடு கின்றது. அவருடைய பல்வேறு தொண்டுகளை அன்பர் கள புகழ்ந்து போற்றுகின்றார்கள்; அவற்றின் பெருமை களைக் கண்டு வியக்கிறார்கள்; கடவுள் அருளோ என ஐயப்படுகிறார்கள்; நாவலரை நாம் மறக்க முடியுமா? அவருக்குக் கைம்மாறு செய்ய இயலுமா? என்றெல்லாம் முழங்குகிறார்கள்.

நாவலர் வசனநடை, நாவலர் பதிப்பு, நாவலர் உரை நாவலர் பாடசாலை, நாவலர் அச்சுக்கூடம், என்று அவர் முன்னோடியாகச் செய்தவற்றை எல்லாம் அவருடன் சேர்த்து வழங்கிப் பெருமையடைகிறோம். யாழ்ப்பாண நகரசபையும் நாவலருடன் சேரவிரும்பி ஒரு வீதிக்கு ''நாவலர் வீதி'' எனப்பெயரிட்டுள்ளதைப் பலர் நன்கறி வர். அன்பர் சிலர் நாவலன் எனும் பெயருடன் ஒரு வெளியீட்டினை வெளியிட்டனர். நானும் நாவலருக்கு ஒரு நினைவு மலரைச் சூட்டியுளேன். தமிழ்த் துறவியாக விளங்கும் பெரியார் சுத்தானந்த பாரதியார் நாவலர் சரிதத்தை மிகச் சிறப்பாக எழுதி வெளியிட முயற்சி செய்து வருகிறார்.

தமிழைப் பற்றியும் சைவசமயத்தைப் பற்றியும் எழுதப்படும் நூல்களிலும் நிகழ்த்தப்படும் உரைகளிலும்

---

* 6-12-1964இல் இலங்கை வானொலியில் நிகழ்த்திய உரை.

நாவலரை நாம் காண்கிறோம். இவ்வாறு நம்மவர் களுடைய மதிப்புக்கும் வியப்புக்கும் வாழ்த்துக்கும் நாவலர் ஆளாவதன் காரணம் யாது ?

நாட்டின் வளர்ச்சி கருதிப் பல துறைகளிலும் உழைத்து ஒவ்வொரு நாட்டிற்கும் ஆக்கத்தையும் சிறப்பையும் ஈட்டி வைத்துச் சென்ற பெரியோர்கள் பலராவர். இவர்களுக்குள் மிகச் சிறந்தவர்கள் மொழிவளர்ச்சிக்கும் சமயச் சீர்திருத்தத்துக்குமாக உழைத்தவர்களே என்பதற் கையமின்று. இக்காலை பல துறைகளிலும் சிறப்புற்று ஓங்கி மிளிரும் மேலைத் தேசங்களைப் பாருங்கள். எந்தத் தேசத்தில் தாய்மொழி தலையிடம் பெறாமல் இருக்கிறது? தாய்மொழி வளர்ச்சியன்றோ ! நாட்டின் வளர்ச்சி ; அதன் சிறப்பன்றோ ! நாட்டு மக்களின் சிறப்பு, தாய் மொழி வளம்பட்டாலன்றோ நாட்டில் கல்வி பெருகும் ; அறம் வளரும் ; அரசியல் சிறக்கும், ஆதலின் தாய்மொழி வளர்ச்சிக்கு உழைத்த பெரியார்கள் அன்றோ நாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர்கள். இவ்வுண் மையை அறிந்த மேலைத் தேசத்தவர்கள் தங்கள் புலவர் களைப் பொன்போற் போற்றுகிறார்கள்.

இனிச் சமயத்தைப்பற்றிக் கருதுவோம். தாம்பிறந்த சமயம் இதுவெனவும், தமது சமயங் கூறும் கடவுள் இவ ரெனவும், தமது பிறப்பின் பயன் அவரை அடைதலே எனவும், அவ்வாறு அடைதற்குரிய நெறிகள் இவை எனவும் அறிதலும், அறிந்து உணர்ந்து ஒழுகித் தம் பிறப்பின் பயனைப் பெறுதலும் ஒவ்வொருவரதுங் கடமையாகும். இப்பிறவின் பயனை நாம் பெறச் செய்வது சமயமே. இப்படிப்பட்ட ஒப்பில்லாத பயனை அளிக்கும் சமயத்தை வளர்த்தவர்கள் மக்களின் பிறவிப் பயனைப் பெற்றுக் கொடுக்க முயன்றவர்களாவார்.

இதுகாறும் கூறியவற்றால் தாய்மொழி வளர்ச்சியும் சமய வளர்ச்சியும் கருதி உழைத்த பெரியார்களுக்கு மற்றொருவரும் ஒப்பாகார் என்பது வெளிப்படையா கின்றது. இவர்களிலும் உடல் பொருள் உயிர் எனும் மூன்றையும் கொடுத்தவர்களே மிகமிகச் சிறந்தவர்கள். நாவலர் பெருமான் தாய்மொழியாகிய தமிழுக்கும், சைவ சமயத்திற்கும் தமது உடல் பொருள் உயிர் மூன்றினையும் உரிமை ஆக்கி வாழ்ந்தாரென்பதை அவர்தம் அருஞ்

செயல்களே எடுத்துரைக்கின்றன. இத்தகைய பெருந் தொண்டருக்குத் தமிழர்கள் என்றுங் கடமைப்பட்டவர்களன்றோ? செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிதெனின் யாம் நாவலருக்குச் செய்யவேண்டியனவற்றிற்கு அளவில்லையன்றோ?

ஆலவாய் அவிர் சடைக்கடவுள், அகத்தியர், தொல்காப்பியர், வள்ளுவர், கம்பர் முதலிய புலவர்கள் தமிழ் ஆராய்ந்தும் நூல்களை இயற்றியும் தமிழை வளர்த்தனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலானோர் பழந்தமிழ் நூல்களுக்கு உரைகளெழுதித் தமிழ்த் தொண்டாற்றினர். நக்கீரர், சிவஞான முனிவர் முதலானோர் உரைகள் எழுதியும் நூல்கள் இயற்றியும் தமிழைச் சிறப்பித்தனர்.

சைவசமயத்தின் ஆக்கங் கருதி மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்கள் சமய நூல்களை இயற்றினர். திருஞானசம்பந்தர் முதலிய சமய குரவர்கள் தேவாரம் முதலிய திருவருட்பாக்களைப் பாடிச் சமயத்தை ஓங்கச் செய்தனர். ஆனால், தமிழையும் சைவசமயத்தையும் கல்வியையும் ஒருங்கு வளர்த்த பெருமை நாவலருக்கே உரியது என்று கூறல் உயர்வு நவிற்சியாகாது.

இவர் திருக்குறள், திருக்கோவையார், கந்தபுராணம், சேதுபுராணம். இலக்கண விளக்கச் சூறாவளி தொல்காப்பியப்பாயிர விருத்தி, திருவிளையாடற் புராணம், பாரதம், நன்னூல் விருத்தியுரை முதலிய பல நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டுத் தமிழ் உலகுக்கு அளித்தார். ''பிழை திருத்தம்'' எனும் சேர்க்கை இல்லாத தமிழ் நூல்கள் நாவலர் பதித்த நூல்களேயெனின், நூல்களைப் பிழையின்றிப்பதித்தற்கு அவர் மேற்கொண்ட உழைப்பை அளவிட்டுக் கூறமுடியுமா?

பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், பெரியபுராண சூசனம், இலக்கணச் சுருக்கம், சைவ வினாவிடைகள், பாலபாடங்கள் முதலிய பல வசன நூல்களை எழுதினார். தமிழ் வசனநடையில் குறியீட்டைப் புகுத்திச் செப்பஞ்செய்த தனிப்பெருமையும் இவருக்கேயுரியது.

இவருடைய வசன நடையாம் அமுதை உண்டுகளித்த பேரறிஞர்களால் ''வசனநடை கைவந்த வல்லார்'' என்றும் ''தமிழ் உரை நடையின் தந்தையார்'' என்றும் போற்றப்பட்டார். அண்மையில் கோயம்புத்தூரில் நடந்த எழுத்தாளர் மாநாட்டில் தமிழ் வசன நடையின் தோற்றத்தைப் பற்றிப் பேசிய திரு வ. ரா. தமிழ் வசன நடையை வளர்த்த பலரை எடுத்துக் கூறியபொழுது நாவலரைப்பற்றி ஒன்றுங் கூறாது விட்டமை தமிழ் அறிஞர்களைத் திகைக்கச் செய்து விட்டது. பல்வேறு பிழைகள் மல்க உரைநடை எழுதிய-எழுதுகின்ற தமிழன் பர்களோடு நாவலரைச் சேர்க்க விரும்பாது அவர் விட்டிருக்கலாம். பிழைகளின்றி நூல்களைப் பதித்தலில் மாத்திரமன்றி உரைநடை எழுதுவதிலும் வல்லுநர் எனத் தமிழகம் முழுதும் போற்றப்பட்டவர் நாவலர் என்பதை அக்காலத்தும் பின்னரும் வாழ்ந்த பெரியார் பலருடைய கூற்றுக்கள் வெளிப்படையாகக் காட்டுகின்றன.

நாவலர் பெருமான் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து யாவரும் அதனைப் பெறுவதற்குத் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் வித்தியாசாலைகளைத் தாபித்தார். இப்பெருந்தொண்டிற்குப் பொருள் உதவிபுரியுமா மாறு இவர் எழுதி வெளியிட்ட விக்கியாபனங்கள் யாவருடைய மனத்தையும் கொள்ளை கொள்ளத்தக்கன; ''தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளர்'' என்பதை விளக்கிக் காட்டுவன ; அல்லும் பகலும் தமிழ் வளர்ச்சியும் சைவசமய வளர்ச்சியும் கருதியே உழைத்தார் என்பதைப்புலப்படுத்துவன. ''நிலையில்லாத எங்சரீரம் உள்ளபோதே என் கருத்து நிறைவேறுமோ, நிறை வேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள் முக்கிய தலங்கடோறும் வித்தியாசாலைகள் தாபித்தலும், சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமே'' என ஒரு விக்கியாபனத்தில் இவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரசங்கஞ் செய்வதில் ஒப்பாருமிக்காருமின்றிச் சிறந்து விளங்கிய பெருமையும் இவருக்கே உரியதென அறிஞர் கூறுவர். இவரே சைவப்பிரசங்கங்களை முதலில் தமிழ் நாடெங்கும் செய்தவர். இவருடைய சொல்வன்மை போற்றத்தக்கது. இந்தவன்மையைக் கண்டு ஆச்சரிய

முற்றே திருவாவடுதுறை மடத்தினர் பல புலவர்கள் முன்னிலையில் இவருக்கு நாவலர் என்னும் பட்டத்தைச் சூட்டினர். வள்ளுவர், சேக்கிழார் முதலானோர் தம் பெருஞ் சிறப்பினால் தங்கள் குடிப்பெயர்களையே தங்கள் பெயர்களாகக் கொண்டு விளங்குவது போல் நாவலர் எனும் பட்டப் பெயரால் இந்தத் தமிழகம் முழுவதும் விளங்கி வருபவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களே. இதனை,

''நிலவுலகில் ஒருமதியம் நிலவியது என்றே நிகழ்த்தப்
பலகலையும் நிரம்பிய யாழ்ப்பாணம் எனும்பாற் கடலில்
இலகியெழீஇ நாவலரென்று இயம்புபெயர் எவர்பெறினும்
குலவுதமை யேகுறிக்கக் கொண்டபெருங் குலப்புகழார்.''

எனச் சேற்றூர் அருணாசலக் கவிராயர் சிறப்பாகப் பாடியுளர்.

நாவலரின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அவருடைய ஒழுக்கத்தின் உயர்வு நன்கு விளங்கும். கல்வியறிவு பொன்மலர் போன்றது. அதை நறுமணங் கமழச் செய்வது ஒழுக்கமே.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக.''

என்பதற்கு இலக்கியமாக ஒழுகியவர் நாவலரென்று கூற வேண்டியதில்லை. இவருடைய ஒழுக்கமே இவருக்கு விழுப்பத்தைக் கொடுத்தது. இவருடைய ஒழுக்கம்

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''

எனும்பொய்யாமொழியிற் கூறப்பட்ட ஒழுக்கமேயாகும். இவர் துறவியாகவே தமது வாழ்க்கையைக் கழித்தார் இவரிடத்து அறிஞர்கள் யாவரும் போற்றத்தக்க பெருங் குணங்கள் பல நிறைந்திருந்தன.

இவரது கல்வியறிவின் பெருமையை அளந்துரைப்பது மிகவரிது. சுருங்கக்கூறின் தமிழ் இலக்கண இலக்கியங்களின் பயிற்சியிலும் வேதாகம சைவசித்தாந்தங்களின் அறிவிலும் இவரைப்போல் நன்கு தேர்ந்து விளங்கிய தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டில் இவர் காலத்துக்குப் பின் தோன்றவில்லை என்று கூறல்சாலும் இவர் தமிழ் மொழியில் மாத்திரமன்றி ஆங்கிலம், ஆரியம் எனும் மொழிகளிலும் மிக்க பயிறசியுடையவர். கிறித்தவர்

களுடைய ''பைபிள்'' எனும் நூலையும் நன்கு கற்றார்; அதனைத் தமிழிலும் மொழிபெயர்த்தார். இவருடைய செய்யுள் இயற்றும் ஆற்றலுக்கு இவர் பாடிய சில ஆசு கவிகளே சான்று பகர்கின்றன. மாணவர் உளங்கொளக் கற்பிக்கும் பணியிலும் இவர் சிறந்து விளங்கினார்.

இவர்தம் நுண்மாணுழைபுலமும் நகைச்சுவை ததும்ப உரையாடுந்திறனும் யாவராலும் வியந்து போற்றப்படத்தக்கன. இவற்றைப் புலப்படுத்தும் நிகழ்ச்சிகள் பலவுள. ஒன்றை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். நாவலருடன் நட்புரிமை பூண்ட ஐயங்கார் ஒருவரும் நாவலரும் ஓரிடத்திற்கு ஒன்றாகச் சென்றனர். செல்லும் வழியில் சாம்பலால் மூடப்பட்டுக் கிடந்த பல்லினை ஐயங்கார் கண்டார். கண்டவர் ''நீங்கள் போற்றி நெற்றியில் அணியும் விபூதி கிடக்கும் இடத்தைப் பாருங்கள் எனப்பரிகாசமாக நாவலருக்குக் கூறினர். அது கேட்ட நாவலர் ஐயங்காரே அஃதேன் அங்கிடப்பட்டிருக்கிற தென்று உமக்குத் தெரியாதா? அதற்குள் இருக்கும் பொருளை உமது கடவுள் எடுத்தவராக அவதாரம் கண்டால் உண்டு விடுமென்றே அவ்வாறு மறைத்து வைத்திருக்கிறார்கள்'' என்றார், ஐயங்கார் வெட்கித் தலைகுனிந்தார்.

நாவலருடைய பேரியல்புகளுள் மிகச்சிறந்து விளங்குவதும், பலரையும் நடுங்கச் செய்ததும் அவரது அஞ்சாமையே. பொதுநிலையங்களிலும், அறநிலையங்களிலும், ஆலயங்களிலுமுள்ள குறைகளை யாவர்க்கும் அஞ்சாது எடுத்துக்காட்டி அவற்றைச் சீர்திருத்த அவர் முயன்றார். பிறரிடத்துக் காணப்படும் குற்றங்களை எடுத்துக் காட்டி அவர்களை நன்னெறிப்புகுத்துவதற்கும் அவர் சிறிதும் பின்னில்லார். அவையஞ்சாத ஆண்மையும், பிழைகள் நிறைந்த நூல்களைக் கண்டிக்கும் வன்மையும், புகழ் பொருள் பூசை முதலிய கருதிப் பிறர்க்குப் பணியாத பண்பும், நல்லனவற்றைச் செய்து நாட்டைச் செம்மைப் படுத்தவேண்டுமெனும் பெருநோக்கமும் இவரை எதற்கும் அஞ்சாத வீரம் நிறைந்தவராக மிளிரச் செய்தன. இவர் எழுதிய கண்டனங்களை வாசிக்கும் கோழைகளுக்கும் வீரம் பிறக்குமெனின் இவர்தம் வீரம் ஒப்புயாவற்ற தெனக் கூறல் வேண்டுமோ? ''வில் அம்பிலும் சொல்லம்பு கொடியது'' என்பதையும் ''வாள் முனையிலும் பேனா

முனை கூரியது'' என்பதையும் அக்கண்டனங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காட்டத்தக்கன.

''நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'' என்று இறைவரோடு எதிர்த்தார் நக்கீரர் ''மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ, உன்னையறிந்தோ தமிழை யோதினேன்'' என்று கம்பர் சோழவேந்தனைக் கேட்டார். ''இரவலர் புரவலை நீயுமல்ல, புரவலர் இரவலர்க்கு இல்லையுமல்லர்'' என்று அருந்தமிழ்ப்புலவர் ஒருவர் பழந்தமிழ் அரசன் ஒருவனைப் பழித்துரைத்தார். இவற்றை நோக்கும் பொழுது தமிழ்ப்புலவர்களுக்கு அஞ்சாமையெனுங் குணமும் மானமும் வழிவழியாக வநதன என்பது வெளிப்படையாகத் தோன்றுகிறது.

ஆனால், நாவலர் காலத்தின் பின் தோன்றிய தமிழ் அறிஞர்கள் பலர் தமிழ்ப்புலவர் மரபிற்கு மாறாக நடந்து தமிழையும் தம் ஒப்புயர்வில்லா மரபையுஞ் சீரிழக்கச் செய்துளர் என்பதைப்பலரும் அறிவர். தமிழ்ப்புலவர்கள் வீரம் நிறைந்தவர்களாயிருக்காவிடில் தமிழர்களுக்கு வீரம் உண்டாகுமா? நாவலரின் வாழ்க்கை வரலாறுகளை அறிதல் இக்காலத் தமிழ்ப்புலவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இன்றியமையாத. வீரத்தை ஈட்டிக்கொள்வதற்கு உதவிபுரியுமென்பதில் ஐயமில்லை.

இவர் சைவசமய ஆக்கங் கருதிச் செய்தசெயல்கள் பல. இவர்தம் முயற்சிகளை நேரிற் கண்ட பாதிரிமார்கள் இவரைப் பற்றி எழுதிய குறிப்புக்கள் மட்டுமே இவர்தம் ஒப்புயர்விலா ஆற்றலையும் சைவசமயத்துக்காகச் செய்த தொண்டுகளையும் நன்கு காட்டத்தக்கன.

இவர் இவ்வுலக வாழ்வை ஒருவின பொழுது அக்காலத்திலே தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிய பேரறிஞர்களுள் ஒருவராகிய சி. வை. தாமோதரம்பிள்ளை இரங்கிக் கூறிய செய்யுள் ஒன்று இவர்தம் செயற்கருஞ் செயல்களைச் சுருக்கமாகக் கூறுகிறது,

''நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே சுருதிஎங்கே-எல்லவரும்
ஏத்தும் புராண ஆகமங்கள் எங்கே பிரசங்கம் எங்கே
ஆத்தன் அறிவெங்கே அறை''

இப்படிப்பட்ட பெருந்தொண்டரை-தமிழ் மொழி சைவசமயம் என்பனவற்றின் ஆக்கம் கருதி உழைத்த அறிஞரை-தமிழ் நாடெங்கும் புகழுடன்விளங்கும் நாவலரை-நாம்போற்றுதலும், அவர்தம் பணிகளை வளர்த்தலும், அவர்காட்டிய வழியில் நடத்தலும் நமது முதற் கடமையாகும். இக்கடமையினை நிறைவேற்ற எல்லோரும் முயல்வோமாக.

15

அரைக் கண்ணன்

புராணக்கதைகளையும் வழிவழிக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு சிவபெருமான், உமாதேவியார், திருமால், பிள்ளையார், முருகன் முதலிய தெய்வங்கள் மீது புலவர்கள் பலர் பழிப்பதுபோலப் புகழும் பாடல்களைப் படைத்துளர். இப்பாடல்கள் கருத்தாழமும், நகைச் சுவையும், கற்பனை விந்தையும் நிறைந்து படிப்போரை ஈர்த்து ஈர்த்து இன்புறுத்துகின்றன. இவற்றுட் சிலவற்றை ஈண்டுக் காண்பாம்.

முதலில் காளமேகப்புலவர் அளிக்கும் நகைச்சுவை விருந்தை நுகர்வோம். சிவபெருமானுக்கு மூன்று கண்களுண்டெனவும் இவற்றுள் வலக்கண் சூரியனெனவும், இடக்கண் சந்திரனெனவும், நெற்றியிலுள்ள கண் அக்கினி எனவும் கூறப்படும். இதனால் சிவபெருமானை முக்கண்ணன் என்பர். சிவனுக்குரியது மூன்று கண்களல்ல. அவருக்குரியது அரைக்கண்தான் என்று நுட்பமாகக் கணக்குக் காட்டுகிறார் காளமேகப் புலவர். மூன்று கண்களில்அரைக்கண்போனால் மிகுதி இரண்டரைக்கண்களாகும். இந்த இரண்டரைக் கண்களில் ஒன்றரைக் ஒரு பெண்ணுடைய கண்ணாகும்; ஒரு கண் அடியார் ஒருவரின் கண்ணாகும் என்று அவர் நிறுவுகிறார்.

> "முக்கண்ணன் என்றரனை முன்னோர் மொழிந்திடுவார்
> அக்கண்ணற் குள்ளது அரைக்கண்ணே—மிக்க
> உமையாள்கண் ணொன்றரைமற் றூன்வேடன்
> கண்ணொன்று
> அமைதலி னாலென் றறி."

அர்த்த நாரீசுரராக—உமையொருபாகனாக உள்ள சிவனுடைய கண்களில் ஒன்றரைக்கண் உமாதேவியாருக்குரியன. மிகுதி ஒன்றரைக்கண்ணில் ஒருகண்ணை இடந்து அதனுடைய இடத்தில் தனது கண்ணைக் கண்

ணப்ப நாயனார் அப்பினார். எனவே, மிகுதி அரைக் கண்ணே முக்கண்ணனுக்குரியதாகும். இவ்வாறு நுணுக்கமாகக் கணிப்பதற்குக காளமேகத்தால் மட்டுமே முடியும்!

சிவபெருமானுடைய அடியையும் முடியையும் திருமாலும் பிரமனும் தேடினார்கள். பிரமன் அன்னத் திருவுருவெடுத்து மேலே சென்று முடியைத் தேடினான். திருமால் பன்றியுருக்கொண்டு பூமியைக் கீண்டு அடியைப் தேடினார். இருவரும் அடிமுடிதேடும் முயற்சியில் தோல்வியுற்றுச் சிவனின் பெருமையை உணர்ந்து ஏற்று வணங்கினர் என்பது புராணக்கதை.

இவ்வாறு அடிமுடி காணாது தோற்றவர்கள் சிவபெருமானின் அடியையும் முடியையும ஓரிடத்தில் கண்டிருக்கலாம் என்று காளமேகப் புலவர் கவினுறப் பாடுகின்றார். அந்த இடம எது? சிந்தித்துப் பாருங் கள். உங்கள் சிந்தனைக்கு எட்டுகின்றதா? சிவபெருமான் தம் தோழர் சுந்தரமூர்த்தி நாயனாருக்காக அவருடைய காதல் மனைவி பரவையாரிடம் தூது சென்றார். அப் பொழுது பரவையார் வீட்டு வாயிறபடியைக் கடந்து வீட்டுககுள் சென்றார். அவ்வாறு செல்லும் பொழுது அந்த வீட்டுக் க்தவுநிலை சிவனுடைய அடியையும் முடியையும் கண்டது. இந்தவீட்டு வாயிற்படியாகியிருந் தால அயனும் திருமாலும் சிவபெருமானுடைய அடியை யும் முடியையும் கண்டிருக்கலாமே என்று நகைச்சுவை ததும்பக் கூறித் தம் கற்பனையின் நுட்பத்தை நன்கு புலப்படுத்துகிறார் காளமேகப்புலவர். இனி அவருடைய கூற்றைப் படிப்போம்.

> "ஆனா ரிலையே யயனுந் திருமாலும்
> கானா ரடிமுடிமுன் காண்பதற்கு—மேனாள்
> இரவுதிரு வாரூரி லெந்தைபிரான் சென்ற
> பரவைதிரு வாயிற் படி."

சிவபெருமான் அடியார்க்கெளியனாயும், பிறர்க்கு அரியனாயுமுளன் என்பதையும் இவ்வெண்பா புலப் படுத்துகிறது.

பாரதம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்பன கூறும் வரலாறுகளை இணைத்துச் சிவபெரு

மானின் முதன்மையைப் புலப்படுத்திக் காளமேகப்புலவர் பாடிய செய்யுளைப் பாருங்கள்.

''வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பா லடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை யம்பலவாணற்கோரன்னைபிதா
இல்லாத தாழ்வல்லவோஇங்ங னேயெளி தானதுவே.''

அருச்சுனன் பாசுபதாத்திரம் பெறத் தவஞ் செய்த போது அவனைக் கொல்ல வந்த மூகாசுரனைக் கொன்று அருச்சுனனுக்கு அருள்புரியச் சிவபெருமான் வேடனாகிச் சென்று அருச்சுனனோடு போர்புரிந்தார். சிவபெருமானுடைய அம்பால் அருசசுனனது வில்லின் நாண் அறுந்தது. அதனைப் பொறுக்க முடியாது அருச்சுனன் வெகுண்டு வேடன் வடிவில் நின்ற சிவபெருமானை வில்லினால் அடித்தான்.

சிவபெருமானைச் செருப்பாலுதைத்தவர் கண்ணப்ப நாயனார். திருக்காளத்திச் சிவபெருமானுடைய வலக் கண்ணில் உதிரம் பெருகியதைக் கண்ட கண்ணப்பனார் துடித்துத் துன்புற்று அக்கண்ணில் தமது வலக்கண்ணை அகழ்ந்தெடுத்து அப்பினார். இரத்தம் நின்றது. பின் இடக்கண்ணில் இரத்தம் பெருகிற்று, இக்கண்ணுக்குத் தமது இடக்கண்ணையும் அகழ்ந்தெடுத்து அப்புவதற்கு எண்ணிச் செருப்போடு கூடிய தமது இடக்காலைத் தூக்கிச் சிவபெருமானின் இடக்கண்ணில் அடையாளம் காணுதற்காக ஊன்றிக் கொண்டு பின் தமது இடக் கண்ணைத் தோண்ட முயன்றார். அப்பொழுது சிவபெருமான் ''கண்ணப்பநில்'', ''கண்ணப்பநில்'' எனக்கூறி அவரைத் தடுத்தாண்டார்.

சிவபெருமானுக்குக் கல்லால் எறிந்தவர் சாக்கிய நாயனார். இவர் பௌத்த சமயத்தில புக்குப்பின் சிவ நெறியில் நின்றொழுகின தொண்டர். சிவலிங்கத்துக்குக் கல்லை எறிந்து வழிபட்டுச் சிவப்பேறு பெற்றவர்.

கண்ணப்ப நாயனார், சாக்கிய நாயனார் வரலாறுகளைப் பெரிய புராணத்தில் விரிவாகக் காணலாம்.

சிவபெருமான் பிரம்பால் அடிபட்ட வரலாறு திருவாத வூரடிகள் புராணத்திலும திருவிளையாடற் புராணத்திலும் மாணிக்க வாசகா வரலாறு கூறும் பிறநூல்களிலும் உளது. வையைக் கரையை அடைத்தற்கு செம்மனச் செல்வி எனும் பிட்டு வாணிச்சியின் கூலியாளாகிச் சிவ பெருமான் திருவிளையாடல் புரிந்தார். அம்மூதாட்டியின் பிட்டினை வயிறார உண்டு வேலை செய்யாது விளையாடினமையால் அரிமருத்தன பாண்டியன் எனும் அர ன் அவரைப் பிரம்பாலடித்தான்.

சிவபெருமான் தாய் தந்தை இல்லாத ஏழையாகையால் இவ்வாறு அடியும் உதையும் எறியும் பட்டார் என்றிரங்குவதன் மூலம் சிவபெருமான் பிறப்பு இறப்பு இல்லாதவர் என்பதையும் புலவர் எடுத்துக் காட்டுகிறார்.

காளமேகப் புலவருடைய இந்தப் பாடல் குறிப்பிடும் நிகழ்ச்சிகளை அடுக்கிக் கூறிச் சொக்கநாதப் புலவர் சிவ பெருமானை நோக்கி வேறொரு கேள்வி தொடுக்கின்றார்

சொல்லாரும் பொழில்புடைசூழ்
புலியூரம் பலவாண தேவாவும்மைக்
கல்லாலும் வில்லாலுஞ் செருப்பாலும்
பிரம்பாலுங் கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரென் றெண்ணியரு
ளீந்ததென்ன விகழ்ச்சியொன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக்
காய்ந்ததென்ன சொல்லுவீரே.''

இதுதான் அவருடைய பாடல். சினங்கொண்டு உம்மைச் சாடினவாகளான சாக்கியர், அருச்சுனன், கண்ணப்பர், அரிமர்த்தனபாண்டியன் முதலானோருக்கு அருள் செய்த புலியூர் அம்பலவாணரே உம்மைப்பழித்துக் கூறாமல் மலர்களை எறிந்தவனாகிய காமனை நீர் எரித்தது ஏன் என்று கூறுவீர் என்று புலவர் கேட்கின்றார்.

''காலனையுங் காமனையுங் காட்டுஞ்சிறுத் தொண்டர் தரு
பாலனையுங் கொன்ற பழிபோமோ - சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே நீர் திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக் கால்.''

இப்பாடல் திருச்செங்காட்டில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நோக்கிக் காளமேகப் புலவர் பாடியது.

மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த இயமனைச் சிவபெருமான் தம் காலால் உதைத்த வரலாற்றையும், தேவர்கள் வேண்டச் சிவபெருமானின் யோகநிலையைக் குழப்புதற்கு மலரம்புகளை எய்த மன்மதனை எரித்த வரலாற்றையும், சிறுத்தொண்டரின் அன்பின் திறனை உலகுக்குக்காட்ட எண்ணி அந்த நாயனாரைத் தம் மகனாகிய சீராளனைக் கொன்று கறியாகச் சமைக்கச் செய்த வரலாற்றையும் சுருக்கி "காலனையும் காமனையும் சிறுத்தொண்டர் தருபாலனையும் கொன்ற" எனப் புலவர் உரைக்கின்றார். இவற்றில் உண்டான பழி நீர் நாட்டை விட்டுக் காட்டிலே (திருச்செங்காட்டிலே) போயிருந்தால் நீங்கிவிடுமா? என்று புலவர் நகைச்சுவை ததும்ப வினவுகிறார்.

கண்ணப்பர், சிறுத்தொண்டர், அருச்சுனன், செம் மனச் செல்வி முதலானோருடன் சிவபெருமான் புரிந்த திருவிளையாடல்கள் புலவர் பலரின் கற்பனைக்கு விருந்தாயமைந்து விளங்குகின்றன. அன்றியும் இவை பட்டினத்தார் போன்ற அடியார்களையும் நினைந்து உருகச் செய்துள.

காளமேகப்புலவர் சொக்கநாதப்புலவர் என்போரைப் போலவே இராமச் சந்திர கவிராயரும் இந்தத் திருவிளையாடல்களை அமைத்து நயம் மிக்க பாடல் ஒன்றினைப் படைத்து நமக்குத் தந்துளர்.

'வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
 வாசல்தொறு முட்டுண்டதலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
 தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
 கொடுங்காலா லுதைத்தபுண்ணுங் கோபமாகப்
பஞ்சவரி லொருவன்வில்லா லடித்த புண்ணும்
 பாரென்றே காட்டி நின்றான் பரமன் றானே."

எனக்கு உண்டான புண்களைத் தீர்க்க எண்ணிச் சிவனிடம் சென்றேன். ஆனால் அவனோ என்னுடைய புண்களைப் பார் என்று காட்டினான் என்று கூறும் புலவரின் கற்பனை புதுமைமிக்கது.

"பிரம்படி" என்பது அரிமர்த்தன பாண்டியன் அடித்ததையும், "வேடன்" என்பது கண்ணப்பரையும்

''பஞ்சவரில் ஒருவன்'' என்பது அருச்சுனனையும் குறிக்கிறன.

அடுத்துப் பட்டினத்தார் பாடல் ஒன்றையும் ஈண்டு நோக்குவோம்.

''வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன்; மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன்; தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லன் நானினிச்சென்
றாளாவ தெப்படியோ? திருக் காளத்தி யப்பனுக்கே''.

வாளால் பிள்ளையை அரிந்துட்டினவர் சிறுதொண்ட நாயனார். மாது சொன்ன சூழுரையால் இளமை துறந்தவர் திருநீலகண்டநாயனார். கண்ணிடந்து அப்பினவர் கண்ணப்பநாயனார்.

இனி முருகனைப் பழிப்பதுபோலப் புகழ்ந்து காளமேகப்புலவர் பாடிய பாடலை நோக்குவோம். ஒருவருக்குப் பெருமை அளிப்பவற்றுள் சிறந்தது அவரது குடியேயாகும். முருகனுடைய தந்தைதாய் மாமன் தமையன் எல்லோரும் இழிவுடையர். இவ்வாறாயின் முருகனுக்குப் பெருமை எப்படி உண்டாகும?

''அப்ப னிரந்துண்ணி யாத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாம னுறிதிருடி —சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை யிவை''.

அப்பனான சிவபெருமான் இரந்து உண்பவன்' தாயான உமாதேவி கொடியவள். மாமனான திருமால் உறியில் வெண்ணெய் திருடுபவன். சப்பைக் காலையுடைய அண்ணனாகிய பிள்ளையார் பெருவயிற்றை உடையவன்—இவ்வாறு முருகனுடைய குடும்பத்தில் குறை காண்கிறார் புலவர் சிவபெருமான் பிச்சடானனாகிய வரலாற்றையும் உமாதேவியார் நீலநிறமுடையவராயிருப்பதையும் கண்ணன் உறியில் வெண்ணெய் திருடிய வரலாற்றையும் பிள்ளையாரின் பெருவயிற்றையும் பயன்படுத்தி இப்பாடலைப் புலவர் பாடியுள்ள அருமைப்பாடு வியப்புக்குரியது.

பிள்ளையாருடைய பெருவயிற்றில் காளமேகப் புலவருக்கு ஈடுபாடு மிகுதிபோலும்.

கம்பமத கடகளிற்றான் தில்லை வாழும்
    கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெல்லாம் விழித்திருந்தா ரயில்வேற் செங்கை
    உடையவறு முகத்தானுங்கண ஈரா றானான்
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண டான்மால்
    பயமடைந்தா னுமையுமுடல பாதியானாள்
அம்புலியைப் படைத்திடுவ தவம தேயென
    நயனு மன்ன மிறங்காம லலைகின றானே.''

என்று இந்தப் பெருவயிற்றினால் தேவர்களும் பிள்ளை யாருடைய குடும்பமும் அடைந்த துன்பத்தை அவர் தீட்டிக் காட்டுகிறார்.

தில்லையில் வாழும் பிள்ளையாருடைய பெருவயிற் றைக் கண்டு வருந்தித் தேவர்கள உறங்காமல் கண் விழித்துக் கொண்டிருந்தார்கள். ஆறுமுகனான முருகனும் கண்ணீர் ஆறாகப் பெருக்கினான். நெருப்புக் கண்ணனாகிய சிவன தாங்கமுடியாமல் நஞ்சை உண் டான். திருமால் அச்சம் அடைந்தான். உமாதேவி மெலிந்து பாதி உடம்புடையவரானார். பிரமனும் பூமியைப் படைப்பது வீண் என்று சோறும் இறங்காமல் அலைகின்றான்.

சிலேடையையும் புராணவரலாறுகளையும் பயன் படுத்தி இந்த ஓவியத்தைப் புலவர் வரைந்துள்ளர். தேவர்கள் இமைப்பதில்லை. எனவே அவர்கள் எப்பொழு தும் விழித்திருப்பவர்கள். கண்ணீராறானான் என்ப தற்குக் கண்ணீர ஆறானான் எனவும், கண் ஈராறு ஆனான் எனவும் இருபொருள் கொள்ளலாம். அமுது பெறப் பாற்கடலைக் கடைந்தபொழுது தோன்றிய ஆலகாலவிடத்தைச் சிவபெருமான் உண்டார் என்பது வரலாறு. பயம் அடைந்தான் என்பதற்குப பாற்கடலை அடைந்தான் எனவும் பொருள் கொளளலாம். சிவபெரு மான் உமாதேவியாருடன் சேர்ந்து மாதொருபாகனாகக் காட்சி தரும்போது உமாதேவியார் அவ்வுருவிற் பாதியாக விளங்குவார். 'அன்னம்' என்பது சோற்றுடன் அன்ன வாகனத்தையும் குறிக்கும்.

இப்பாடலைப் போலவே சாதியிற் குறைந்த குற மகளை முருகன் திருமணஞ் செய்துவிட்டான் என்று அவனுடைய குடும்பத்தினரும் தேவர்களும் அடைந்த

துன்பத்தையும் ஒருபாடலில் எடுத்துரைக்கின்றார் காளமேகப்புலவர்.

மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை
மணந்தா னென்றே
உருகியரன் நஞ்சுண்டா னுமையவளுந் தவம்புரிந்தா
ளுயர்மால் மேனி
கருகிமிக மண்டின்றான் கமலன்முகம் நாலானான்
கடவு ளோர்கள்
இருவிழியு மிமைமயா மிரவுபக லுறங்காம லிருக்கின்றாரே''

இதுதான் அப்பாடல். இப்பாடலிற் கூறப்படும் வரலாறுகள் பல முன்னர் விளக்கப்பட்டன. உமாதேவி தவஞ்செய்தவரலாறு காஞ்சிப்புராணத்தில் விரிவாக உரைக்கப்பட்டுளது. கயிலையில் உமாதேவியார் சிவபெருமானுடைய கண்களைத் தம் கைகளால் பொத்தினார். இதனால் உலகங்கள் இருட்டில் மூழ்கின. இத்தீவினையைப் போக்குதற்கு உமாதேவியாரைக் காஞ்சிக்குச் சென்று தவம் செய்யுமாறு சிவபெருமான் பணித்தார். உமாதேவியார் காஞ்சிக்கு வந்து முப்பத்திரண்டு அறங்களையும் செய்து சிவபெருமானை வழிபட்டார். கருப்பு நிறமுடைய திருமால் பூமியை உண்டான். பிரமன் முகம் நாலானான் என்பதற்கு முகத்தைத் தொங்கப்போட்டான் எனவும், நான்கு முகமுடையவன் எனவும் பொருள் கொள்ளலாம்.

''வீரஞ் சொரிகின்ற பிள்ளா யுனக்குப்பெண் வேண்டு
மென்றால்
ஆருங் கொடாருங்களப்பன் கபாலி யம்மான்றிருடன்
ஊருஞ் செங்காடு நின்முகம் யானை யுனக்கிளையோன்
பேருங் கடம்பனுன் றாய்நீலி நிற்கும் பெருவயிறே.''

இந்தப் பாடல் அந்தகக் கவிவீரராகவ முதலியாரின் படைப்பு. பிள்ளையாரே உனக்கு யாரும் பெண் கொடுக்க மாட்டார். உனக்கோ பெருவயிறு உளது. உன்முகம் யானைமுகம். உன் ஊர் செங்காடு. உன் குடும்பத்தவர் யாவரும் சிறுமையுடையவர்கள். உன் தந்தையான சிவன் ஓட்டை ஏந்துபவன். உன்தாயான உமைநீலி. உன்மாமன் திருமால் வெண்ணெய்திருடி. உன்தம்பி பெயரோ கடம்பன். கடம்பன் என்பது முரடன் என்பதையும் கடம்பமலர் மாலையணிந்தவன் என்

பதையும் குறிக்கும். நீலி கொடியவள் என்பதையும் நீல நிறமுடையவள் என்பதையும் குறிக்கும். கபாலத்தை ஏந்துபவன் கபாலி.

வேல் கொடுத்தாய், கால் கொடுத்தாய், பால் கொடுத்தாய், செங்கோல் கொடுத்தாய் எனக்கு ஏதும் கொடுத்திலையே என உமாதேவியாரைக் கேட்கும் பாடல் படிப்போர் உள்ளத்தை உருக்குந்தகையது.

"வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாயரன் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்குமூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாயன்னை யேயெனக் கேதுங்
கொடுத்திலையே."

இப்பாடலைப் பாடியவர் பொற்களந்தைப் படிக்காசுத்தம்பிரான். திருச்செந்தூரர் என்பது திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகனையும், அரன் மணவாளன் என்பது சிவபெருமானாகிய மணமகனையும், கவுணியர் என்பது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரையும், மதவேள் என்பது மன்மதனையும் குறிக்கின்றன.

ஒரு பெரியாரிடம் தங்கள் குறைகளைக் கூறி உதவி பெற எண்ணுவோர் அவருக்கு மிக வேண்டியவர்களைத் தேடிப்பிடித்து அவர்கள் மூலம் தங்கள் குறைகளை அப்பெரியாருக்கு அறிவிப்பது பெருவழக்கு. இரண்டொருவருடைய வேண்டுகோளை எப்பெரியாரும் ஏற்பதை நாம் நாடோறும் காணலாம். அப்பெரியாரிடம் இத்தகைய செல்வாக்கு உடையவர்கள் அவருடைய நண்பர்களாகவோ பெற்றோராகவோ மனைவி மக்களாகவோ இருக்கலாம்.

சிவபெருமானிடம் தம்குறைகளைச் சொல்லுமாறு பலபட்டைச் சொக்கநாதப்புலவர் திருநெல்வேலியில் எழுந்தருளியிருக்கும் வடிவாம்பிகையை வேண்டுகின்றார்

படுக்கையிலிருந்து சிவபெருமான் முத்தந்தா என்று கொஞ்சும் நேரத்தில் சொன்னால் என்ன? என்று அவர் வடிவன்னையைக் கேட்கிறார். இந்த அமயத்தைவிடப் பொருத்தமான அமயத்தை-மறுக்க முடியாத அமயத்தை எவரும் கூற முடியுமா?

''ஆய்முத்துப்பந்தரின் மெல்லணை மீதுன் னருகிருத்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்த நித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெ லாமெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவன்னையே.''

முத்துக்களை அடுக்கி வாய்முத்தஞ் சொரிந்திடுமோ என்று வினாவிப் புலவர் பாடலை உருவாக்கியிருக்கும் திறப்பாடு அவருடைய பெரும்புலமையை நன்கு புலப் படுத்துகிறது.



பேராசிரியர் **கா. பொ. இரத்தினம்** யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலணை எனுமூரில் பிறந்தவர். 'பண்டிதர்' 'வித்துவான்' பட்டங்களுடன் இலண்டன் பல்கலைக் கழகத்தின் பி. ஏ., (ஆனர்சு) சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல்., எம்.ஏ., பட்டங்களையும் பெற்றவர். தமிழகப் புலவர் குழு இவருக்குத் **"தமிழ்ச் சான்றோர்"** எனும் பட்டத்தை வழங்கிச் சிறப்புச் செய்தது. **'செந்தமிழ்க்கலைமணி'**, **'திருக்குறள் செல்வர்'** எனும் பட்டங்களையும் பெற்றவர்.

கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் 12 ஆண்டுகள் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றியவர். இலங்கை அரச கருமத் திணைக்களத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக ஆறாண்டுகளுக்கு மேல் பணியாற்றிப் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட ஆட்சிச் சொற்களை வெளியிடுவதற்குப் பொறுப்பாயிருந்தவர். மலேசியாப் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றியவர்.

1965ஆம் ஆண்டு தொடக்கம் **இலங்கைப் பாராளுமன்றத்தில்** உறுப்பினராகப் **18** ஆண்டுகள் தொடர்ந்திருந்து தமிழ் மொழி உரிமைக்கும், தமிழின விடுதலைக்கும், தமிழ் ஈழக் குறிக்கோளுக்கும் அஞ்சாமலும் அசையாமலும் அயராமலும் பேராடினவர்.

திருக்குறள் **தமிழரின்மறை — தமிழ்மறை** என்பதை நிலை நாட்டுதற்கு 1952இல் **தமிழ்மறைக் கழகத்தை** நிறுவி, அதன் ஆயுள் தலைவராக இருந்து பலதுறைகளிற் பகர்வரும் பணிகள் செய்துவருகிறார். உலகமெங்குமுள்ள தமிழருடன் தொடர்பு கொண்டு **உலகத் தமிழ் மன்றததை** 1963இல் கோலாம்பூரில் **நிறுவிப்** பதிவு செய்து அதன் தலைவராகப் பல ஆண்டுகள் பணி செய்தவர்.

தமிழ் வழங்கும் நாடுகளிலுள்ள ஏடுகள் பலவற்றிலும் சிறப்பு மலர்களிலும் இவருடைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பல நாடுகளுக்குச் சென்று தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றியவர். பதினறுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். சைவ நெறியை மாசுபடுத்துபவற்றை நீக்கி மாண்புமிகு தனிப் பெரு நெறியாகப் - பாடல் நெறியாக—ஆக்குதற்கு அஞ்சாமலும் அசையாமலும் முயல்பவர்.